# ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பு

## (D.El.Ed.)

### பாடப்பிரிவு 503

## தொடக்க நிலையில் மொழிகளைக் கற்றல்

*தொகுதி 3*

*வகுப்பறையில் மொழி கற்றல்*

**தேசிய திறந்த நிலைப் பள்ளி நிறுவனம்**

(MHRD கீழ் செயல்படும் தன்னாட்சி நிறுவனம், இந்திய அரசு)

A 24-25, நிறுவனத்தின் அமைவிடம், கிளை - 62, நொய்டா 201309. (உ.பி.)

**www.nios.ac.in**

# முன்னுரை

இந்த இயலானது தங்களுக்கு மொழியின் பல்வேறு நோக்கங்களை கற்பிக்கும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த இயலைக் கற்றபின் தங்களிடம் உள்ள மொழி ஆர்வம் மேம்படுவதுடன் நீங்கள் ஓர் ஆர்வமிக்க கற்போராக மாறுவீர்கள் என்று நினைக்கிறேன். மேலும் மொழிப்பாடத்தை மகிழ்ச்சிகரமாகவும், திறமையாகவும் கற்பிப்பீர்கள் என்று நம்புகிறேன். இயல் 1 : மொழியின் இயல்பு, மொழியின் பயன்பாடு மொழியின் சமூக மற்றும் உளவியல் பண்புகளைப் பற்றி விவரிக்கிறது. இயல் 2 : இந்தியாவின் பன்மொழிப் பண்பினையும், பல்வேறு மொழிகள் கொண்ட ஒரு நாடு ஒற்றுமையான நாடாக விளங்க மொழி ஒரு வளமாக எங்ஙனம் விளங்குகிறது என்பதை விவரிக்கிறது.இயல் 3: மொழியைக் கற்றுக் கொள்ளும் முறை மற்றும் மொழியைக் கற்பிக்கும் முறைகளைக் குறித்து விவரிக்கிறது.

குழந்தைகள் மொழியைக் கற்றுக் கொள்ளும் வண்ணம் எண்ணிலடங்கா திறன்களுடன் பிறக்கின்றனர். குழந்தைகளுக்கு 3 அல்லது 4 வயதாகும் போது மொழியைத் திறம்பட பயன்படுத்தத் தொடங்குகின்றனர். அவர்கள் மொழியின் பயன்பாட்டை நன்றாக உள்வாங்கிக் கொண்டதை நமக்கு உணர்த்தும் வண்ணம், குறுகிய காலத்திற்குள் புதிய சொற்களைப் புரிந்து கொள்ளவும் உருவாக்கவும் செய்கிறார்கள். குழந்தைகள் சிறு வயதிலேயே பல்வேறு சிக்கலான இலக்கண அமைப்பு கொண்ட சொற்றொடர்களைக் கூட எளிதாகப் புரிந்து கொள்வது வியப்பூட்டுவதாக உள்ளது. குழந்தைகள் உலகளாவிய இலக்கண அறிவைப் பெற்றிருக்கிறார்களா என்பதை நாம் விரிவாகக் காண்போம். மொழிக் கற்பிப்பதில் இலக்கணத்தின் பங்கு என்ன என்பதைப் பற்றியும், இலக்கண மொழி மாற்ற முறை, நேரடி மொழிக் கற்பித்தல் முறை, ஒலி வழி மொழிக் கற்பித்தல் முறை, தகவல் பரிமாற்ற முறை போன்ற முறைகளிலுள்ள நிறைகள் மற்றும் குறைகள் குறித்தும் விவரிக்கப்பட்டுள்ளதை நாம் கற்றுக் கொள்வோம். இயல் 4 : ஒலி வழி மொழிக் கற்பித்தல் முறை பற்றி விரிவாக எடுத்துரைக்கிறது.

**சேர்மன், NIOS**

# தொகுதி 3

# மொழி கற்றலின் தொடர்புடைய திறன்கள்

## அலகுகள்

| | | |
|---|---|---|
| அலகு | 7 | இலக்கியமும் மொழயும் |
| அலகு | 8 | வகுப்பறையில் மொழிப்பாடம் கற்பிக்கும் முறைகள் |
| அலகு | 9 | கல்வி சார் பொருட்கள் : சில புதிய பரிமாணங்கள் |
| அலகு | 10 | மதிப்பீடு |

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| அலகு | 7 | இலக்கியமும் மொழியும் | 1 |
| அலகு | 8 | வகுப்பறையில் மொழிப்பாடம் கற்பிக்கும் முறைகள் | 29 |
| அலகு | 9 | கல்வி சார் பொருட்கள் : சில புதிய பரிமாணங்கள் | 67 |
| அலகு | 10 | மதிப்பீடு | 92 |

# அலகு 7

# இலக்கியமும் மொழியும்

குறிப்புகள்

7.0 அறிமுகம்

7.1 கற்றல் நோக்கம்

7.2 இலக்கியப் பகுதிகள்

7.3 மொழி கற்பித்தலில் இலக்கியத்தின் பங்கு

7.3.1 இலக்கியம் என்றால் என்ன?

7.3.2 இலக்கியத்தின் வடிவங்கள்

7.3.3 மொழி கற்பித்தலில் இலக்கியத்தின் பங்கு வரலாற்று கண்ணோட்டம்

7.4 இலக்கியம் கற்பித்தலின் நோக்கங்கள்

7.4.1 வகுப்பறையின் வகைகள்

7.4.2 முதல்மொழி/இரண்டாம் மொழி/ அயல்மொழி வகுப்பறை

7.4.3 இலக்கியத்தின் மூலம் பல்வேறு திறன்களை வளர்த்தல்.

7.5.1 தொடக்க மற்றும் உயர் தொடக்க வகுப்புகளுக்கான அடிப்படை வடிவங்கள்

7.5.2 வகுப்பறையில் இலக்கியத்தைப் பயன்படுத்தும் விதம்

7.5.3 வகுப்பறைச் சவால்கள் வகுப்பறையில் எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள்

7.6 தொகுப்புரை

7.7 பரிந்துரைக்கப்பட்ட புத்தகங்களும் மேற்கோள்நூல்களும்

7.8 பயிற்சிகள்

## 7.0 அறிமுகம்

மொழிக்கற்றலில் இலக்கியத்தின் பங்கினை இவ்வலகில் காண்போம். பெரும்பாலான தொடக்கப்பள்ளிகளில் இலக்கியம் தனிப்பாடப்பிரிவாகக்

குறிப்புகள்

கருதப்படுவதில்லை. மொழிப்பாடத்தில் இலக்கியம் உள்ளடங்கியுள்ளது. எல்லா மொழிப்பாடப்புத்தகங்களிலும் கதைகள், பாடல்கள் மற்றும் கட்டுரைகள் இருப்பினும் மொழித்திறன் அடைவதில் அவற்றின் தேவை மற்றும் பங்கு போன்றவை வினாக்குறியாக உள்ளது. ஆகவே இந்த அலகில இலக்கியம் என்றால் என்ன? குழந்தை இலக்கியம் என்பது யாது? வகுப்பறையில் எவ்வாறு அதனைப் பயன்படுத்துவது? என்னென்ன குறிக்கோள்களை அது நிறைவேற்றும்? என்ற கருத்துக்களின் கீழ் கலந்துரையாடலாம்.

## 7.1 கற்றல் நோக்கங்கள்

இந்த அலகானது,

- இலக்கியத்தின் வகைகள் மற்றும் வடிவங்கள் பற்றி அறிதல்
- மொழியைக் கற்றுக் கொள்வதில் இலக்கியத்தின் பங்கு பற்றி ஆராய்தல்
- தொடக்க மற்றம் உயர்தொடக்க வகுப்புகளில் எதன் அடிப்படையில் இலக்கியத்தைத் தேர்வு செய்வது என்பதைப் புரிந்து கொள்ளுதல்.
- இலக்கியத்தைக் கற்பிப்பதில் உள்ள சிக்கல்களை அடையாளம் காணுதல்.
- இலக்கியம் கற்பித்தலில் ஆசிரியரின் பங்கினைத் தெளிவுபடுத்திக் கொள்ளுதல்

ஆகியனவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

## 7.2 இலக்கியப் பகுதிகள்

இலக்கிய வழக்கானது சாதாரண வழக்கிலிருந்து வேறுபட்டது. ஏனெனில் அது அழகு மற்றும கலையுணர்வுள்ள உவமை, உருவகம், வஞ்சப்புகழ்ச்சி, மோனை, இயைபு, உயிரளபெடை, ஒற்றளபெடை உள்ளிட்ட பலவகையான பிரிவுகளை உள்ளடக்கியது. இவற்றுள்; சிலவற்றைக் காணலாம்.

1. **உவமை** (Simile) : உவமை என்பது ஒரு பொருளோடு மற்றொரு பொருளை ஒப்புமைப்படுத்திக் கூறுவது ஆகும். உவமை நான்கு கூறுகளில் அமையும். எடுத்துக்காட்டாக ‘அ’ மற்றும் ‘ஆ’ ஆகியவை ஒப்பிடப்படும் இரு பொருள்கள் ‘இ’ என்பது எதன் அடிப்படையில் இரு பொருள்களும் ஒப்பிடப்படுகின்றன என்பதைக் குறிக்கும். நான்காவது உட்கூறு இம்மூன்றிற்கும் உள்ளத் தொடர்பை குறிக்கும் சொல்லாக அமையும். (எடுத்துக்காட்டு) ‘மதியைப்போன்ற முகம்’

இதில் 'அ', 'மதி' (நிலவு) 'ஆ' 'முகம்'! ஆகிய இரண்டினைக் குறிக்கின்றன. 'இ' பொதுவான பண்பாகிய அழகைக் குறிக்கும். 'ஈ" இவற்றை இணைக்கும் "போல" என்னும் தொடர்புச்சொல்லாக வரும்.

2. **உருவகம்** **(Metaphor)** : உருவம் என்பது முற்றிலும் வேறுபட்ட இரண்டு பொருள்களை ஒன்றுபடுத்திக் கூறுவது ஆகும். இதில் தனித்தன்மையுடைய ஒற்றுமை சுட்டிக்காட்டப்படுகிறது. உதாரணமாக 'அ' 'ஆ' இரு சொற்றொடர்களைப் பார்க்கலாம்.

(அ) ஒட்டகங்கள் பாலைவனத்தில் காணப்படுகிறன்றன.

(ஆ) ஒட்டகம் பாலைவனக் கப்பல் என அழைக்கப்படுகிறது.

இதில் 'அ' சொற்றொடரில் உருவகம் இல்லை. ஆனால் 'ஆ' சொற்றொடரில் உருவகம் உள்ளது. நாம் ஒட்டகத்தை நினைக்கும்போது கப்பலை நினைவு கூர வாய்ப்பில்லை ஆனால் இங்கு ஒட்டகமானது; கப்பல் எனக்கூறப் படுகிறது. இது வியப்பானது. கப்பல் கடலில் செய்யும் பணியை ஒட்டகம் பாலைவனத்தில் செய்வதாக குறிப்பிடப்படுகிறது. சில உருவகங்கள் காலப்போக்கில் வழக்கொழிந்து போகின்றன. ஆனால் அவை நம் அன்றாட பேச்சுவழக்கில் பயன்படுத்துவதால் உருவகத்தாக்கத்தை வழங்கி வருகின்றன. உதாரணமாக நாய், பூனைகள் காட்டில் மழை. படியேறி வந்தால் பணம்மிச்சம்.

3. **மோனை** **Alliteration:** மோனை என்பது செய்யுளில் உள்ள அடிகளில் அல்லது சீர்களில் முதல் எழுத்து ஒன்றி வருவதாகும்.

(எ.கா) 'தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அ...சப்படும்

ஒற்றளபெடை **Consonance :** ஒரே மெய்யெழுத்தானது இரண்டுமுறை அடுக்கிவரின் அதனை ஒற்று அளபெடை என்று அழைக்கிறோம்.

(எ.கா) இலங்கு வெண்மதி. விளங்கு பொன்மலர்.

**உயிரளபெடை** **Assonance :** செய்யுளில் ஓசை குறையும்போது ஓசையை நிறைவு செய்வதற்காகவும் இனிய ஓசையைத் தருவதற்காகவும் ஒரு சொல்லை மற்றொரு சொல்லாக மாற்றுவதற்காகவும் உயிர் நெட்டெழுத்துகள் தமக்கு இனமான குற்றெழுத்துகளோடு அளபெடுக்கும்.

(எ.கா) "கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை".

4. **வஞ்சப்புகழ்ச்சி** **(Irony)** : புகழ்வது போலப் பழிப்பதும் பழிப்பதுபோல புகழ்வதும் 'வஞ்சப்புகழ்ச்சி' ஆகும். (எ.கா) வாகன ஓட்டுநர் தவறிழைக்கும் போது, அவரை நேரடியாகக் கடிந்து கொள்ளாமல்

குறிப்புகள்

புகழ்வதுபோல, 'ஐயா', 'கனம் ஓட்டுநர்' அவர்களே என உயர் அலுவலர் அழைப்பது ஆகும். இதில் கருத்தை வெளியிடுவர் தாம் சொல்ல நினைப்பதை எதிர்மறையாகக் குறிப்பிடுவது இதன் சிறப்பு ஆகும்.

5. **சிறப்புப் பெயரிடுதல் (Allusion) :** ஒரு நபர் அல்லது ஒரு பொருளைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையிலோ அல்லது எழுதுகையிலோ ஏதேனும் ஒரு தனித்துவமிக்கத் தன்மையைச் சிறப்பித்துக் கூறுவது சிறப்புப் பெயரிடுதல் ஆகும். எடுத்துக்காட்டாக சர்தார் வல்லபாய் பட்டேலின் உள்ளம் உறுதிமிக்க தன்மையைக் குறிக்க 'இரும்பு மனிதர்' என்று குறிப்பிடுவதாகும்.

6. **உயர்வு நவிற்சி Hyperbole :** சில வேளைளில் கவிஞர்களும், எழுத்தாளர்களும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளையோ, ஒன்றின் சிறப்பையோ குறிப்பிடுகையில் அதனை மிகைப்படுத்திக் குறிப்பிடுவர். இதுவே உயர்வு நவிற்சி எனப்படும்.

(எ.கா)

- மலையினை ஒத்த வயதினர் முனிவர்
- வானளாவிய கோபுரம் / மலை.

7. **இயைபுத் தொடைகள் (Rhyme) :** ஒரே செய்யுளில் ஒத்த இணையான ஒலிகள், சொற்கள் அடிகளின் இறுதியில் மீண்டும், மீண்டும் வருவது இயைபு எனப்படுகிறது. இதனைப் பின்வரும் பாடலில் காணலாம்.

"மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்.
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்". (பாரதியார்)

மேற்காண் பாடலில் வேண்டும் என்ற சொல் எல்லா அடி இறுதியிலும் தொடர்ந்து வருவது இதற்குச் சான்றாகும்.

8. **மானிட உருவகம் Personification (மனிதப்பண்பு உருவகம்):** கவிதை, கட்டுரைகளில் இயற்கை மற்றும் விலங்குகளைக் குறிப்பிடுகையில் கவிஞர்களும் எழுத்தாளர்களும் சில வேகைளில் சிறப்புத் தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு அவற்றின்மேல் மனித இயல்புகளை ஏற்றிக் கூறி உருவகப்படுத்துதல் மானிட உருவகம் ஆகும். எடுத்துக்காட்டாக ஒரு கவிஞர்

'காற்று எழுந்து நின்றது"......"

என்னைக் கேட்டது ......."

எனக் குறிப்பிடும்போது காற்றிற்கு ஒரு சிறந்த மனிதத் தன்மை (நிற்றல், பேசுதல்) தந்து உருவகம் செய்திருக்கிறார் என்பது புலனாகிறது.



குறிப்புகள்

**9. சின்னம்** **Symbols :** ஒரு பொருள் அல்லது ஒரு நபர் அல்லது ஒரு செயலை நேரடியாகக் குறிப்பிடாமல் மற்றொன்றின் வழி குறிப்பிடுவது சின்னம் அல்லது குறியீடு ஆகும்.

எடுத்துக்காட்டாக: புறாவடிவம் அமைதியைக் குறிக்கும்.

| | |
|---|---|
| சாலையைக் கடக்கையில் சிவப்பு வண்ண விளக்கு ஒளிர்தல். | நிற்க |
| பச்சை வண்ணவிளக்கு ஒளிர்தல் | செல்க |
| மஞ்சள்; வண்ணவிளக்கு ஒளிர்தல் | கவனி |

எனும் கட்டளைகளைக் குறிக்கும்.

இவற்றிலிருந்து கவிதைகளையோ கதைகளையோ படிக்கிறபோது மேற்காண் இலக்கிய உட்கூறுகளை ஆய்ந்தறிந்து அவை கற்போர் பால் ஏற்படுத்தும் தாக்கத்தினை உணரலாம்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 1**

1. உருவகம், குறியீடு, மானிட உருவகம் இவற்றின் வேறுபாடுகளை கூறுக.

...............................................................................................................

...............................................................................................................

...............................................................................................................

2. கீழ்க்கண்டவற்றில் உவமை, உருவகம் மற்றும் சிறப்புப் பெயரிடுதல் எவை என பிரித்துக் கூறவும்.

(அ) என் அன்பு சிவந்தது, சிவந்த ரோஜா மலரைப் போன்றது.

(ஆ) மோனலிசாவின் சிரிப்பைப் போன்றது அவளது சிரிப்பு.

(இ) வாழ்க்கை என்பது போராட்டமே.

(ஈ) அவன் முதல் இரண்டு போர்களில் வெற்றி பெற்றாலும் “வாட்டர்லூ” என்னுமிடத்தில் நடந்த மூன்றாவது போரில் தோல்வி அடைந்தான்.

(உ) அவர்கள் தாயே அவர்களின் பலம்

குறிப்புகள்

(ஊ) அவள் தூணைப்போன்று நகராதவள்

(எ) அவள் கணிதத்தில் திறமை பெற்றிருந்தாலும் மொழிப்பாடத்திலும் புலமை பெற்றிருந்தாள்.

3. நீவிர் படித்த செய்யுளிலிருந்து மானிட உருவகத்திற்குச் சில எடுத்துக்காட்டுகளைத் தருக.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

4. நீவிர் படித்த செய்யுள்களில் பயின்றுவரும் இயைபுத் தொடையை எழுதுக.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

5. குரங்கு - குறங்கு இதுபோன்று ஒலிப்புடைய வேறு மூன்று - உதாரணங்கள் தருக.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

6. பல்லும் சொல்லும் இதுபோன்று ஒலிப்புடைய வேறு இரட்டை ஜோடி வார்த்தைகளை சிந்தித்து எழுதுக.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

7. சரியானதைத் தேர்ந்தெடுக்க:

தம்பியும், தங்கையும் தக்காளியைத் தட்டில் வைத்துத் தட்டித், தட்டித் விளையாடினர். இதில் பயின்று வந்துள்ளது

அ) உயிரளபெடை ஆ) ஒற்றளபெடை இ) மோனை


குறிப்புகள்

## 7.3 மொழிப்பாடம் கற்பித்தலில் இலக்கியத்தின் பங்கு

### 7.3.1 இலக்கியம் என்றால் என்ன?

இலக்கியத்தின் பொதுவான பொருள், வார்த்தைகளை உபயோகித்து பொருளை வெளிப்படுத்துவது ஆகும். ஆனால் வரலாறு, புவியியல், அறிவியல் போன்ற பாடங்களிலுள்ள பாடப்பொருள்களிலும் பொருள் பொதிந்த வார்த்தைகள் காணப்படுகின்றன. எனவே ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு இலக்கியம் உண்டு. அது அந்த பாடம் எதைப்பற்றியது என்பதைக் குறிக்கிறது. உதாரணமாக சமையல் என்னும் இலக்கியம் ஒரு குறிப்பிட்ட உணவை (dish) தயாரிப்பதிலுள்ள படிநிலைகளை விவரிக்கிறது. மேலும் இலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்டப் பாடத்தினை பற்றிய முழுமையான, விவரமான தகவல்களை உள்ளடக்கியது. மற்ற இலக்கியங்களை விட மொழி இலக்கியம் முற்றிலும் வேறுபட்டது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இதில் வார்த்தைகளுக்கும், பொருளுக்கும் உள்ள தொடர்பு எளிதானதோ, நேரிடையானதோ இல்லை. இது கலை நயம் சார்ந்தது. எல்லா மொழிகளின் இலக்கியங்களும் அந்தந்த காலம் மற்றும் சமுதாயத்தினைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகிறது. அது உண்மையான மற்றும் கற்பனையைப் படம் பிடித்துக் காட்டுகிறது ஒரு குறிப்பிட்டக் காலக்கட்டத்தில் மற்றும் இடத்திலுள்ள மக்களின் மனோபாவங்களை கலை நயத்துடன் சுட்டிக் காட்டுகிறது இது உலகளவில் மனித மாண்புகளை வெளிப்படுத்துவது ஆகும்.

செய்யுள், புதினம், நாடகம் போன்ற எவ்வகையான இலக்கியப் பிரிவுகளானாலும் அவற்றில் சமூக அழகுணர்வு மற்றும் உலகளவில் பரிமாணங்கள் உள்ளன. உள்ளூர் மக்களின் பாரம்பரியம் மற்றும் விழாக்களின் மூலமாக வாழ்வின் நுணுக்கங்கள் சமூகப் பார்வையாக வெளிப்படுகிறது. கட்டுரையை வாசிப்போரின் மனதில் எழும் உணர்ச்சிகள் மற்றும் அதில் கையாளப்பட்டுள்ள ஒலி, வார்த்தை மற்றும் வார்த்தை அமைப்புகள் அழகுணர்வைக் காட்டுகின்றது. எல்லாக் காலங்களிலும் நம்முடன் நிலைத்திருக்கக் கூடிய நற்பண்புகளான உண்மை, அழகுணர்வு போன்ற உலகளாவிய பண்புகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. இவ்வாறாக எல்லாவகையான இலக்கியங்களும் நோக்கங்களின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றது.

1. **தகவல் இலக்கியம்:** இது நாம் அறியாத தகவல்களைத் தரும் கலைக்களஞ்சியம், அகராதிகள், உச்சரிப்பு அகராதி போன்ற மேற்கோள் நூல்களை உள்ளடக்கியது. இவை மிகவும் பயனுள்ளவைகளாக இருப்பினும் இதனை முழுமையான இலக்கியம்

குறிப்புகள்

என்று கூற இயலாது. ஏனெனில் அழகுணர்வு மற்றும் உலகளாவியப் பரிமாணங்கள் இவைகளில் இல்லை.

2. **விமர்சன இலக்கியம்:** இவ்வகையில் ஒரு குறிப்பிட்ட பாடப்பிரிவு தர்க்க ரீதியில் அலசி ஆராயப்பட்டு பொருள்களின் காரண விளைவுகள் பயன்படுத்தப்படுகின்றன. வாசிப்போரை இக்கட்டுரைகள் மேலும் பல கண்டுபிடிப்புகளுக்கு உற்சாகப்படுத்துகிறது. (எ.கா) தத்துவ புத்தகங்கள்; அறிவியல் மற்றும் கணிதம்.

   மேலே குறிப்பிட்ட இரண்டு வகையான இலக்கியங்களும் அழகுணர்வில்லாத இலக்கியங்கள் இவைகளில் மற்றம் பிரச்சனை களுக்குத் தீர்வுகாணுதல் போன்றவற்றிற்கு முக்கியத்துவமளிக்கப் படுகிறது. மூன்றாவது வகையான இலக்கியத்தையே உண்மையான இலக்கியம் என நாம் கூறலாம்.

3. **படைப்பு இலக்கியம் அல்லது கற்பனை இலக்கியம்:** இந்த வகையின் கீழ் ஈடுபாட்டுடனும் மகிழ்ச்சியுடனும் வாசிக்கத் தூண்டும் செய்யுள், நாடகம், புதினம், இதிகாசம், சிறுகதைகள் போன்றவை அடங்கும். இவைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கதாபாத்திரங்களைப் போன்று உணர்ந்து கொள்ளும் வாய்ப்பை அளிக்கின்றன. இவை மனித நேயம் மற்றும் கற்பனைத்திறன் மேம்பட வாசிப்போரை உற்சாகப் படுத்துகிறது. மொழிக்கற்றலில் வெவ்வேறு வகையான இலக்கிங்களின் பயனும், பங்களிப்பும் உள்ளது என்பதை இந்த அலகு விவரிக்கின்றது.

தாய் மொழியாயினும் ஆங்கிலமாயினும் பாடப்புத்தகங்களே இலக்கியத்தின் மூல ஆதாரங்களாக உள்ளன. பள்ளிகளில் குறைவான நேரம் மற்றும் வளங்கள் இருப்பதனால் மாணவர்களுக்குப் பாடப்புத்தகத்தில் இருப்பதை விட வேறு கருத்துக்களை வழங்க இயலவில்லை. ஆகவே ஆசிரியர் கீழே குறிப்பிட்டுள்ள கருத்துக்களை நினைவிற்கொண்டு பொருத்தமான இலக்கியங்களை தேர்ந்தெடுத்தல் அவசியம். இலக்கியத்தைத் தேர்வு செய்ய சில வழிமுறைகள் பின்வருமாறு.

- மிகக் கவனமாக மொழி கையாளப்பட்ட பொருத்தமான அளவிலுள்ள பாடங்கள் தேர்ந்தெடுத்தல் அவசியம். உருவகங்கள், சிலேடைகள,; புதுமையான மொழி பயன்பாடு ஆகியவை சிறப்பாக அமைந்திருக்க வேண்டும்.
- பாடப்புத்தகம், உரைநடை, செய்யுள், நாடகம் புதினம் போன்ற ஏதாவது ஒரு வடிவத்தில் இருக்கலாம்.
- அது மாணவர்களுக்கு அழகுணர்வையும் அனுபவத்தையும் சந்தோஷத்தையும் தருவதாக இருக்க வேண்டும்.

குறிப்புகள்

மேற்கண்ட வழிமுறைகள் மிகவும் கண்டிப்பாக பின்பற்றவேண்டிய அவசியம் இல்லை. பாடப்புத்தகம் இலக்கியம் என்ற தகுதியைப் பெற்றுள்ளதா என்பதை ஆசிரியர் கண்டறிய இது பயன்படுகிறது. நல்ல இலக்கியத்தின் தனமையை அறிந்திருந்தாலும் எது நம் வகுப்பறைக்கு ஏற்றது என்பதை ஆசிரியர் தீர்மானிக்க வேண்டும். மாணவர்களின் வயது நினைவில் கொள்ள வேண்டியது அவசியமானதாகும். குழந்தைகளுக்கு எற்ற பாடபுத்தகத்தை நாம் இனி 'குழந்தைகள் இலக்கியம்' என்ற பதத்தில் அழைப்போம்.

குழந்தைகள் இலக்கியத்திற்கான எடுத்துக்காட்டுகளில் முக்கியமான கதாப்பாத்திரம் குழந்தைகளே. தேவதைக் கதைகளான லிட்டில் ரெட் ரைடிங் ஹீட் அல்லது ஆர்.எஸ் ஸ்பிலென்ஸன் எழுதிய புதினங்களான கிட்னாப்ட் மற்றும் ட்ரஹர் ஜலாண்ட்ல் ஒரு குழந்தையே மையமாக உள்ளது. ஆனால் ஒரு குழந்தை முக்கியமான கதா பாத்திரமாக இருப்பதால் அந்தக் கதையை நாம் தேர்ந்தெடுக்க இயலாது. நிறைய கதைகளில் குழந்தைகள் முக்கிய காதாபத்திரமாக இருப்பினும் அதில் வரும் 'யோசனை' மிகவும் சிக்கலானதாக இருக்கும். பிரேம் சந்தின் 'இட்கா, செய்சங்கர் பிரசாதின் சோட்டா ஜாதுகர் ஜேயேந்திராவின் 'கேல்' போன்றவைகளில் உள்ள எண்ணங்கள் குழந்தைகளால் புரிந்து கொள்ள கடினமானவை.

இந்த அலகில் நாம் மொழி கற்றலின் இலக்கியத்தின் பங்கினை முதன்மைப்படுத்துகிறோம். எனினும் இலக்கியம் என்ற வரையறையில் வராத விளம்பரங்கள், கேலிச்சித்திரம் போன்றவையும்; மொழிக் கற்றலில் மிகவும் பயன்படுகிறது.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 2**

1. அழகிய இலக்கியம் மற்றும் அழகியல் அல்லாத இலக்கியம் வேறுபடுத்துக.

   ..................................................................................................

   ..................................................................................................

   ..................................................................................................

2. குழந்தைகள் இலக்கியம் என்பதை எவ்வாறு வரையறுப்பாய்? ஆதை ஆறு முதல் பதினான்கு வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கிடைக்கும் எழுதப்பட்ட பொருள் எவை என விவரிப்பாயா?

   ..................................................................................................

   ..................................................................................................

   ..................................................................................................

குறிப்புகள்

3. குழந்தைகளைப் பற்றிய அனைத்து கதைகளும் குழந்தைகள் இலக்கியமாகுமா? உன் பதிலை உறுதிப்படுத்த எடுத்துக்காட்டுகள் தருக.

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

4. கீழ்கண்டவை இலக்கியத்திற்கு எடுத்துக்காட்டுகளா அல்லவா என்பதை தீர்மானிக்கவும்.

a) செய்தித்தாள் விளம்பரங்கள்

b) அகராதி

c) கேக் செய்முறை

d) செய்யுள்

## 7.3.2 இலக்கிய வடிவங்கள்

வாழ்க்கையின் சமுதாயம், பண்பாடு மற்றும் அழகியல் அம்சங்களை குழந்தைகளுக்கு உணர்த்த வகுப்பறையில் வெவ்வேறு இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்துகிறோம். குழந்தைகளின் திறமை நிலைகளை மேம்படுத்த வெவ்வேறு வகையான இலக்கியங்களின் வெளிப்பாடு உதவுகிறது என்பதில் சந்தேகமில்லை.

### நாடகம்

வெவ்வேறு நிகழ்வுகளை அல்லது சிறந்த மனிதர்களின் வாழ்வில் நடந்த நிகழ்வுகளை நடித்துக் காண்பித்தல் நாடகம் ஆகும். நாடக ஆசிரியரின் வேலை மிகவும் கடினமானதுதான். அவர் எல்லா கதா பாத்திரங்கிளன் நிலையிலும் தன்னை வைத்துப் பார்த்து தத்ரூபமாக அவைகளை படைத்து அதைப் படிப்பவர்கள் அல்லது பார்ப்பவர்கள் வெவ்வேறு கதாபாத்திரங்களோடு தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும். எல்லா நாடகங்களுக்கும் ஒரு ஆரம்பம் நடுப்பகுதி மற்றும் முடிவு உண்டு. நாடகங்கள் சோகமான, நகைச்சுவையான மற்றும் சோகமான நகைச்சுவையாகவே இருக்கலாம். மற்றும் அவை உரைநடையாகவோ செய்யுள் வடிவிலோ இரண்டும் கலந்ததாகவோ எழுதப்பட்டிருக்கலாம். ழி~க்ஸ்பியரின் தலை சிறந்த நாடகங்களான ஹேம்லட் மற்றும் கிங்லியர் செய்யுள் நடையில் உள்ளன. ஒரு நாடகத்தின் இறுதிச் சோதனை மேடையில் செயல்திறனாகும். வெவ்வேறு பாத்திரங்களாக நடிக்கும் கலைஞர்கள், நடிகர்கள் என அழைக்கப்படுகின்றனர். மேடையில் செயல்திறன்தான்

நாடகத்தின் உண்மையான வெற்றியாகும். நாடகத்திலுள்ள கதை, கதாப்பாத்திரங்கள் ஒருவருடன் ஒருவர் உரையாடும்போதோ ஒரு கதாபாத்திரம் தனக்குத்தானே பேசிக் கொள்ளும்போதோ விரிவடைகிறது (வளர்ச்சியடைகிறது).

**ஒரு செயல் நாடகம்**

இதில் நாடகத்தின் முழுச்செயலும் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் நடைபெறும் அவை குறைந்த நேரத்தில் முடிபவையாகவும், உணர்ச்சி ஏற்றத்தை நோக்கி உருவாக்கப்பட்டதாயுமிருக்கிறது. செயல் நாடகமானது அரங்கேற்ற எளியதாகவும், முழு நாடகத்தைவிட சுருக்கமானதாகவும் இருப்பதால் ஆசிரியருக்கு மிகவும் உபயோகப்படுகிறது. குழந்தைகளே எழுதி அதை ஒரு பயிற்சியாக நடித்துக்காட்டவும் செய்யலாம்.

**நாவல்**

நாவல் என்பது பொதுவாக நிறைய கதாபாத்திரங்களுள்ள ஒரு நீண்ட கதையாகும். அந்தந்த நேரத்தில் மற்றும் அந்தந்த இடத்தில் நடந்த உண்மை சம்பங்களை பிரதிபலிப்பதாக உள்ளது. பீல்டிங் 'ஹார்டி' மெரிடித்' மற்றும் 'ஜாய்ஸ்' போன்றோர் சிறந்த நாவலாசிரியர்கள். இந்த ஆசிரியர்கள் வாசிப்போரின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் இந்நாவல்களில் மனித வாழ்க்கையை படம்பிடித்து காட்டுவதால் நீண்ட நாவலாக இருந்தாலும் , வசிப்பதற்குத் தடையாக இருப்பதில்லை.

**சிறுகதைகள்**

சிறுகதைகள் பள்ளிப் பாடபுத்தங்களில் காணப்படக் கூடிய பிரபலமான இலக்கிய வடிவமாகும். ஒரே அமர்வில் வாசிக்கப்படக் கூடியதாகவும் வாசிப்பவரைக் கவர்வதாகவும் உள்ளது. முக்கியமான கதாபாத்திரம மற்றும் முக்கியமான நிகழ்வுகளுக்கு நேரடியாகப் பங்களிக்காத வி~யங்கள் இந்தக் கதைகளில் இருப்பதில்லை. சிறுகதைகளைப் பாடங்கற்பிக்கும் முறைகளில் ஒன்றாகப் பயன்படுத்தலாம் 'சாமர் செட் மாம்' 'ஆண்டன் செக்கவ்;, சகி, எட்கர் ஆலன் போ, ஆர்; கே. தரையன் கே.பி.வெயட் போன்றோர் சிறந்த சிறுகதை ஆசிரியர்கள். பாணட்னுடைய சிறுகதைகள் குழந்தைகள் மத்தியில் மிகவும் பிரபலமானவை. ஓ ஹென்றி எழுதிய 'தி லாஸ்ட் லீப்' மற்றும் 'த கிப்;ட் ஆட் த மாகி' இவைகளும் மிகவும் பிரபலமானவையே.

**கட்டுரை**

கட்டுரை என்பது கோவையாகக் காரணகாரியத் தொடரில் அழகான மொழிநடையில் அமைப்பதாகும். கட்டுரை எழுதுவதற்கு நல்ல நூல்களை வாசிப்பதும், எழுதும் தலைப்பில் சிறந்த அறிவைப் பெறுவதும் அவசியமாகும் கட்டுரையின் முக்கியக் கூறுகளான சுருக்கம், தெளிவு மற்றம் சிறந்த உதாரணங்கள். நீவிர் புத்தகங்களில் 'சார்லஸ் லேம்ப்' 'அடிசன்' ஆர்.கே.

நரையன், நேரு, காந்தி, ரஸ்கின் பாண்ட் போன்றோரின் கட்டுரைகளை வாசித்தால் அவைகள் மகிழ்ச்சியைக் கொடுப்பதோடு புதிய கருத்துக்களையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

குறிப்புகள்

**சுயசரிதை**

ஒரு மனிதன் தன் வாழ்வில் நடந்த நிகழ்வகளைப் பற்றித் தானே எழுதுவது சுயசரிதையாகும். சுயசரிதையின் கதாநாயகன் அதை எழுதிய ஆசிரியரே. தன்னுடைய கடந்த கால நிகழ்வுகள், போராட்டங்கள் இன்ப துன்பங்கள் போன்றவற்றைப் பற்றி எழுதுகிறார் மிகவும் பிரபலமான சுயசரிதைகளில் ஒன்று காந்தியடிகளின் 'சத்திய சோதனை" ஆகும்.

**சரிதை**

ஒருவர் மற்றவரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி எழுதுவது சரிதை ஆகும். முதல் அகராதியை எழுதிய முனைவர். ஜான்சனைப்பற்றி போஸ்வெல் எழுதிய சரிதை இலக்;கிய வடிவத்தில் வழிகாட்டியாக அமைந்துள்ளது.

**பயணக்கட்டுரைகள்**

எழுத்தர் தன் பயனங்களில் பார்த்த நிகழ்வுகளைப் பற்றி எழுதுவது பயணக்கட்டுரை அல்லது பயண இலக்கியம் என அழைக்கப்படுகிறது. இடங்கள், காட்சிகள், நிகழ்வுகள், அனுபவங்கள் போன்றவற்றை விவரித்து அதைக் கோவையாக இணைத்துக் கூறுகிறார். மிகச்சிறந்த ஹிந்தி எழுத்தர் அகேயா எழுதிய பயணப்புத்தகங்கள் மனிதனுடைய உணர்வுகள் மற்றம் இயற்கையை பிரதிபலிக்கின்றது.

**குறிப்புச்சட்டம்**

ஒரு எழுத்தர் ஒரு மனிதரைப் பற்றியோ, பொருட்களைப்பற்றியோ, இடங்களைப் பற்றியோ, நிகழ்வுகளைப் பற்றியோ, காட்சிகளைப் பற்றியோ எழுதும்போது வாசிப்போர் அவற்றைப் பற்றிய குறிப்புகளைப் பெற்றுக்கொள்வது குறிப்புச்சட்டம் எனப்படும். இவைகள் பொதுவாக புறநிலைத் தன்மை வாய்ந்தவையாகும்.

**நினைவிருந்த நிகழ்வு பதிவுகள்**

எழுத்தர் தன் வாழ்வில் அல்லது மற்ற ஒருவரின் வாழ்வில் நடந்த நிகழ்வை எழுதுவது நினைவிருந்த நிகழ்வு பதிவுகள் ஆகும். இது நினைவுகூர்தலின் அடிப்படையில் எழுதுவது ஆகும். இவ்வகை எழுத்தர் யாரைப் பற்றி எழுதுகிறாரோ அவருடன் தனிப்பட்ட முறையில் தொடர்புள்ளவராக அல்லது அந்த விவரிக்கப்பட்ட நிகழ்வில் பங்குபெற்றவராகவோ இருத்தல் அவசியம். இப்பதிவுகள் கடந்த காலத்திலுள்ள நிகழ்வுகளின் பதிவுகளே எழுத்தர் தன்னுடைய கற்பனை ஆற்றல் அல்லது படைப்பாற்றலோடு எதையும் சேர்த்தல் கூடாது.



குறிப்புகள்

**செய்யுள்:**

செய்யுள் அனைத்து இலக்கியங்களுக்கும் சாரமாக அமைந்துள்ளது ஆகும். இது மிகப்பழமையான இலக்கிய வடிவமாகும். எல்லா சமுதாயங்களிலுமுள்ள பெரிய இதிகாசங்களெல்லாம் செய்யுள் நடையிலேயே உள்ளன. கிரேக்க 'ஒடிசி' அல்லது 'இலியட்' அல்லது தொன்மையான இந்திய மகாபாரதம் அல்லது இராமாயணம் போன்றவற்றின் கதைகள் செய்யுள் வடிவிலுள்ளது. காளிதாசர், பட், ஷேக்ஸ்பியர், டண், ஷெல்லி, கீட்ஸ், பைரன், வேட்ஸ்;வொர்த், இலியட், ஈட்ஸ் போன்ற பல சிறந்த பெயர்கள் யாவருக்கும் அறிமுகமானவைகள். செய்யுள் உவமை, உவமேயம், உருவகம்..... போன்றவைகளை உபயோகப்படுத்துவதோடு அவைகளைத் தொட்டறியவும் முடியாது. நாவல், கதை மற்றும் கட்டுரைப் போல் அல்லாது செய்யுள் ஒரு சில வார்த்தைகளிலேயே நிறைய கருத்துகளையும உணர்ச்சிகளையும் உள்ளடக்கியுள்ளது. இது வெளிப்படையான கலந்துரையாடலுக்கு வழிவகுப்பதோடு பலவகையான விளக்கங்களுக்கும் வழிவகுக்கிறது. வரையறுக்கப்பட்டவைகளோ சில சமயங்களில் காலத்திற்கு ஏற்ப புரிந்து கொள்ளும் வகையில் செய்யுள் உள்ளது. இலக்கிய வடிவங்களிலேயே செய்யுளை மொழி பெயர்ப்பது மிகவும் கடினமாதாகும்.

பலவகையான இலக்கியங்களை அறிமுகப்படுத்துவதன் நோக்கமே கற்பித்தல் உபகரணங்களைத் தேர்ந்தெடுத்து குழந்தைகளுக்க வகுப்பறையில் மொழியை கற்பிக்க முடியும். இலக்கிய வடிவங்களின் நோக்கங்களைப்பற்றி குழந்தைகள் அறிந்து கொள்வதை விட அவைகளை அவர்களுக்கு வெளிப்படுத்தி விமர்சித்து பாராட்டும் திறனை வளர்க்க வேண்டும். அதிலுள்ள கருத்துக்களையும் பொருளையும் அறநிது கொள்வதோடு மட்டும் அல்லாது அதிலுள்ள சொற்களஞ்சியம், மரபு மொழி, சொற்றொடர் மற்றும் வாக்கிய அமைப்புகளையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 3**

1. உரைநடையில் உள்ளடங்காதது

   அ) நாடகம்      இ) செய்யுள்

   ஆ) நாவல்      ஈ) கதை

2. சுயசரிதைக்கும், சரிதைக்கும் உள்ள வேறுபாடு என்ன?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

குறிப்புகள்

3. செய்யுள் கூறுகள் யாவை?

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

4. சிறந்த சிறுகதை எழுத்தாளர்களின் பெயர்களை எழுதுக.

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

5. உங்களுக்குப் பிடித்தச் செய்யுளை எழுதி அதை எழுதியவர்யார் என்று கூறுக. அச்செய்யுளின் அர்த்தத்தையும் எழுதுக.

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

6. மிகச் சிறந்த சிறுகதை எழுத்தாளர்கள் பெயர்களை எழுதுக. நீங்கள் விரும்பும் திரைப்படம் உண்டா? அதன் கதை ஆசிரியர் யார்?

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

## 7.3.3 மொழி கற்பித்தலில் இலக்கியத்தின் பயன்பாடு – வரலாற்று கண்ணோட்டம்.

20ஆம் நூற்றாண்டில் இலக்கியம்; மொழி கற்பிப்பதில் முக்கிய பங்கு வகித்தது. இலக்கியத்தை ஆழ்ந்து கற்கும்போதுதான் பிற மொழியைக் கற்றக்கொள்ள முடியும் என்ற எண்ணம் இருந்து கொண்டிருந்தது. ஆனால் 1940 முதல் 1960 ஆண்டுவரை பிற மொழியைக் கற்பிப்பதில் இலக்கியத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வில்லை. ஏனெனில் தேவையின் அடிப்படையில் பாடங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அந்தக் கால கட்டத்தில் இலக்கியம் முக்கியத்துவம் பெறாததற்குக் காணரம் இலக்கியம் தாழ்த்தப்பட்ட மக்களோடு தொடர்புடையதாக இருந்ததாகக் கருதப்பட்டது. பாரம்பரியமாக மொழிக்கற்றல் என்பது இலக்கணம் கற்பித்தலாக இருந்தது. பிற்காலங்களில் மொழிபெயர்ப்பு அதனுடன் இணைக்கப்படட்டது. பாடப்புத்தகங்களிலுள்ள பாடப்பொருள்கள் இலக்கண விதிமுறைகளைப் பின்பற்றவில்லை. ஆகவே

குறிப்புகள்

அறிவு மற்றும் மொழித்திறன் உள்ளடக்கிய பாடப்புத்தகங்கள் தேர்வு செய்ய இயலவில்லை. இலக்கண மொழிபெயர்ப்பு முறை புரியாமல், இலக்கண விதிகளை மனப்பாடம் செய்வதைச் சார்ந்திருந்தது. அது கற்றுக்; கொள்ள வேண்டிய மொழியிலிருந்து தாய் மொழிக்கும், தாய்மொழியிலிருந்து கற்றுக்கொள்ளும் மொழிக்கும் மொழியாக்கம் செய்தது. இம்முறை நீண்டகாலமாக உலகளாவிய உபயோகத்தில் இருந்தது. 1970–80ல் அறிவு சார்ந்த மொழி கற்பித்தல் நடைமுறைக்கு வந்தது. அது குழந்தைகள் உள்ளார்ந்த கல்வியறிவு மற்றும் மொழியறிவோடு பள்ளிக்கு வருகின்றனர். அதை ஆர்வமூட்டும், சவாலூட்டும் பாடப்புத்தகங்களின் மூலமாக வளர்ப்பது ஆசிரியர்களின் பணியாகும.; இதனால் மொழி கற்பித்தலின் இலக்கியத்திற்கு இடமளிக்கப்பட்டது.

விடோசனின் கூற்றுப்படி மொழி அறிவியல் அறிவு இரண்டு நிலைகளைக் கொண்டது, உபயோக நிலை மற்றும் உபயோகிக்கும் நிலை. உபயோகம் என்பது விதியைப் பற்றிய அறிவை உள்ளடக்கியது உபயோகிக்கும் நிலை என்பது விதிகளை எவ்வாறு தகவல் பரிமாற்றத்தில் உபயோகிக்கலாம் என்ற அறிவை வழங்குகிறது. இன்றைய பெரும்பாலான இலக்கிய பாட புத்தகங்கள் மொழியை உபயோகிப்பதற்கான அடிப்படை அறிவை தருகிறது. இலக்கியம் மொழித்திறன்கள் அனைத்தையும் அதிகரிக்கிறது. ஏனென்றால் அது மொழி அறிவியல் சம்பந்தப்பட்ட அறிவை வளர்க்கிறது என்று போவ்; (1972) என்ற அறிஞர் வாதிடுகிறார். இவ்வாறாக 20ஆம் நூற்றாண்டின் கடைசி வரை, இலக்கியம் பல்வகையான மொழித்திறன்களை வளர்ப்பதில் முக்கிய வளமாக நிலை நிறுத்திக் கொண்டது. இதற்கு ஆதாரமாக தற்காலங்களில் குழந்தைகள் எழுத்துக்களை புரியாமல் மனப்பாடம் செய்யாமல், கதைகள் மற்றும் செய்யுள் போன்ற தொடர்புடைய சாதனங்கள் மூலம் கற்றுக் கொள்கின்றனர்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 4**

1. பாரம்பரியமாக மொழிகற்பித்தலின் அடிப்படையானது:

   a) பொருள்சார்ந்த கற்பித்தல் b) வாக்கிய கற்பித்தல்

   c) இலக்கண கற்பித்தல் d) ஒலி கற்பித்தல்

2. 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில் மொழி கற்பித்தலில் இலக்கியத்தின் பங்கினை தெளிவு படுத்துக.

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

குறிப்புகள்

*3. மொழி கற்பித்தலின் இலக்கண மொழி பெயர்ப்பு முறையின் அடிப்படைக் கொள்கைகள் யாவை?*

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

## 7.4. இலக்கியம் கற்பித்தலின் நோக்கங்கள்

இலக்கிய வகுப்புகளில் வெவ்வேறான வடிவங்கள் நடைமுறையிலுள்ளன. இலக்கியம் கற்பித்தல், தாய்மொழி கற்பித்தல் மற்றும் இரண்டாம் மொழி கற்பித்தல் வகுப்பறையின் செயல்திறன் மற்றும் மனப்பான்மையைச் சார்ந்துள்ளது.

1. **மொழி படிவம் :** இவ்வகைப்படிவத்தில் இலக்கியம் மொழி வளர்ப்பதற்குப் பயன்படுகிறது. இதில் சொற்களஞ்சியம் மற்றும் வாக்கிய அமைப்புகள் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இலக்கியத்திலுள்ள ஆர்வம் குறைவதே இதன் முக்கிய குறைபாடு ஆகும். உண்மையாகச் சொல்லப்போனால், அநேக நேரங்களில் குழந்தைகள் இலக்கணத்தையோ, வார்த்தைகளையோ கற்றுக் கொள்வதுமில்லை, இலக்கியங்களில் ஆர்வத்தை வளர்ப்பதுமில்லை.
2. **இலக்கிய வடிவம் :** இலக்கியம் மேலோங்கும் வகுப்பி;ல் பாடப்பொருளுக்கும் இல்பொருள் சிந்தனைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. குறிப்பிட்ட கலாச்சாரத்திற்கும் உலகார்ந்த மனித நற்பண்புகளுமே முக்கிய நோக்கமாக உள்ளது. இவ்வகையான வகுப்பில் இயல்பான மொழி வளப்படுத்துதல் இருப்பினும் இலக்கண அமைப்பு பயன்பாடு, அளவீடு மற்றும் வாக்கிய அமைப்பு போன்றவற்றிற்கு மிக குறைந்த முக்கியத்துவமே அளிக்கப்படுகிறது. தாய்மொழியை கற்றுக் கொள்ளுபவர்களுக்கு இடைஞ்சலாக இல்லையெனினும் இரண்டாம் மொழியைக் கற்றுக் கொள்பவர்களுக்குத் தடையாக உள்ளது.
3. **ஆளுமைத் திறன் வளர்க்கும் படிவம் :** இலக்கியத்தைக் கற்றுக் கொள்வதன் மூலம் தனிப்பட்ட மற்றும் குழுவாக உணரும்திறன் மேலும் குழந்தைகளின் மனத்திறனை வளர்ப்பது இவ்வகை படிவம் வலியுறுத்துகிறது. இவ்வகை படிவத்தின் மூலமாக இலக்கியத்தைக் கற்றுக் கொள்ளும் பொழுது குழந்தைகள் சிறந்த மனிதர்களாக, வாழ்வின் எல்லாத் துறைகளிலும் முன்மாதிரிகளாக சிறந்து விளங்குவர் என்று நம்பப்படுகிறது.

## 7.4.1 வகுப்பறையின் வகைகள்

குறிப்புகள்

இலக்கியம் கற்பிப்பதின் நோக்கங்களையும் மாதிரிகளையும் இதுவரை கலந்தாலோசித்தோம். ஆனால் எந்த முறையில் இதை வகுப்பறையில் கையாளுவது என்பதை சிந்தித்தீர்களா? மொழி கற்பித்தலுக்கான வெவ்வேறு முறைகள் யாவை? வீடுகளில் எவ்வகையான மொழியைக் குழந்தைகள் உபயோகிக்கின்றன? இவையிரண்டும் எவ்வாறு வேறுபடுகின்றன? இப்பகுதி இவ்வினாக்களுக்கான பதிலைத் தர முயல்கிறது. கிரஷன் முன்பு தரப்பட்டுள்ள அலகுகளில் குறிப்பிட்டபடி மொழியைப் பெற்றுக் கொள்ளுவதற்கும், மொழியைக் கற்பதற்கும் உள்ள வேற்றுமையைக் குறிப்பிடுகிறார். மொழியைப் பெற்றுக் கொள்வது என்பது வீட்டிலும் வெளியிலும் இயற்கையானச் சூழலில் மொழியைக் கற்றுக்கொள்வதையும், கற்றுக்கொள்வது என்பது முறைப்படி பள்ளியில் கற்றுக் கொள்வதையும் குறிக்கிறது.

இயற்கையான சூழலில், குழந்தைகள் மொழியின் விதிகளை மொழியை வெளிப்படுத்தும் வாய்ப்புகள் கரிசனையுடன் கிடைப்பதால் தானாகவே பெற்றுக்கொள்கின்றனர். ஏனெனில் உள்ளார்ந்த ஆர்வம் இல்லாவிட்டால், மொழியின் சிக்கலான கட்டமைப்புகளை ஒருவர் பெற்றுக் கொள்ள இயலாது. இந்த உள்ளார்ந்த ஆர்வத்தைப் பள்ளிகள் செயல்படுத்த வேண்டும்.; இலக்கியம் இவ்வார்வத்தை வளர்க்கும் வலிமை வாய்ந்தது. இயற்கையானச் சூழலில், இலக்கியம் குழந்தைகளின் கவனத்தை, வடிவத்தை விட பொருளுக்கு நேராகத் திருப்புகிறது. பொருள் தன் வயமானவுடன், முறையான இலக்கணம், சொற்களஞ்சியம் போன்றவை தானாகவே தன்வயமாகின்றன. ஆயினும் இலக்கணத்தை முறையாகக் கற்றுக் கொள்ளுதல் மற்றும் புதிய வார்த்தைகளை உபயோகிகத்தல் இரண்டாம் மொழி வகுப்பறையில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஒரு ஆசிரியராக, ஆரம்ப வகுப்புகளிலுள்ள ஒரு குழந்தை இரண்டாம் மொழியைவிட தன் தாய்மொழியில் ஆளுமை பெற்றுள்ளதை நீங்கள் அறிவீர்கள். இரண்டாம் மொழியின் விதிகளை விவரிப்பதைவிட அம்மொழியை பயன்படுத்துவதை வலியுறுத்துவதே இரண்டாம் மொழி கற்பிக்கும் ஆசிரியரின் நோக்கமாகும். வலுக்கட்டாயமாக கற்பிப்பதை விட இயற்கையாக கற்கும் வண்ணம் வகுப்பறை அமைக்கப்பட்டிருக்க வேண்டும். உ;ணமையான உலகில் பேசப்படும் மொழியோடும் குழந்தைகள் தங்களை தொடர்பு படுத்திக் கொள்ள வேண்டும்.

இரண்டாம் மொழி வகுப்பு எவ்வாறு இருக்கும்? வீடு மற்றும் வீதியிலுள்ள சூழலுக்கு முற்றிலும் மாறுபட்டுள்ளது. இரண்டாம் மற்றும் பிற மொழி ஆசிரியர்கள் இலக்கண மொழி பெயர்ப்பு முறையையே ஆதரிக்கிறார்கள். இந்த ஆசிரியர்கள் வார்த்தைப் பட்டியலை தயாரிக்கின்றனர்.

குறிப்புகள்

இலக்கணத்தின் விதியை விவரிக்க சில் எடுத்துக்காட்டுகளை கூறுகின்றனர். எடுத்துக்காட்டுக்காக ஒரு மாதிரியை கொடுக்கப்பட்டு அது விதியை விவரிக்கிறது. சொற்களஞ்சியம் கொடுக்கப்பட்டு, முடிவில் பயிற்சிக்காக கேள்விகள் கொடுக்கப்படுகிறது. இந்த போதிக்கப்படும் வகுப்பறை கட்டமைப்பு போல் இயற்கையான சூழலில் இருப்பதில்லை. மாறாக இயற்கை சூழலுக்கு ஒத்த வகுப்பறைகளில் மன அழுத்தம் இல்லாமல் முழுமையான அறிவுபூர்வமான உள்ளீடு குழந்தைகளுக்கு கிடைக்கிறது. குழந்தைகள் அவர்களது தவறுகளைச் சுட்டிக்காட்டி மட்டம் தீட்டுவதில்லை. குழந்தைகள் கற்றல் பொருட்களை வகுப்பறைக்கு வெளியே அதாவது உண்மையான அனுதின வாழ்வில் உபயோகிப்பதன் மூலம் கற்றுக் கொள்ளும் மொழி பேசுபவர்களிடம் பேசி வெற்றிகரமாக தொடர்புகொள்ள முடிகிறது.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 5**

1. ஒரு குழந்தை பள்ளிக்கு வருமுன் தாய் மொழியை கற்பது (சரியான விடையை டிக் செய்யவும்)

   a) கற்பிக்கப்படும் சூழலில் b) இயற்கைச் சூழலில்

   c) பெற்றோரால் போதிக்கப்பட்டு d) இவைகளில் ஒன்றுமில்லை

2. இரண்டாம் மொழி கற்பிக்கும் ஆசிரியரின் நோக்கம் யாது?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

3. மொழி கற்பித்தலில் இயற்ககையான சூழல் மற்றும் கற்பிக்கும் சூழல் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

4. இலக்கண மொழிபெயர்ப்பு என்றால் என்ன?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

## 7.4.2. தாய்மொழி மற்றும் இரண்டாம் மொழி (பிற மொழி) வகுப்பறை



வகுப்பறையிலும் வீட்டிலும் உபயோகிக்கும் மொழியிலுள்ள வேற்றுமையை அறிந்திருப்பீர்களா. உள்ளீட்டு வடிவம் மற்றும் வெளிப்பாடின் அளவு வேறுபடுவதினாலேயே இந்த வேற்றுமை காணப்படுகிறது. தங்கள் தாய்மொழியைப் போலவே குழந்தைகள் இரண்டாம் மொழியையும் எளிதாகப் புரிந்து கொள்வதை மேம்படுத்த எவ்வகையான பாடப்பொருட்களை வகுப்பறையில் தர வேண்டும்?

எந்த மொழியையும் கற்பிப்பதற்கு, (அது தாய்மொழியோ, இரண்டாம் மொழியோ) இலக்கியத்தை பயன்படுத்தலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கியம் எளிய வார்த்தைகளையும் கொண்டதாக இருக்க வேண்டும். வார்த்தை அமைப்புகள் எளிதாக புரிந்து கொள்ளும் வண்ணம் இருக்க வேண்டும் தெரிந்தெடுக்கும் பாடப்பகுதிகள் ஆர்வமூட்டுவதாக இருக்க வேண்டும். தேவையான இடங்களில் மட்டுமே இலக்கணம் கற்பிக்கப்பட வேண்டும். மாணவர்களின் முன்னேற்றத்திற்காக நிறைய பாடப்பொருட்கள் தேவைப்படுகிறது. இலக்கியம் அதற்காக நல்ல வளமாகும். ஆசிரியர்கள் குழந்தைகளின் இயலும் தன்மைக்கேற்றவாறு, சராசரிக்கு மேலான பாடப்பொருளை கற்றுக்கொள்பவர் சவாலாக ஏற்றுக்கொள்ளமாறு கொடுக்க வேண்டும். குழந்தைகளின் அறிவுசார்நிலையை கண்டறிந்து அவர்களது உளத்திறன்களுக்குச் சவாலான மற்றும் ஆர்வமூட்டும் பாடப்பொருட்களை சேகரிக்க வேண்டியது அவசியம் எவ்வளவு சவாலாக உள்ளதோ அந்த அளவிற்கு ;குழந்தைகள் கற்றுக் கொள்வர்.

அநேக மாகாணங்களில் முதல் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. தாய்மொழியில் பேசுபவர்களுககுக மற்ற மொழிகளை உபயோகிப்பது கடினமாகையால் பாடப்பொருளைத் தேர்வு செய்து அதனை பரிமாறிக் கொள்வதில் ஆசிரியர் மிகவும் கவனம் கொள்ளுதல் வேண்டும். பாடப்பொருளை அலாசி ஆராய்வது குறைந்த அளவே இருத்தல் வேண்டும். குழந்தைகள் தானாகவே ஆராய்ந்து அறிந்து கொள்ள ஆர்வமூட்ட வேண்டும்.

**இலக்கியங்களை உபயோகிக்கும் போது கவனிக்கப் பட வேண்டிய கருத்துக்களாவன**

1. பாடப்பொருள்களை முற்றிலும் புரிந்து கொள்வது அவசியமன்று.
2. எதிர்வினை: பாடப்பொருளுடன் குழந்தைகள் எதிர்வினை கொள்ள வேண்டும் அது அவர்களது கருத்துக்களாக இருக்கலாம். அது அவர்களது தனிப்பட்ட கருத்தாக இருக்க வேண்டும். திரும்பிக் கூறுவதாக இருக்க கூடாது.
3. படைப்பாற்றலுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

குறிப்புகள்

4. ஆய்வு செய்யும் போது, திரும்பக் கூறுவதையோ தவறுகளையோ முக்கியப் படுத்தாது, குழந்தைகள் தாங்கள் வாசித்தவற்றோடு எதிர்வினையாற்ற ஆர்வமூட்ட வேண்டும். நிகழ்வுகளில் தர்க்க ரீதியான உறவுகளைக் கண்டு, இலக்கியங்களிலுள்ள கருத்துக்களையும், உணர்வுகளையும் பாராட்ட குழந்தைகளுக்கு உற்சாக மூட்ட வேண்டும்.

## 7.4.3. இலக்கியங்களின் மூலமாக வெவ்வேறான திறன்களை வளர்த்தல்

இதுவரை வகுப்பறையில் எவ்வாறு இலக்கியம் உபயோகப்படுகிறது என்பதை கலந்துரையாடினோம். கற்போர், கதைகளில், செய்யுளில் மொழி உபயோகிக்கப்படுவதை பாராட்ட கற்றுக் கொள்வதை பாராட்ட கற்றக் கொள்கின்றனர். இலக்கியத்தால் வரும் மற்ற நன்மைகளையும் காண்போம். மனதைக் கவரும், சுவாரஸ்யமான கதைகள் வாசிப்போரில் கவனச் செறிவை வளர்க்கிறது. இலக்கியப்பொருளை வாசித்து முடித்தவுடன் மாணவனுடைய கற்பனைத் திறன் வளமடைவதுடன், அவனுடைய தனித்துவமும், சுதந்திரமும் மேம்படுகிறது. தெரியாத வார்த்தைகளுக்கு பொருளைப் புரிந்து கொள்ளும் கலையை வளர்த்துக் கொள்கிறான். தன்னுடைய சிந்தனை செயல்முறையை கட்டுப்படுத்தக் கற்றுக் கொள்வதோடு சமுதாயத்திற்கு நேர்மறை பங்களிக்கும் சக்தியையும் பெற்றுக்கொள்கிறான். ஸ்காட் என்போரின் கூற்றுப்படி, இலக்கியம் அழகு, அறநெறி, ஆன்மீக மதிப்பீடுகள் போன்றவற்றை பிரதிபலிப்பதாகவும் சமூக ஒழுங்கு மற்றும் கலாச்சாரத்தின் விதிகளை வெளிப்படுத்துவதாகவும உள்ளது. இலக்கியத்தின் வழியாக மொழியைக் கற்றுக் கொள்ளும் பொழுது, கலாச்சார குறிப்புகளின் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. மாணவர்கள் கலாச்சார வாழ்க்கைக்கு அறிமுகப்படுத்தப்படுவதோடு அதில் பங்கேற்கவும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

விடோசன் என்பாரது கூற்றப்படி இலக்கியம் மொழி கையாளுதல் அல்லது கலாச்சாரப் பாடங்களைப்புரிந்து கொள்ளுதல் போன்றவற்றிற்கு மட்டுமல்லாது தொடர்பு கொள்ளும் திறனை வளர்ப்பதற்கும் பயன்படுத்தப்பட வேண்டும். இலக்கியப் பொருள் கற்கும் திறனை வளர்ப்பதோடு மட்டுமின்றி கேட்டல், வாசித்தல் மற்றும் எழுதும் திறன்களையும் வளர்க்கிறது. இலக்கியத்தை ஆய்வு செய்து உபயோகிக்கும் போது, உலகில் உண்மையாக நடக்கும் காரியங்கள் மற்றும் அனுபவங்கள் தொடர்பான நிகழ்வுகளை புரிந்து கொள்ள முடிகிறது. நம்முடைய தனிப்பட்ட மற்ற சமூக பிரச்சனைகளை உணர்ந்து கொள்ள உதவுகிறது. அவர்களின் உணர்ச்சி திறன்படி வாசகர்கள் கலாச்சார மற்றும் மொழியில் முன்னேற உதவுகிறது.



குறிப்புகள்

## முன்னேற்றத்தை சோதித்தறிக - 6

1. சுவாரஸ்யமான கதைகள் வளர்க்க உதவுகிறது.

    a) செரிவு　　　　b) யோசனை திறமை

    c) கற்பனை　　　　d) மேலே கண்ட அனைத்தும்

2. இலக்கியம் வெளிப்பாட்டை வழங்குவதன் நன்மைகள் யாவை?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

## 7.5 பல்வேறு இலக்கிய வடிவங்களைக் கற்பித்தல்

மொழி ஆசிரியராக, நீவிர் வெவ்வேறு இலக்கிய நூல்கள், செய்யுள் மற்றும் கட்டுரைகளைக் கையாள வேண்டும். எதை நீங்கள் மகிழ்வுடன் கற்பிப்பீர்? அநேக குழந்தைகள் ஒரு கதையை படிக்க ஆவலுடன் இருப்பின், செய்யுளை படிப்பதில் அவர்களிடம் உற்சாகத்தை எவ்வாறு உருவாக்குவீர்? ஒரு கட்டுரையின் அழகை எவ்வாறு விவரிப்பீர்? உரையுடன் ஒருங்கிணைப்புகளை அதிகரிக்க எவ்வகை உத்திகள் மற்றும் கற்பித்தல் கருவிகளை பயன்படுத்தலாம். இந்த இயல்புகளில் பெரும்பாலானவை இங்கே அறிமுகப்படுத்தப்பட்டு 'பாடம் திட்டமிடல்' அலகில் மேலும் விரிவாக விவாதிக்கப் பட உள்ளது.

### 7.5.1 தொடக்க மற்றும உயர் தொடக்க வகுப்புகளில் உள்ள வடிவங்களை உள்ளடக்குவதற்கான அடிப்படை:

கதைகள், நாட்டுப்புறக் கதைகள், கற்பனைப் புராணங்கள், நீதிக்கதைகள், புனைவுகள், பாடல்கள் போன்றவை தொடக்க நிலை பாடப் புத்தகங்களில் உள்ளன. உயர் தொடக்க நிலை வகுப்புகளில், இவைகளுடன் நாவல்கள், நாடகங்கள், சித்திரங்கள், மனப்பாடப்பகுதிகள், வாழ்க்கை, தன்வரலாறு போன்றவைகளும் அடங்கியுள்ளன. குழந்தைகளுக்கு கற்பிக்க சிறுகதைகளை பயன்படுத்துதல் மிகுந்த நன்மைகள் உள்ளன. அவை எளிமையானவை, படிக்க வேண்டிய பகுதி சுருக்கமானது – சுருக்கமாக இருப்பது குழந்தைக்ள படிப்பதை ஊக்குவிக்கிறது. ஒரு சில பக்கங்களில் முழுமையான திருப்பங்கள்; கூறப்படுவதால் அவைகள் சவாலானவைகள். இவை படிப்போரின் கவனத்தை ஈர்த்துவைப்பதற்கான காரணிகள் ஆகும்.

குறிப்புகள்

தொடக்க நிலைகளில் எளிய பாடல்களின் வழியாக மாணவர்களின் ஆர்வத்தை தூண்வடுவது எளிது. உயர்நிலைகளில் அவைகள் செல் மற்றும் நயம் போன்றவற்றின் உணர்திறனை மேம்படுத்த உதவலாம். உருவகங்கள், உவமை போன்றவை உரை நடையை விடச் செய்யுளில் அதிகமாக பன்படுத்தப்படுவதால் இவற்றை செய்யுளின் வழியாக, குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தலாம். படைப்பாற்றல், மொழித் திறன்களை வளர்க்க செய்யுளைப் பயன்படுத்தலாம்.

நாடகங்கள் மாணவர்களின் கேட்கும் திறனை வளர்க்கிறது. நாடகங்கள் கடினமான இலக்கண அமைப்புகளைக் கையாளுவதால் இலக்கியத்தைப் புரிந்து கொள்வதைவிடச் சூழலின் பொருத்தத்தை மாணவர்கள் புரிந்து கொள்ள உதவுகின்றன. படிக்கும்போது மாணவர்கள் காட்சிகளை மனத்திரையில் காட்சிப்படுத்த உதவுவதோடு, கதாபாத்திரம கூறும் ஒரு குறிப்பிட்ட வரி, அந்தப் பாத்திரத்தோடு இணைந்து கொள்ளும் உணர்வை ஏற்படுத்தி அவர்களது கற்பனையைத்தூண்டி வளர்ப்பதாகவும் அமைய வேண்டும். நாடகங்களின் வழியாக மனிதனாக வாழ்வது எவ்வாறு என்று மாணவர்கள் கண்டுபிடிக்க இயலும். அவை மாணவரின் கற்பனைத் திறனைத் தூண்டி, நுண்ணறிவு, வெளிப்பாடு, தன்னை அறிதல் போன்றவற்றை வளர்ப்பதாகவும் உள்ளது.

அண்மைக் காலங்களில், இலக்கியத்தின்வழி சமூகமயமாக்கல் பற்றிய ஆய்வு இலக்கியத்தை எவ்வாறு படிப்பது? மற்றும் பிற திறன்களை வளர்க்கிறது. ஏனெனில் இது படிப்பதற்கான ஓர் உந்துதலைத்தருகிறது. மேலும், தொடர்ந்து படிப்பதின் வழியாகவே நாம் சிறந்த வாசகராக முடியும். குழந்தைகளுக்கு மகிழ்ச்சியளிக்கும் இலக்கியத்தைத் தர வேண்டும். அவை அவர்களுடைய கற்பனைக்குச் சவாலாக அமைவதுடன், அவர்களை பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை உணர்ந்தறிபவர்களாக மாற்றுகிறது.

தொடக்க நிலை வகுப்புகளில், இலக்கியம் என்பது நாவல், கதைகள், செய்யுள் பாடல்கள், நாட்டுப்புறக் கதைகள் போன்றவற்றைக் குறிப்பதால், மாணவர்களால் எளிதாக புரிந்து கொள்ளக் கூடிய நூல்களையே முக்கியப்படுத்த வேண்டும். படைப்பாற்றலோடு கூடிய படிப்புத்திறனை பெற மாணவர்களுக்கு உதவுவதோடு அவர்களது பாடம் மற்றும் துறை தொடர்பான படிப்புத்திறனையும் ஆசிரியர் மேம்படுத்த வேண்டும். குழந்தைகளுக்குப் பல்வேறு இலக்கிய வடிவங்களையும், அவற்றின்; மாதிரிகளையும் அறிமுகப்படுத்துவதுடன், கற்பதற்கான ஆர்வத்தை மனதில் வளர்த்து, படித்தல் பயிற்சியை அதிகரித்தலே கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டத்தின் நோக்கமாகும்.

இலக்கியம் அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல் எழுதுதல் ஆகியவற்றை வளர்ப்பதோடு, மொழிப்பகுதிகளையும வளர்ப்பதில்

பங்கு கொள்ள முடியும் பாடப்புத்தம் குழந்தைகளிடம் எதிர்பார்க்கும் திறன்கள் மற்றம் நிலைகளோடு விலீவடைகிறது என்பதை NCERT யின் இந்தி மற்றும ஆங்கிலமொழிப் பாடப்புத்தகங்களை பார்ப்பதன் மூலம் புரிந்து கொள்ளலாம். முதல் வகுப்பு ஹிந்தி புத்தகம் எளிய பாடல்களுடன் தொடங்கி, குழந்தைகள் கதையைப் புரிந்து கொள்ளக்; கூடிய நிலையை அடைந்துள்ளனர் எனும் தருணத்தில் இறுதியாகக் கதைகளை அறிமுகப்படுத்துகிறது. மாறாக, ஐந்தாம் வகுப்பு புத்தகமானது உரைநடை (கதை, கட்டுரை, நேர்முக உரையாடல்) செய்யுள், நாடகம் போன்ற வெவ்வேறான வடிவங்களைக் கொண்டுள்ளது. பிரேம்சந்தின் இட்கா போன்ற கதைகள் குழந்தைகளின் உணர்திறனை வளரச் செய்கிறது. (பாடநூல்களை ஆய்வு செய்வது) நம் வகுப்பறைகளில் குழந்தைகள் குழந்தைப் பருவத்திற்கும் வளரிளம் பருவத்திற்கும் இடைபில் உள்ளனர். இந்நிலையில் அவர்களது குழந்தைப்பருவத்தை நினைவுகூரும் வகையிலும், அதனோடு அவர்களது எதிர்காலத்தை கண்டறியும் ஆர்வத்தை தூண்டும் கதைகளையும், செய்யுள்களையும் தேர்ந்தெடுப்பது பொருத்தமானது. நாடகங்கள் மாணவர்களுக்கு தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் வடிகால்களாக அமைவதோடு, முன்னர்; புரிந்து கொள்ள இயலாத உணர்வுகளையும், நிகழ்வுகளையும் புரிந்து கொள்ளவும் வழி வகுக்கிறது. நாம் மொழிகற்பிக்கத் தேர்ந்தெடுத்த இலக்கியமும், குழந்தைப் பருவத்திற்கும் வளரிளம் பருவத்திற்கும் வேறுபாட்டை வெளிப்படுத்தும் வண்ணம் இருக்க வேண்டும்.

## 7.5.2 இலக்கிய வடிவங்களை வகுப்பறையில் பயன்படுத்துதல்?

வகுப்பறையில் மொழி கற்பிக்க கொடுக்கப்பட்டுள்ள இலக்கியங்கள் வெவ்வேறு வடிவங்களான கதை, செய்யுள் நாவல், ஓரங்க நாடகம் போன்றவற்றை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை இங்கு நாம் காணலாம்.

**கதைகள், சிறுகதைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவைகளை பயன்படுத்தும் முறை :** பொதுவாக எல்லா பாடப்புத்தகங்களிலும் சிறுகதைகள் உள்ளன. ஒரு பொருத்தமான கதையிலிருந்து தேவையானதை பிரித்தெடுத்து, பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ளலாம்.

எடுத்துக்கொண்ட பாடப்பகுதி ஒரு நெடுங் கதையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தாயின, குழந்தைகளிடம் இதன் முடிவு, முன் கதை ஆகியவற்றைக் கற்பனையாக எழுதும்படி கூறலாம்.

ஒரு கதைமாந்தரின் ஆளுமைத்திறன் பற்றி விவரிக்கச் சொல்லாம். அந்த புத்தகத்தில் உள்ள இரு கதைமாந்திரன் பங்கை பங்கேற்று நடிக்கச் செய்யலாம். ஆசிரியர்கள் கதையைக் கூறுகையில் ஓரிடத்தில் நிறுத்தி, வினாக்கள்; கேட்கலாம் வெவ்வேறு நிலைகளிலுள்ள மாணவர்களிடம் கேட்கப்படும் வினாக்களின் தன்மை வேறுபடலாம்.

வினாக்களுக்கு விடைதர் மாணவரிடம் கூறலாம். என்ன நிகழ்கிறது என்று அவர்கள் எண்ணுகின்றனர்? அவர்கள் மனதில் காட்சிகள் பதிந்த கதைமாந்தர் அவர்களின் உணர்வுகள் யாவை? கதையைப் பற்றி அவர்கள் மனதில் எழும் ஐயங்கள் யாவை? தொடக்கநிலை, வகுப்புகளில் குழந்தைகள்; பதில் கூறலாம் உயர்நிலை வகுப்புகளில் பதிலை ஏடுகளில் கட்டுரைகளாக எழுதலாம். நாட்டுப்புற நீதிக்கதைகளான அக்பர்பீர்பால், மரியாதை ராமன் தெனாலிராமன் போன்றவற்றை இச் செயல்பாடுகளுக்குத் தேர்வு செய்யலாம், ஏனெனில் இவற்றில் வரும் நிகழ்வுகளை குழந்தைகள் எளிதாக ஊகித்தறிய முடியும்.

## செய்யுள் பயன்பாடு

ஆசிரியர் ஒரு செய்யுளைக் கூறி மாணவர்கள் அதனை மன்னம் செய்து பிழையின்றிக் கூறச் சொல்லலாம் கீழ்க்கண்ட வழிமுறைகளையும் பின்பற்றலாம்.

- மாணவர்களைச் செய்யுளில் அமைந்துள்ள கதையை எழுதக் கூறுதல். இந்த செய்யுளை இயற்றியவர்யார்? இந்த செய்யுள் எழுதப்பட்ட காரணம் என்ன?
- செய்யுளில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை மாணவர் கலந்துரையாடச் செய்து இந்தக் கருத்து அவரவர் வாழ்வோடு எவ்வாறு தொடர்புடையன? அவர்களுடைய எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளச் செய்யலாம்.
- மீத்திற மாணவர்கள் செய்யுளின் பல்வேறு நயங்களையும், அவை கேடக் இனிமையாக இருப்பதன் காரணத்தையும் கூறச்செய்தல்.

## நாடகத்தின் பயன்கள்

எவ்வகையான நாடகங்களை உங்கள் வகுப்பில் பயன்படுத்தலாம் என ஆசிரியர் முடிவு செய்ய முடியும் சிலர் சூழல் மற்றும் மொழிநடை எளிதாகப், புரிந்து கொள்ளும் தன்மை அமைந்த, தற்கால நாடகங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பர். வேறுசிலர் பழமையான ஆதரிக்கின்றனர். எனினும் மாணவரின் உணர்வுகளை உயர்த்தும்,அவர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கக் கூடிய நாடக ங்களே மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பது மறுக்க இயலாததாகும்.

மாணவர்களை, அவர்களது நாடகங்களை அதற்கான ஒப்பனையோடு வந்து காட்சிப்படுத்தச் செய்யலாம். அந்த நாடகத்திற்குத் தேவையான செய்தித்தாள் துணுக்குகள், எழுதப்பட்ட கருத்துகள், படங்கள் அல்லது வேறு பொருத்தமான பொருட்களையும் அவர்கள் பயன்படுத்த இப் பயிற்சி அவர்களுக்கு சிறந்த முறையில் தொடர்பு கொள்ள உதவுவதோடு அவர்கள் வாழும் உலகைப்பற்றிய கருத்துகளை பரிமாறிக் கொள்ளும் திறனையும் வளர்க்கிறது.

## 7.5.3 இலக்கிய வகுப்பறையில் எதிர்நோக்கும் சிக்கல்கள்



குறிப்புகள்

இலக்கியப் படைப்புகள் சரியாகத்; தேர்ந்தெடுக்கப்படாவிட்டாலும், அவை மாணவர்களது மொழி மற்றும அறிவுசார் நிலைகளோடு பொருந்தா விட்டாலும் கடினமான சிக்கல்; எழலாம். எந்த சூழலை மாணவர்கள் கற்கிறார்களோ அதன் அடிப்படை பொருளைக் அகராதி அல்லது சொற்களஞ்சியத்தின் வழியாகப் புரிந்து கொள்ளாவிட்டால் முழு பயிற்சியும் பயனற்றதாகும். தாங்கள் புரிந்து கொள்ள இயலாத கடினமான மொழியில் மாணவர்கள் கற்க நேரிடின், அவர்களிடம் அதன் பொருளையோ, மொழி வடிவத்தையோ கலந்துரையாட செய்வது பொருள் செயலாகும். வெவ்வேறு மொழி ஆசிரியர்கள் வெவ்வேறு சிக்கல்களை சந்திக்கிறார்கள். ஆசிரியர்கள் வெவ்வேறு பின்னணியுள்ள, வெவ்வேறு திறமையும், கவனமுமுள்ள குழந்தைகளைக் கையாள வேண்டியுள்ளது. இலக்கியத்தை தாய் மொழிவழி கற்பிப்பதற்கும் இரண்டாம் மொழிவழி கற்பிப்பதற்கும் உள்ள வேறுபாட்டை அவர்கள் புரிந்து கொள்வது அவசியம். தொடக்க நிலை வகுப்புகளில் பயன்படுத்தும் மொழிப்பாட நூல்கள் தாய்மொழி கற்பிக்க பயன்படும்; நூல்களை விட எளிதாக இருக்க வேண்டும். இரண்டாம் மொழியைக் கையாளுவதில் ஆசிரியர்களுக்கு உள்ள புலமையும், திறனும் அவவிமான அளவுகோல்கள் ஆகும். மொழி கற்பித்தல் வெற்றிகரமானதாக இருக்க வேண்டுமாயின் நமக்கு செறிவு நிறைந்த ஆசிரியர் பயிற்சி திட்டங்கள் தேவைப்படுகின்றன என்பது தெளிவு.

### தங்கள் முன்னேற்றத்தை ஆய்ந்தறிக 7

1. இலக்கியத்தைப் கற்பதனால் வளரும் திறன்?

   (அ) படித்தல்

   (ஆ) எழுதுதல்

   (இ) பேசுதல்

   (ஈ) கவனித்தல்.

2. மொழியை வகுப்பறையில் விளையாட்டு முறைமூலம் கற்பிப்பதால் என்னென்ன திறன்கள் வளர்கின்றன?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

குறிப்புகள்

3. தொடக்க மற்றும் உயர்தொடக்க பாடநூல்களில் பயன்படுத்தப்படும் இலக்கிய வடிவங்களை வரையறுத்துப் பட்டியலிடுக.

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

4. தொடக்க நிலை வகுப்புகளில் அடிப்படையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள இலக்கிய வடிவம் எது?

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

## 7.6 தொகுப்புரை

- இலக்கியம் எல்லா வகைப்பட்ட எழுத்துகளையும் உள்ளடக்கியது. ஆனால் படைப்பாற்றலை வளர்ப்பதும் கற்பனையாக எழுதுவது இதனுள் முக்கியமான கூறுகளாக உள்ளன. விளம்பரம்; மற்றும் தகவல் இலக்கியம் இலக்கியத்தின் உண்மையான வடிவங்களல்ல.
- இலக்கியம்இரண்டு பிரிவுகளாலானது படைப்பு இலக்கியம், தொகுப்பு இலக்கியம் படைப்பிலக்கியம் குறிக்கோளானது மகிழ்ச்சி தருவதும், கற்பனையை உருவாக்குவது உணர்திறனை வளர்ப்பதுமாகும். இதில் கதை, செய்யுள், கட்டுரை, நாடகம் போன்றவை அடங்கும். ஆனால் தகவல்கள் பெறுவதும், உண்மைகளை சேகரித்தல் வைத்திருப்பதும் சிக்கல்களை கையாளுதல்; போன்றவை செய்தித்தாள், அகராதி, உலக அகராதி, அறிவியல் நூல்கள் தொகுப்புகள் போன்றவை தொகுப்பு இலக்கியத்தின் வடிவங்கள் ஆகும்.
- மொழி கற்பித்தலில் இலக்கியத்திற்குப்பதிலாக அச்சடிக்கப்பட்ட விளம்பரங்கள் / கேலிசித்திரங்கள்/ போன்றவையும் பயன்படுத்தலாம்.
- இலக்கியத்தை அடிப்படையில் மூன்று வகைப்படுத்தலாம் அவை

  உரைநடை – (கதை, நாவல், தன்வரலாறு மற்றும் பணக்கட்டுரை)

  செய்யுள் (மரபுக் கவிதைகள்)

  நாடகம்

குறிப்புகள்

- மொழிவகுப்பில் மூன்று வடிவங்களில் இலக்கியம் பயன்படுகிறது. மொழிவடிவம், இலக்கிய வடிவம், ஆளுமை வளர்ச்சி வடிவம்.
- ஒரு மொழியை இரண்டு முறைகளில் கற்க கொள்ளலாம்.

  1. மொழியைக் கையகப்படுத்துதல் (பெற்றுக்கொள்ளுதல்) 2. மொழியைக் கற்றுக் கொள்ளுதல் 1. முறையான கற்பித்தல் இல்லாமலேயே இயற்கையான முறையில் மொழியைப் பெற்றுக் கொள்ளுதல் மொழியைக் கையகப்படுத்துதல் ஆகும். 2. மொழியைக் கற்றுக் கொள்ளுதல் என்பது முறையான வகுப்பறைச் சூழலில் அதைக் கற்றுக் கொள்வது ஆகும். இலக்கியம் கற்கும் சூழலை மொழியைப் பெற்றுக்கொள்ளும் சூழலுக்கு மிகவும் அருகில் கொண்டு வருகிறது.
- வகுப்பறையில் பயன்படுத்தும் இலக்கியம் குழந்தைகளுக்கு பொருத்தமானதாகவும் விரும்பத்தக்கதாகும் இருக்க வேண்டும்.
- இலக்கியத்தின வழியாகக் குழந்தைகள் படைப்பாற்றல் திறன், எந்த நூல்;குறித்தும் குறிப்பு எழுதும் திறன், தொகுக்கும் திறன், புரிந்து கொள்ளும திறன், போன்றவற்றை மேம்படுத்திக்கொள்ள முடியும். மேலும் கற்பனைத் திறன், சுற்றுச்சூழல் உணர்திறனையும் வளர்க்க முடியும்.
- குழந்தை இலக்கியம் வழியாகக் குழந்தைகளின் கற்பனை, கற்றலில் ஈடுபாடு மற்றும் தன் திறமையை வெளிப்படுத்தும் திறனை வளர்க்க முடியும்.
- இலக்கியம் அடிப்படைத் திறன்களை வளர்ப்பதோடு மொழியின் பிற பகுதிகளான வெளியிடுதிறன், படைப்பாற்றல், சொற்களஞ்சியம், இலக்கணம் போன்றவற்றில் முக்கியப் பங்களிக்கிறது.

**ஒப்படைப்பு**

நூலகத்திற்காக உங்கள் வகுப்பறையில் ஒரு மூலையை ஒதுக்கி, தேர்வு செய்த புத்தகங்கள் மற்றும் அவற்றின் எண்ணிக்கை போன்றவற்றை பட்டியலிடுக.

## 7.7 வாசிக்க பரிந்துரைக்கப்பட்ட மேற்கோள் நூல்கள்.

1. Agrihotri,R.K.(2007) Hindi, An Essential Grammar,London, Routedge.
2. Krashen, Stephen D 1981 Principles and Practice in Second Language Acquisition, English Language Teaching series.London Prentice Hall International (UK)Ltd.

குறிப்புகள்


3. Widdowson H.G.1990 Aspects of Language Teaching , Oxford; Oxford University Press,

4. Working papers of the Summer Institute of Linguistics, 1997, University of North Dakota Session 1997 Volume 41.1

ler.letras.up.pt/uploads/ficheiros/6082.pdf10Nov.2011


## 7.8 இயல் நிறைவுப் பயிற்சிகள்

1. இலக்கின் அடிப்படையில் இலக்கியத்தின் பல்வேறு வகைகள் யாவை ?
2. ஒரு ஆசிரியராக இலக்கியத்தை பயன்படுத்தும்போது உம் அனுபவம் என்ன ?
3. மூல நூல்களை உம்முடைய மாணவர்களுக்கு சுட்டிக்காட்டுவீரா ? அல்லது தொகுப்புரையை மட்டும் தருவீரா ? காரணம் தருக.
4. மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதற்காக எவ்வகையான கற்றல் கருவிகளைப் பயன்படுத்துவீர் ?
5. இலக்கியத்தை பயன்படுத்துகையில் மொழியின் நான்கு அடிப்படைத் திறன்களுக்கும் எவ்வாறு பயிற்சி அளிப்பீர் ?
6. இதிகாச செய்யுள் என்றால் என்ன ? உதாரணம் தருக.
7. மொழிக் கற்பித்தலில் வெவ்வேறு இலக்கிய வடிவங்களை எவ்வாறு பயன்படுத்துவீர் ?
8. கதை அல்லது செய்யுளை தொடக்க வகுப்பு மாணவர்களுக்குத் தேர்வு செய்யும்போது எவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும் ?
9. மொழி கற்பித்தலில் இலக்கியத்தின் பயன்பாட்டை வரலாற்று கண்ணோட்டத்தோடு கலந்துரையாடுக.

குறிப்புகள்

# அலகு 8
# வகுப்பறையில் மொழிப்பாடம் கற்பிக்கும் முறைகள்

## அமைப்பு


8.0 அறிமுகம்

8.1 கற்றல் கருவிகள்

8.2 பாடத்திட்டம் தயாரித்தலின் முக்கியத்துவம், அவசியம்

8.3 பாடத்திட்டம் என்றால் என்ன?

8.4 பாடத்திட்டக் கூறுகள்

8.4.1 எதைக் கற்பிப்பது?

8.4.2 யாருக்கு கற்பிப்பது?

8.4.3 மதிப்பீட்டின் முறைகள்

8.4.4 பாடத்திட்டத்தின் கருவிகள்

8.5 பாடக்கொத்துகளின் முன்னேற்பாடு

8.6 மாதிரி பாடத்திட்டம்

8.6.1 துலிக்காவின் வகுப்பறை

8.6.2 சற்பராவின் அடர்ந்த காடுகள்

8.6.3 எழுத்துகளை கற்பித்தல்

8.6.4 ராதாவின் வகுப்பறை

8.6.5 கதை கூறும் நுட்பம்

8.7 சுவரொட்டியும் விளம்பரங்களும்

8.8 பாடத்திட்டத்தை எவ்வாறு உருவாக்ககலாம்?

8.9 தொகுத்தல்

8.10 பரிந்துரைக்கப்படும் வாசகங்களும் குறிப்புகளும்

8.11 அலகு நிறைவுபயிற்சிகள்

குறிப்புகள்

## 8.0 அறிமுகம்

குழந்தைகளுக்கு மொழிப்பாடம் கற்பித்தலின் பல வழிகள் உண்டு, பல்வேறு செயல்பாடுகளின் மூலம் கற்பித்தல், பாடத்தை விவரித்தபின் தொகுத்தல், பலவகையான கேள்விகளுக்குப் பதிலளிக்க குழந்தைகளைத் தயார் செய்தல், சிக்கல்களுக்குத்; தீர்வு காணும் நுட்பங்களைப் பயன்படுத்துதல், கணக்கெடுப்பு மற்றும் அவர்கள் விரும்பும் செயல்களில் ஈடுபடுத்துதல் போன்ற பல நுட்பங்கள் குறித்து முன்னரே விளக்கப்பட்டுள்ளது. மொழிப்பாடம் கற்பிக்கும் முறைகளில் ஒவ்வொரு நுட்பமும் ஒரு குறிப்பிட்ட வரைமுறையைக் கொண்டுள்ளது. சில ஆசிரியர்கள் எந்த கற்பித்தல் முறைகளையும் பின்பற்றால் அவர்களின் சொந்த நடையில் கற்பிக்கின்றனர். எடுத்துக்காட்டாக சில ஆசிரியர்கள் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடைகளைக் கூறி அவற்றை மனப்பாடம் செய்ய வைத்து வகுப்புத்தேர்வுகள் மற்றும் பொதுத்தேர்வுகளில் தேர்ச்சி பெறச் செய்வதை நாம் உணர்கிறோம். பொதுவாக, சில வகுப்புகளில் ஆசிரியர்கள் கட்டுப்பாடுடன் தமது கற்பித்தல் முறைகளை மாணவர்களை பின்பற்றச் செய்கின்றனர். ஆனால் சில வகுப்பறைகளில் ஆசிரியர்கள் மாணவர்களின் அறிவு திறனின் அடிப்படையில் புதுமையான நுட்பங்களை பயன்படுத்தி கற்றலானது நீண்டநாட்கள் மாணவர் மனதில் நிற்கச் செய்யும் வகையில் கற்பிக்கின்றனர். மாணவர்கள் வகுப்பறையை விட்டு வெளியில் சென்று சமுதாயச் சூழல் மூலமாகவும், குடும்பச் சூழல் மூலமாகவும அதிகமாகக் கற்றுக்; கொள்கின்றனர்.

தற்போதைய சிக்கல், மாணவர்கள் மொழியை எவ்வித திட்டமிடுதலும் இன்றிச் சொந்தமாக நன்கு கற்றுக் கொள்வாரகளானால் நாம் எதற்காக ஆசிரியர்களுக்கு மொழி கற்பித்தல் முறைகளை கற்பிப்பதலுக்கு வீணாக நேரத்தை செலவிட வேண்டும்? என்பதே ஆனால் வகுப்பறை கற்றல் மூலமாக மொழியை கற்றலும், வகுப்பறை அல்லாத சூழலில் மொழியை கற்றலும் ஆகிய இவ்விரண்டு கற்றல் சூழ்நிலைகளின் முடிவுகள் வெவ்வேறு விதமாகத்தான் இருக்கும் என்பதை தெளிவாக உணரச்செய்தல் அவசியம்.

பள்ளி என்பது, மாறுபட்ட வாழ்க்கைச் சூழல் மற்றும் திறன்களுடைய மாணவர்கள் அனைவரும் ஒரே வகுப்பில் அமர்ந்து அவர்களுக்கென வடிவமைக்கப்பட்ட பாடநூல்களைக் குறிப்பிட்ட கால அளவிற்குள் முறையாக கற்பதாகும். குடியரசு நாட்டில் வாழும் நாம், வெவ்வேறு சூழல்களிலிருந்து வரும் குழந்தைகளை முறையாக, தகுதியுள்ளவர்களாகவு மேம்படுத்துவதே நமது முக்கிய நோக்கமாகும். திறம்படக் கற்பித்தல் என்பது, குழந்தைகளைக்; குறிப்பிட்ட தருணத்தில் குறிப்பிட்ட நிலைகளில் அவர்களுக்குத் தேவையானவற்றைச் சிறந்த முறையில் கற்கச்செய்வதே. மேலும் கற்றலைச் சோதிக்க வலுவான மதிப்பீட்டு நுட்பங்கள் அவசியம் தேவை.

குறிப்புகள்

பள்ளியானது முறைப்படுத்தப்பட்ட கற்றலுக்கு தகுந்த சுயமதிப்பீட்டையும் தீர்மானிக்கும் திறனையும வளர்க்க உதவுகிறது. எனவே கொடுக்கப்பட்ட கலைத்திட்டம சிறந்து விளங்கவேண்டுமானால் நாம் கற்றல் முறைகளையும் வகுப்பறை செயல்பாடுகளைத் திட்டமிடுதலையும் நாம் மேம்படுத்த வேண்டும். வகுப்பறையை மேம்படுத்த திட்டமிடுகையில் முன், குழந்தைகள் நம்மிடம் வரும் முன்னரே அதிகம் அறிந்தவர்களாக இருப்பார்கள் என்பதை நம் மனதில் கொள்ள வேண்டும். எனவே கற்பித்தலுக்கு திட்டமிடும்போது வகுப்பறையில் உள்ள குழந்தைகளின் இன்றைய வாழும் சூழலுக்கேற்ப பாடத்தை தொடர்படுத்தி கற்பிக்க முயன்றால் கற்றல் சிறந்து விளங்க முடியும்.

இந்த அலகில் பல வகையான எடுத்துக்காட்டு கற்பித்தல் முறைகளை ஆராய்ந்து அவற்றில் சிறந்த ஒன்றை கற்பித்தலை விளக்கும் மாதிரியாக எடுத்துக்கொள்கிறோம்.

## 8.1 கற்றல் குறிக்கோள்கள்

இந்த அலகு பின்வருவனவற்றை தெரிந்து கொள்ள நமக்கு உதவும்.

- மொழியை கற்பித்தலில் உள்ள பண்டைய முறைகள் யாவை? அவற்றின் வரையறைகள் யாவை?
- பாடத்திட்டம் உருவாக்குவதன் அவசியம்.
- பாடத்திட்டம் என்றால் என்ன?
- நாம் ஏன் கற்பித்தல் திட்டம் விடுத்து பாடத்திட்டம் பற்றிக் கற்கும் காரணம்.
- தரமான பாடத்திட்டத்தை பயன்படுத்தலும் மதிப்பீடு செய்தலும்.
- பாடத்திட்டத்தில் உள்ள நன்மைகளும்; வாய்ப்புகளும்.
- தரமான பாடத்திட்டத்தை தயாரித்தல்.

## 8.2: கற்றல் குறிக்கோள்கள்

பாடத்திட்டத்தை உருவாக்குவதன் அவசியம்.

நாம் நீண்ட நேரம் செலவளித்து மொழிப்பாடத்தை கற்பிக்கவில்லை என்றாலும், பாடத்திட்டத்தை எவ்வாறு உருவாக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நாம் மொழி வகுப்பைக் கலைத்திட்டத்தில் ஏன்' வைத்திருக்கிறோம் என்றால் குழந்தைகள் கற்றலைத் தாய்மொழியில் அல்லது பிற முக்கிய மொழிகளில் தாங்களாகவே கற்றுக்கொள்பவர்களாக ஆகும். மேலும் முழுமையான பாட அறிவைக் கொண்ட சில ஆசிரியரி;கள்

குறிப்புகள்

எந்த வித முன்தயாரிப்புமின்றி வகுப்பறைக்குச் சென்று மாணவர்களின் தேவையை அறிந்து அவர்கள் நிலையில் நின்று செம்மையாகக் கற்பிக்கின்றனர் எனில் அவ்வகையான ஆசிரியர்கள் மாணவர்களின் தேவையை அறிந்து அவர்களுக்கான கலைத்திட்டத்தை தம் மனதில் கொண்டு கற்;பிக்கின்றனர் எனலாம்.

பள்ளியின் கட்டமைப்பு இயற்கையான சூழலில் மாணவர்கள் கற்பதிலிருந்து மாறுபட்டுள்ளது. முறையான வகுப்பறை கற்றலிலிருந்து முறைசாராக் கற்றல் முற்றிலும் மாறுபட்டுள்ளது என்பதை அறிந்து கொள்வது அவசியம் ஒரு தாய் தனது குழந்தைக்கு வீட்டில் ஒரு குறிப்பிட்ட மொழிப்பாடத்தைத் கற்பிக்கும் விதமும் அதே தாய் அதே குழந்தைக்கு பள்ளியில் கற்பிக்கும் விதமும் வேறுபட்டிருக்கும். மொழியானது அனைத்து நிலைகளிலும் அதன் அழகு, பொருள் வழி; மாறுபட்டு இருக்கும். எனவே மொழிப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் முறையாகத் திட்டமிடுதல் அவசியம்.

வீட்டில் கற்கும் குழந்தைகளின் கற்றல்; அனுபவம் வாயிலாகக் குற்றம் குறைகளுடன்; தானே திருத்திக் கொள்ளும் வகையில் உள்ளது. அவ்வகையான நெகிழ்வுத்தன்மையும் நேரமும் ஒருகுழந்தைக்கு பள்ளியில் கிடைப்பதில்லை, பள்ளியில் ஒரு துல்லியமான முழுமையான அமைப்பு மட்டுமே இருக்கும்.

குழந்தைக்கு அதே தாய் பள்ளியில் கற்பிக்கும் விதமும் வேறுபட்டிருக்கும் மனித மொழியானது தனிமனிதச் சூழலிலும், சமூச்சூழலிலும் மாறுபடும். ஒரு குழந்தை மொழிப்பாடத்தைத் தெளிவாகக் கற்க வேண்டுமெனில் அது; அதற்கு பொருத்தமான சூழலில் நன்கு கவனிக்கும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். எனவேதான் ஒரு பாடத்தை திட்டமிடுதல் அவசியமாகிறது. ஒரு வகுப்பறையில் உள்ள மாணவர்களில், தனிநபருக்காக, சமூகத்திற்காக, பண்பாட்டிற்காக, என மொழிப்பாடத்திட்டத்தை பொருத்தமாக உருவாக்குதல் என்பது சவாலான ஒன்று.

**உங்கள் முன்னேற்றத்தை ஆய்ந்தறிக – 1**

1. வீட்டில் மொழிப்பாடத்தைக் கற்க ஏற்படும் வாய்ப்புகளை விட பள்ளியில் கற்க ஏற்படும் வாய்ப்புகள்__________

   A. குறைவு  B. அதிகம்

   C. அதே அளவு  D. போதுமானதாக இல்லை.

2. குழந்தை சுற்றுப்புற சூழல்மூலம் தனது அறிவைப் பெருக்கிக் கொள்கிறது. குழந்தைகளை உற்று நோக்குவதன் மூலம் அனுபவ

குறிப்புகள்

வாயிலாக மேற்கூறிய வாசகத்திற்கேற்ப ஒரு எடுத்துக் காட்டை உன்னால் தர இயலுமா?

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

3. ஒரு மொழிப்பாடத்தை கற்பிக்க திட்டமிடுதல் ஏன் அவசியமாகிறது?

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

## 8.3. பாடத்திட்டம் என்றால் என்ன?

ஒரு வகுப்பறைச் சூழல் வழியாக கொண்டு பாடத்திட்டம் பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்.

ராஜஸ்தானில் இருக்கும் 'கோடா' என்ற கிராமப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பிற்கு மகிமா ஆசிரியையாக நியமிக்கப்பட்டார். அந்த வகுப்பில் 25 மாணவர்கள் இருந்தனர். NCERT புத்தகத்திலிருந்து பதினாறாம் பாடமாக ஜப்பான் என்ற பாடத்தைக் கற்பிக்க திட்டமிட்டார். அப்பாடமானது ஜப்பானின் பாரம்பரிய பண்பாடு திருவிழாக்கள் பற்றியது. உரத்த குரலில் அப்பாடத்தை படிக்கத் தொடங்கினார். ஆசிரியையின் கட்டளைப்படி குழந்தைகள் தங்கள் விரல்களை அவ்வரிகளில் வைத்தபடியே கவனித்தனர். ஆனால் உண்மையில் அவர்கள் கவனிக்கவில்லை. இரு பத்திகளை ஆசிரியை வாசித்த பின்னர் படிப்பதை நிறுத்தி ஜப்பான் நாட்டைப்பற்றிக் கூற ஆரம்பித்தார். குழந்தைகள் பொருள் விளங்காது ஆசிரியை கூர்ந்து பார்த்தனர். ஆனால் ஆசிரியை அதைப் பொருட்படுத்தாமல் பாடத்தை விளக்கிக் கொண்டிருந்தார். ஜப்பானைப் பற்றிய ஒரு அறிமுகம் தந்தபின் மீதமுள்ள பத்திகளின் வரிகளை படிக்க ஆரம்பித்தார். வகுப்பறையில் எவ்வித செயல்பாடுகளும் நிகழாமல் குழந்தைகள் அமர்ந்தபடியே இருந்தனர். நிறைய குழந்தைகள் விதவிதமான படங்களை வரைந்தனர். சில குழந்தைகள் அத்தியாயங்களுக்கு ஏற்ற வகையில் பூந்தொட்டி, படங்கள் மற்றும் பொம்மைகளின் படங்களைத் தயார் செய்தனர்.

கற்பித்தலுக்குப் பின் வகுப்பறையில் ஆசிரியை கரும்பலகையை நோக்கிச் சென்று கடின சொற்களையும் அதன் பொருளையும் எழுதினார். குழந்தைகளும் அவரைப் பின்பற்றி எழுதினர். வகுப்பறையை விட்டு

குறிப்புகள்

வெளியில் செல்லுமுன் மகிமா கரும்பலகையில் எழுதப்பட்ட வார்த்தைகளை நன்கு படித்து பின் தேர்வுக்குத் தயாராக வருமாறு மாணவர்களுக்குக் கட்டளையிட்டார். மேலும் அவர் குழந்தைகளிடம் அச்சொற்களையும் அவற்றின் பொருள்;களையும் கற்குமாறு மிகத் தெளிவாக எடுத்துக்கூறினார்.

## உங்கள் முன்னேற்றத்தை ஆய்ந்தறிக: 2

1. நீங்கள் மகிமாவின் கற்பித்தல் முறையை மதிப்பீடு செய்வீர்களானால், பின்வரும் குறிப்புகளில் ஒவ்வொன்றிற்கும் பத்திற்கு எத்தனை மதிப்பெண்கள் வழங்குவீர்கள்?
   - வகுப்பறை பங்கேற்பு
   - குழந்தைக் கற்பித்தல்
   - பாடத்துடன் சூழலை தொடர்புபடுத்துதல்
   - கற்பித்தலுக்கான முன்னேற்பாடு
   - பாடத்தைப் புரிந்து கொண்டிருத்தல்
   - மாணவர்களின் சுயகற்றலுக்கான நம்பிக்கையை ஏற்படுத்துதல்.

## 8.4 பாடத்திட்டத்தின் கூறுகள்

ரகு தயாரித்த தரமான பாடத்திட்டம் - ஒரு பார்வை.

1. கற்பிக்க வேண்டிய பாடப்பொருள்
2. சுயதயாரிப்பு
3. கற்பித்தல் முறை
4. தேவையான கற்றல் கருவிகள்
5. மதிப்பீடு செய்தல்.
6. பாடத்திட்டம் தோல்வியடைந்தால் மாற்று ஏற்பாடு

மாதிரி பாடத்திட்டமாக அமைக்கப்பட்டுள்ள இதனுள் ஏதேனும் சேர்க்க அல்லது மாற்ற விரும்பினால் அதைச் செய்து சிறந்ததாக மாற்றிக் கொள்ளலாம்.

### 8.4.1. என்ன கற்பிப்பது?

குறிப்பிட்ட வயதுள்ள கற்போரின் இயல்பு, கற்றலின் எதிர்பார்ப்புகளை மனதில் வைத்து, பாடநூல்களைத் தயாரிக்கின்றனர். புத்தகத்தில் உள்ள

கருத்துக்களை அமைப்பது நம் கையில் இல்லை. ஆனால் புத்தகங்களில் எந்தப் பகுதிகளைத் எப்படிச் சேர்க்கலாம் என்பதைத் தீர்மானிப்பது நம் கையில்; உள்ளது. நமது மாணவர்களின் திறனை அறிந்து அவர்களுக்கு எப்படிக் கற்பிப்பது? என முடிவு எடுக்கலாம். கீழ் வகுப்பு ஆசிரியர்கள் மாணவர்களின் தகுதிக்கேற்ப பல சிறப்பான பாடநூல்களிலிருந்து குறிப்பிட்ட பாடநூலை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. ஒரு ஆசிரியராக தங்களது மாணவர்களின் திறனை அறிந்து அவர்களுக்கேற்ற சிறந்த பாடநூல்களைத் தெரிவு செய்து அந்நூல்களிலிருந்து எவற்றை மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். ஒரு பாடப்புத்தகத்தில் 20 பாடங்கள் இருந்தாலும் அவை அனைத்தையும் கற்பிக்க வேண்டும் என்பது இல்லை. நாம் பாடங்களை குறைத்தோ அல்லது அதிகப்படுத்தியோ கற்பிக்கலாம். கொடுக்கப்பட்ட 20 பாடங்களில் 12 பாடங்கள் மட்டுமே நம்மால் நடத்தி முடிக்க முடியுமெனில் எதன் அடிப்படையில் அந்த பாடங்களை தெரிவு செய்துள்ளோம் ஏன்பதை அறிந்து அவற்றை மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும். இல்லையெனில் தொடக்கத்திலிருந்தே நன்றாக திட்டமிட்டு மாணவர்களின் கற்றலின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் 20 பாடங்களில் அந்த 12 பாடங்களை தெரிவு செய்ய வேண்டும். நாம் தேர்ந்தெடுக்கும் பாடப்பகுதிகளிலிருந்து மாணவர்களிடம் நாம் எதிர்பார்க்கும் கற்றல் வெளிப்பாடுகள் அமைகின்றனவா என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். முடிவாக நாம் தேர்ந்தெடுத்து கற்பித்த பாடப்பகுதிகள் மாணவர்களின் திறன்களை வெளிக்கொணர்நதவைகள் இல்லையா என்பதை தெரிந்து கொள்ளவேண்டும்.

## 8.4.2. யார் கற்பிப்பது?

நமது குழந்தைகளைப்பற்றி நாம் நன்கு அறிந்திருந்தால் மட்டுமே அவர்களின் திறமை, தகுதிக்கு ஏற்ப தரமான பாடத்திட்டங்களை அமைத்துக் கொள்ள முடியும். மாணவர்கள் நம்மிடம் வரும் முன்னர் அவர்கள் என்ன அறிந்திருக்கிறார்கள்? தற்போது எதைக் கற்பிக்க வேண்டும் என்பதை புரிந்து கொள்ளவேண்டும சிறிது கற்பித்தாலும் அதை அவன் முன்பே தெரிந்திருந்தானா அல்லது தெரியாமல் தடுமாறுகிறானா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அக்குழந்தை பயந்து கொண்டு புரியாமல் விழித்துக்கொண்டிருந்தால் பல வகுப்புகள் கடந்து அப்பாடமே முடிந்த பிறகும் அவனுக்கு எந்த விதக்கற்றலும் நிகழாமல் இருக்க அதிக வாய்ப்புகள் உள்ளன. கற்றல் கற்பித்தல் நோக்கங்கள், கருத்துக்கள் பற்றிய தெளிவு நம்மிடம் இருத்தல் வேண்டும். பாடப்புத்தகங்களில் சிலவற்றை தெரியாமல் தவறாக தெரிவு செய்திருந்தால் மாணவர்களுக்கு அதனை கற்பிக்கும் பாடப்பகுதிகள்,

குறிப்புகள்

கற்பிக்கும் நேரம் அதற்காகச் செய்யப்படும் செயல்பாடுகள் அனைத்தும் வீணாகக் கூடும். குழந்தைக்கு இரண்டாவதாக நாம் கற்பிக்கப்போகும். பாடப்பகுதியைப்பற்றி உள்ள முந்தைய அறிவு என்ன என்பதை கண்டுபிடித்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக 'தீபாவளிக் கொண்டாட்டம்' என்ற பாடத்தில் அக்குழந்தைக்கு தீபாவளி என்றால் என்ன என்று தெரிகிறதா என்பதை சோதித்து அதில் உள்ள சிக்கலான சொற்களை எளிய முறையில் கற்பிக்க வேண்டும். நாம் கற்றுக் கொடுக்கும் மொழி அக்குழந்தை தெரிந்த தாய்மொழியா அல்லது இரண்டாவது மொழியா அல்லது மூன்றாவது மொழியா என்பதை நாம் அறிந்து கொள்வது அவசியம் எடுத்துக்காட்டாக தமிழ் மொழி பேசும் குழந்தைக்கு அது தாய் மொழியாக இருக்கலாம். ஆனால் அக்குழந்தை ஆங்கிலத்தை முதல்மொழியாக கற்க நேரிடும் என்பதை புரிந்து அவ்வாறு உள்ள குழந்தைகளுக்கு தனிக்கவனம் செலுத்தி வகுப்பறையில் கற்பிக்க வேண்டும். இந்த வகையாக கற்போரை மனதில் வைத்து அவர்களுக்கேற்ப பாடத்திட்டத்தை தயார் செய்தல் நன்று ஆனால் முன்னர் குறிப்பிட்டதைப் போல் குழந்தைகள் வீட்டில் உபயோகிக்கும் தாய் மொழியையே ஆரம்ப காலங்களில் பள்ளிகளிலும் உபயோகிப்பது நல்லது.

## 8.4.3 கற்கும் மதிப்பீடு

நாம் குழந்தைகளின் தொடர் மதிப்பீட்டின் மீது கவனம் செலுத்தினால்; மாணவர்களின் கற்றலின் நிலை, பங்கேற்பு மேலும் அவர்களில் சில பாடங்களின் மீதுள்ள ஆர்வம் மற்றும் அவைகளின் விளைவுகள் பற்றி தெளிவாக தெரிந்து கொள்ளலாம். நாம் வகுப்புகள் நடத்தும்போது அவை நேர்மறையான விளைவைத் தராவிடில் நாம் அதை நிறுத்தி அப்பாடத்திட்டத்தை சரிசெய்து மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் மாணவாகளின் பங்கேற்பு நகிழும் வகையில் மற்றும் நேர்மறை பண்புகளை தரக்கூடிய வகையில் கற்பித்தல் செயல்பாட்டை அமைக்க வேண்டும். இது ஒரு நிலையான மதிப்பீட்டை ஏற்படுத்தும். சில நேரங்களில் ஆசிரியர் குழந்தைகளை சில செயல்பாடுகளில் ஈடுபடவைக்க நினைக்கின்றார். ஆனால் அவர் எதிர்பார்பது போல் நிகழ்வதில்லை. எனில் அச்செயல்பாடுகள் நன்கு திட்டமிடப்படவில்லை என்பதை குறிக்கிறது. நம் திட்டத்தின் மூலம் குழந்தைகள் எந்த அளவிற்கு முன்னேற்றத்தை அடைந்தார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு அவர்களுக்;காக வகுத்த திட்டத்தை முன்னேற்றமடையச் செய்வது சாலச்சிறந்தது. ஆகவே தொடர் மதிப்பீடு செய்வதால் இது சாத்தியமாகும். எனவே நாம் வகுத்த திட்டம் எளிமையாக இருப்பதை அவ்வப்போது சரி பார்த்த பின்பு தொடர் மதிப்பீட்டை சரிசெய்து கொள்ளலாம்.




## 8.4.4 எவ்வாறு கற்பிப்பது?

திட்டமிடுதலுக்குமுன் ஒரு வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு எவ்வகையான கற்றல் கற்பித்தல் முறை பொருத்தமானது எனத் தீர்மானிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக நம் வகுப்பில் உள்ள குழந்தைகளை சிறு சிறு குழுக்களாக பிரித்து கற்பிக்க முடிவு செய்தல் அவசியம். திட்டமிட்டவாறு வகுப்பின் செயல்பாடுகள் நடைமுறைப்படுத்த முடியாமல், அல்லது ஆசிரியர்கள் தங்களது திட்டத்தின்படி பாடத்தை குறித்த நேரத்தில் முடிக்க முடியாமலோ போகலாம். சில வேலை ஆசிரியர் பாடத்தை விளக்க எடுத்துக்கொள்ளும் நேரம் அதிகமும் ஆகலாம். அந்நிலைகளில் ஆசிரியர்கள் முடிக்க முடியாமல் போன அத்தியாயத்தையும் இனி கற்பிக்க இருக்கும் அத்தியாத்தையும் சேர்த்து குறித்த நேரத்தில் எந்த வித இடையூறுமின்றி முடிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

புதுமையான கற்பித்தல் முறைகளின் மூலம் வகுப்புகளை கையாள்வது நல்லது அவ்வாறு செய்ய ஆசிரியர்கள் பாடப்பகுதியில்; கருத்து தெளிவு பெற்ற வல்லுநர்களாக இருத்தல் அவசியம். அப்பொழுதுதான் வகுப்பில் ஏற்படும் சிக்கல்களை தனிசெயல்பாடுகள் அல்லது குழசெயல்பாடுகள் வழியாகக் கையாண்டு பாடக்கருத்தை மாணவர்களுக்கு தெளிவாக்க முடியும். எனவே பாடத்திட்டம் நெகிழும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். நாம் கற்பிக்க ஆரம்பிக்கும் போது கற்பித்தல் பொருள்களை தயார் நிலையில் வைத்திருத்தல் அவசியம். பாடத்திட்டம், பயிற்சித்தாள், விளக்கப்பட அட்டை, படங்கள், பயிற்சிபுத்தகம் போன்ற அனைத்து கற்பித்தல் பொருட்களும் நம்மிடம் இருத்தல்வேண்டும். இவைகளை மாணவர்; செய்கையில் மொழிப்பாட புத்தகங்கள் நம்மிடம் இருத்தல் அவசியம். எடுத்துக்காட்டாக பட அட்டைகள் எழுத்தட்டைகள் போன்றவை கற்பித்தலில் பெரும்பங்கு வகிப்பதாகவும் வெவ்வேறு காரணங்களுககுகம் பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்கும். இவையனைத்திற்கும் மேலாக ஒரு ஆசிரியருக்கு பக்கபலமாக இருப்பது பாடப்புத்தகம் மட்டுமே.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 2**

1. குழந்தையின் கற்றல் பாதையில் முதன்மை வழிகாட்டியாக இருப்பது.

   A) ஆசிரியர்

   B) பெற்றோர்

   C) குழந்தையே

   D) கலைத்திட்ட மேம்பாட்டின்

குறிப்புகள்

2. வகுப்பறையில் உள்ளகுழந்தைகளின் எண்ணிக்கை மற்றும் தரம் கற்பித்தலுக்கு எவ்வளவு முக்கியமானது?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

3. பாடத்திட்டத்தின் நெகிழ்வு எதற்கு வழிவகுக்கும்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

4. நாம் ஏன் தாய் மொழியைக் குழந்தைகளின் ஆரம்ப வகுப்புகளில் பயன்படுத்துவது அவசியம்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## 8.5. எப்போது திட்டமிடுதல் வேண்டும்?

பெரும்பாலான பள்ளி நிர்வாகிகள் தம் ஆசிரியர்கள் தகுந்த விரிவான பாடத்திட்டங்களையும் வருடத்திற்கான குறிப்பேடுகளையும் சரியான முறையில்; முடித்தால் மட்டுமே கல்வியாண்டின் வளர்ச்சி முழுமை பெறும் என்பதில் கவனம் செலுத்துகின்றனர். இது ஆசிரியர்களின் கடும்உழைப்பை மட்டும் குறிக்கும்; கற்றல் விளைவு எதுவும் இராது. அப்பள்ளி; தினமும் மற்றும் வாரந்தோறும் வளர்ச்சி அறிக்கை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றனர். கற்றல் விளைவுகள் ஏற்படாத பொழுது இவை அனைத்தும் பயனற்றது என்பதை எவரும் உணர்வதில்லை. இவ்வமைப்பு மாணவர்களின் திறமைகளை வளர்க்க முக்கியத்துவம் தருவதில்லை. மாறாக பாடப்புத்தகங்களை உருவாக்கியவர்களும் ஆசிரியர்களும் மாணவர்களுக்காக பரிந்துரைத்தவைகளுக்கு மாறாக உறுதி அளிக்கிறது. மேலும் இவ்அமைப்பு குழந்தைகளிடம் எந்த வித நம்பிக்கையும் தருவதில்லை, புதுமையான, வழிகளில் கற்றல் கற்பித்தல் முறைகளில் ஈடுபடவும் வழிவகுப்பதில்லை. ஆனால் குழந்தை தன்னிச்சையாக மொழியை கற்றுக்கொள்ளும் அடித்தளமாக அமைவதற்கு மாறாக உள்ளது.

குறிப்புகள்

பாடம் எவ்வளவு நாள் முன்னதாக திட்டமிடப்படுகிறது? இந்த வினாவிற்கு சரியான விடையளிப்பது கடினம் ஏனெனில் கற்றல் என்பது தொடர்ச்சியான மாறுதல்களைக் கொண்டிருக்கிறது. ஆசிரியர் மாணவர்களின் மனநிலையோடு ஒத்திசைந்து அவர்களின் மன ஆற்றலை புரிந்து கொண்டு அவர்களின் ஆர்வம், பங்கேற்றல் கற்றலில் ஈடுபாடு, சவால்களுடன் கூடிய செயல்பாடுகளில் ஈடுபடுதல், தெளிவான கொள்கைகள் போன்றவற்றை நன்கு தீர்மானித்து உறுதி செய்ய வேண்டும். மேற்கூறிய கருத்துகள் இல்லாத திட்டத்தை வைத்து ஆராய முடியாது. பாடத்திட்டமானது ஒருமாணவன் அதுபற்றி தெளிவாகத் தெரிந்து கொள்ள வினா கேட்க அதற்கு பதிலளிக்கத் தேவையான பாதையை வகுக்குமாறும் இருத்தல் வேண்டும். மாணவன் தனது ஐயங்களைத் தெளிவு செய்வதற்கும் கருத்துகளை சேர்க்கவும் தெளிவு செய்வதற்கும், வழிவகுப்பதாக் அமைய வேண்டும். ஆசிரியர்களின் திட்டம் பாடத்திலிருந்து மாறுபட்டு இருந்தால் பட்சத்தில் மாணவர்கள் தங்களின் சொந்த கருத்துகளுடன் கூடிய ஒரு திட்டத்தை பாடத்துடன் ஒருங்கிணைந்துச் செயல்படுத்த அனுமதிக்க வேண்டும்.

மாணவர் சுயவிருப்பத்துடன் பங்கேற்றலில் ஆசிரியர் தனிக்கவனம் செலுத்துவதுபோல,; தாம் ஊக்குவித்து மாணவர்செயல்களில் பங்கேற்கச் செய்வதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஆசிரியர் மாணவர்; செய்யும் பிழைகளை சிவப்ப மையால் சுட்டிக்காட்டுவதற்கு பதில் அவனுடைய தவனை அவன் ஏன் செய்தான் என்று ஆராய வேண்டும். இதனையே பிழை பகுப்பாய்வு, என்று கூறுவர் பிழை செய்வது ஒரு நோயல்ல. ஆராயப் படவேண்டியது. அதற்கான திட்டங்களை தகுந்த முறையில் வகுத்து குழந்தைகள் அத்தகைய பிழைகளை மீண்டும் செய்யாதிருக்க அதிக கவனம் செலுத்த வேண்டும்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 4**

1. பின்வரும் வாக்கியத்தை பூர்த்தி செய்க.

   பொதுவாக ஆசிரியர்கள் முக்கியத்துவம் தருவது ___________நிறைவு செய்வது ___________.

2. மாணவர் மையப் பாடத்திட்டத்தில் எதனை முக்கியக் காரணியாக இத் துணை அலகு; விவாதிக்கிறது?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

குறிப்புகள்

3. பாடம் நடத்துகையில் அதில் உள்ள ஒரு கருத்திற்காக குழந்தைகளை முக்கிய பங்கேற்றுச் செயல்பட அனுமதித்தால், அது பாடத்திட்டத்தில் எவ்வகை மாறுபட்ட விளைவை ஏற்படுத்தும்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

4. பாடத்தை தொடங்குமுன் அப்பாடத்தை எவ்வாறு ஆராய்ந்து பாடத்திட்டதைத் திட்டமிடுவீர்கள்.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## 8.6 மாதிரி பாடத்திட்டங்கள்

தற்போது நாம் சில பாடத்திட்டங்களை ஆய்வு செய்து அத்திட்டங்களில் உள்ள வழிமுறைகளை இங்கு காணலாம். பல்வேறு சூழல்களிலிருந்து பெறப்பட்ட இப் பாடத்திட்டங்களை ஆசிரியர் மாணவர்களுக்கு கற்பிப்பதில் எவ்வகையில் அவற்றைப் பயனுள்ளதாக எடுத்துக்கொள்கிறார் அல்லது புறக்கணிக்கிறார்? அந்த ஆசிரியர் எந்த அளவு சிறந்த முறையில் வகுப்பில் தனது பங்களிப்பை தருகிறார் அல்லது புறக்கணிக்கிறார்; எந்த அளவு கற்றல் கற்பித்தல் குறிக்கோள்களை அடைவ செய்கிறார்.

## 8.6.1 மாதிரி பாடத்திட்டம் 1 துலிகாவின் வகுப்பு

இது துலிகா என்ற ஆசிரியரின் இண்டாம் வகுப்பு பாடத்திட்டம் நாம் இங்கு அவருடைய பாடத்திட்டத்தைப் பற்றி ஆய்வு செய்யலாம்.

துலிகா என்பவர் பீகாரில் உள்ள கரியான்பூர் என்ற கிராமப்புறப் பள்ளி ஆசிரியர் அப்பள்ளியின் ஒரு புறம்; கிராமமும் மறு புறம்; காட்டுப்பகுதியும் இருந்தன. அங்கு வாழும் மக்களின் முதன்மைத் தொழல் விவசாயம். சில பெற்றோர் நகரில் கட்டடத்தொழிலாளராய், ரிக்ஷா இழுப்பவர்களாய், மரவேலை செய்பவர்களாய், வியாபரியாகளாய் பணிபுரிந்து வாரத்திற்கு ஒரு முறை மட்டும் வீடுதிரும்புவர்; பெரும்பாலான குழந்தைகள் விவசாயத்திலும் தங்கள்; உடன் பிறந்த குழந்தைகளை கவனிப்பதிலும், உணவு சமைப்பதிலும் அவர்களின் தாய்மார்களுடன் உதவிக்காக சென்று விடுகின்றனர். பெரும்பாலான குழந்தைகளின் பெற்றோர் படிப்பறிவு அற்றவர்களாகவும்,

குறிப்புகள்

சிலர் ஆரம்பக்கல்வி மட்டும் கற்றவர்களாகவும், உயர் நிலைக்கல்வி கற்றவர்களாக சிலர் மட்டுமே உள்ளனர். அவருடைய வகுப்பில் உள்ள குழந்தைகள் நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் அல்லது புத்தகங்கள் படிப்பதில் எந்த வித ஈடுபாடும் இல்லாமல் இருந்தனர்.

துலிகா, முப்பது மாணவர்கள் கொண்ட இரண்டாம் வகுப்பு ஆசிரியை வீட்டில் தமிழ் மொழி பேசும் குழந்தைகளுக்கு பள்ளியில் பயிற்று மொழி ஆங்கிலமாக இருந்தது. அந்த வகுப்பில் உள்ள குழந்தைகள் ஆங்கில எழுத்துகளை அடையாளம் கண்டு சில வார்த்தைகளை பேசக் கூடியவர்களாகவும் ஆனால் அவர்களிடம் கொடுக்கப்படும் புத்தகங்களில் உள்ள சொற்களைப் புரிந்து படிக்க முழயவில்லை. இந்த எடுத்துக்காட்டு அவள் நடத்திய வகுப்பு பாடக்குறியிலிருந்து எடுக்கப்பட்டது. அது தமிழ்நாடு மாநில இரண்டாம் வகுப்பு பாடப்பகுதியில் உள்ள பத்தாவது அத்தியாயத்திலிருந்து எடுக்கப்பட்ட கதையின் தலைப்பு 'சஷசமத்ரா'.

துலிகா தன் வகுப்பில் உள்ள குழந்தைகளிடம் பாடம கற்பிக்கும்போது தமிழ் மொழியிலும். ஆங்கிழ மொழியிலும் பேசுவது வழக்கமாகும். குழந்தைகளும் அவர் கேட்கும் கேள்விகளுக்கு தமிழ் விடைதர மொழியையே உபயோகிப்பர். அவ்வாறு செய்வதை தடைசெய்யாமல் குழந்தைகளை சிறுசிறு குழுக்களாகப் பிரித்து அமரவைப்பதால் ஒருவருக்கொரு வர பேசி தம் பாடப்புத்தகத்தை புரிந்து கற்றுக்கொள்கின்றனர் அவர் படித்தல், எழுதுதல், பேசுதல் மற்றும் கேட்டல் திறன்களுக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்று நினைப்பார். இதனால் குழந்தைகள் நன்கு புரிந்து கற்றல் மேம்பாட்டுடன் மொழிப்பாடத்தை கற்றுக் கொள்கின்றனர்.

ஆசிரியர் துலிகா, இரு நண்பர்கள் வீட்டிற்கு செல்லும் வழியில் ஒரு கரடியை பார்க்கும் கதையை பற்றிய ஒரு பாடத்தை கற்பிக்கத் தொடங்கும்; போது குழந்தைகளிடம் முதலில் அவர்களது சுற்றுப்புற சூழலில் காணப்படும் விலங்குகள் பற்றிய கேள்விகளை கேட்க வேண்டும் என முடிவெடுக்கிறார். அவர் அக்கதையை ஒரு வாரத்திற்குள் கற்பிக்க வேண்டும் என்பதால் தினமும் இரண்டு அல்லது மூன்று முறை அக்கதையைத் தான் வாசித்த பின்னரே அவ்வகுப்பிற்குச் சென்று 35 நிமிடங்கள்; கற்றுக்கொடுப்பார். அவருடைய கற்பித்தல் நோக்கங்களும், பாடத்திட்டத்தின் குறிப்புகளும் பின்வருமாறு அமைந்துள்ளன.

- வகுப்பு மாணவர்களை ஓவியச் செயல்பாடுகளில் ஈடுபடுத்துதல்.
- மாணவர் தங்களிடையே பேசவும் ஆசிரியருடன் பேசவும் வாய்ப்பளித்தல்.
- படங்களைப்பற்றி மாணர்களை பேச வாய்ப்பளித்தல்.

குறிப்புகள்

- குழந்தைகளை அக்கதையை படிக்கச்செய்து புரிந்து கொள்ள வைத்தல்.
- ❖ குழந்தைகளை, விலங்குகளின் பெயர்களை எழுத வைத்தல்.
- ❖ குழந்தைகளை அக்கதையின் முடிவை கணிக்கச் செய்தல்.
- ❖ அவர்களின் சுற்றுச் சூழல்களில் காணப்படும் விலங்குகள் பற்றி பேச வாய்ப்பளித்தல்.

அவருடைய தினசரி பாடத்திட்டம பின்வருமாறு அமைந்துள்ளது.

**முதல்நாள்**

1. விலங்குகளின் பெயர்களை குழந்தைகளுக்குப் பழக்கமாகும் வரை எழுத வைத்தல்.
2. குழந்தைகளை அவர்களின் சுற்றப்புறச் சூழல்களில் காணும் விலங்குகளின் பெயர்களை எழுதச்செய்தல். பட்டியலிட்ட விலங்குகளின் பெயர்களில் அவர்களுக்கு பிடித்த விலங்களின்; பெயரை வட்டமிடச் செய்தல்.
3. பலகையில் எழுதப்பட்டிருந்த விலங்குளின் பெயர்களை படிக்கச் செய்து அவர்களுக்குத் தெரிந்த மொழி விளையாட்டு மூலம் அந்த விலங்குகள் எழுப்பும் ஓசையை ஒலிக்கச் செய்தல்.

**இரண்டாம் நாள்:** குழந்தைகளிடம் கணிப்புத்திறனை வளர்த்தல்

**செயல்முறை**:

1. அங்கு கொடுக்கப்பட்ட மூன்று படக்கதைகளை குழந்தைகள் சிறது நேரம் உற்று நோக்கச் செய்தல்.
2. குழந்தைகளை அந்த கதைகளின் மையப்பகுதியை கவனிக்கச் செய்தல்.
3. அவர்களுடைய அனைத்து கணிப்புகளையும் பலகையில் எழுதச்செய்தல்.
4. அந்தக் கதையை பாராட்டும் வகையில் பரிசுகளை வழங்கச் செய்தல்.

**மூன்றாம் நாள்: குழந்தைகளால் தரப்பட்ட கணிப்புகளை வைத்து கதையை முடிக்கச் செய்தல்.**

**செயல்முறை**:

1. முழுக்கதையையும் சத்தமாக படிக்கச்செய்து அக்கதையில் குழந்தைகளுக்கு மிகவும் பழக்கமான (ஜியான், பாலு, கால்பந்து, மித்ரா, டாடி, மஹி, நாக், முர்தா, ராம், விகம் போன்ற) வார்த்தைகளை பலகையில் எழுதவைத்தல்.

குறிப்புகள்

2. குழந்தைகளை அவ்வார்த்தைகளை அவர்களுடைய தாளில் எழுதவைத்தல்.

3. குழந்தைகளை முதல்பக்கத்தில் உள்ள ('கியான்' 'கபில்பந்து' போன்ற) வார்த்தைகளை வட்டமிடச் சொல்லல், அதேபோல் மூன்றாவது பக்கத்தில் இருக்கும் வார்ததைகளை ('மஹி' 'கான்' 'நாக்' போன்றவைகளையும்) வட்டமிடச் செய்தல்.

4. ('பாத்தய யாயா') வார்த்தை விளையாட்டை குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடுதல்.

**நான்காம் நாள்**

கதையின் ஆரம்ப பகுதியைப் படித்துக் காட்டி அதில் உள்ள கடின சொற்களுக்குப் ;பொருளைக் கவணித்து எழுதுமாறு கேட்டுக்கொள்ளல்.

**ஐந்தாம் நாள்**

இயலின்; முடிவில் கொடுக்கப்பட்ட சொற் பயிற்சியை குழந்தைகளுடன் சேர்ந்து செயல்படுத்துதல்.

**ஆறாம் நாள்**

இயலின் முடிவில் கொடுக்கப்ட்ட சொற்றொடர் அளவு பயிற்சியை குழந்தைகளுடன் சேர்ந்து செய்தல்.

## தினசரி திட்டத்தை ஆய்வு செய்ததை தொகுத்தல், ஆய்வு செய்தல்.

**முதல் நாள்**

துலிகா குழந்தைகளிடம் அவர்களைச் சுற்றி அவர்கள் பார்த்த விலங்குகளைப் பற்றி கூறுமாறு கேட்டுக்கொள்கிறார். பிறகு அவர் அந்த விலங்குகளின் பெயர்களைப் பலகையில் எழுதுகிறார். குழந்தைகள் பலகையில் எழுதப்பட்ட பெயர்களைப் பார்தது எழுதச் சொல்லுதல். குழந்தைகள் முதலில் தங்களுக்கு பிடித்த செல்ல பிராணிகள் பற்றிக் கூறிவிட்டு பிறகு காட்டு விலங்குகளைப் பற்றி கூறுகின்றனர். அனைத்து வார்த்தைகளையும் எழுதி முடித்தபின் அவர் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடுதல் அந்த விவீளாட்டில் ஆசிரியர் கூறும் விலங்கின் சத்தத்தைப் போல் சத்தமிட்டுக் காண்பிக்குமாறு குழந்தைகளை கேட்டுக்கொள்ளல். பிறகு அவர் பலகையில் எழுதப்பட்ட விலங்குகளின் பெயர்களைகூறச் சொல்லுதல், ஆசிரியர், குழந்தைகளுக்கு விலங்குகளின் பெயர்களை ஞாகப்படுத்திக் கூறியபின் அவற்றின் பெயர்களை அவர்களிடம் கொடுக்கப்பட்ட பிரதியில் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறார். பிறகு அவர் குழந்தைகளிடம் அவர்களுக்கு பிடித்த விலங்குகளிடம் படங்களை வரையச் செய்து அவற்றின் பெயர்களை

குறிப்புகள்

வட்டமிட்டு சேர்த்து காண்பிக்கக் கேட்டுக்கொள்கிறார். துலிகா வகுப்பில் உள்ள குழந்தைகளை வட்டமிட்டு நிற்கச் செய்து அவர் கொடுத்த செயல்பாடுகளவழியாக பாதியில் விட்டிருக்கும் குழந்தைகளுககுக உதவிசெய்து பாடத்தை முடிக்க வைக்கிறார்.

## இரண்டாம் நாள்

துலிகா சில படங்களை வகுப்பில் கொண்டு வந்தார். குழந்தைகளிடம் அப்படங்களைப் பார்த்து கதையைக் கூறுமாறு கேட்டுக்கொண்டார். குழந்தைகள் கூறியது என்னவென்றால், இரண்டு சிறுவர் ஒரு காட்டில் சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது அங்கு ஒரு கரடி வந்தது ஒரு சிறவன் மரத்தின் மேல் ஏறி அமர்ந்து கொண்டிருக்கிறான் என முடித்தனர். பின்பு சில படங்களைக் காட்டி கேள்விகளை கேட்டு பதில் கூறச்செய்தார். முதலில் குழந்தைகள் தயங்கினர். பிறகு அப்படங்களை பார்த்த வண்ணம் தங்களின் கற்பனையை கதைகளாகச் கூற ஆரம்பித்தனர் துலிகா அவர்களைப் பாராட்டி ஊக்குவித்தார்.

குதையைச் சத்தமாக படிப்பதாகக் கூறினார். அவ்வாறு படிக்கையில் மாணவர்கள் அவர்களின் விரல்களை வைத்து கவனித்தனர். பாதி மாணவர்கள் அவர் கூறியதைப் போலவே மெல்லிய குரலில் வாசித்தனர். வாசிக்கத்தெரியாத சிலர் அக்கதையைச் கவனமாகக் கேட்டனர். அவர் மாணவர்களை அவர்களின் இருக்கைகளில் படிக்க தெரிந்தவர்களை, படிக்கத்தெரியாதவர்களின் அருகில் உதவு செய்யும் வகையில் அமர்த்தினார். ஆசிரியர் எவ்வாறு நண்பர்கள் கரடியை நேரடியாக சந்தித்தனர் எனக்கூறியவுடன் கதையை நிறுத்தி அதன் பிறகு என்ன நடந்திருக்கும் என குழந்தைகளிடம் கேட்டார். குழந்தைகள் பல முடிவுகளைப் கூறினர் அவர் குழந்தைகள்; பெயரை எழுதி அவர்; கவனித்தலையும்; எழுதினார்.

## மூன்றாம் நாள்

இன்று துலிகா அந்த கதையை மீண்டும் மீண்டும் படித்துக்காட்டி முன்பு எங்கு நிறுத்தினாரோ அந்த இடத்திலேயே நிறுத்தினார். அவர் முன்பு செய்ததைப் போலவே மறுபடியும் செய்து அவர்களிடம் கதையின் முடிவை கவனித்துக் கூறச்சொல்லி தொடர்ந்து படித்துக் காண்பித்தார். கதை கூறி முடித்தவுடன் துலிகா கதையில் வரும் கதாபாத்திரங்களைப் பற்றி விளக்கிக் கூறினார். அவர் அவர் குழந்தைகளிடம், நண்பர்களின் நடத்தை எப்படி இருந்திருந்தது? அவர்களுடைய நட்பு என்னவாயிற்று? குழந்தைகள் தமக்கு இவ்வாறு நடந்திருந்தால்; என்ன செய்திருப்பர் என்பன போன்ற கேள்விகளை வினவினர்.

பிறகு ‘பாலு’ என்ற வார்த்தையை பலகையில் எழுதி அவ்வார்த்தையை கதையில் வட்டமிடச்சொன்னார். எத்தனை முறை அந்த வார்த்தை கதையில்

வந்துள்ளது? என வினவினார். இப்படி மேலும் சில வார்த்தைகளான புதர் மரஉச்சி போன்றவைகளைப் பற்றி கேட்டார். வார்த்தையைக் கண்டுபிடிக்கும் விளையாட்டை முடித்தபிறகு இறக்காதவரைக் கண்டுபிடி '(பெடியாயாயா)' என்ற விளையாட்டை குழந்தைகளுடன் சேர்ந்து விளையாட ஆரம்பித்தார். இந்த விளையாட்டில் அனைத்து குழந்தைகளும் இறந்தவர்களைப் போல நடிக்க வேண்டும். பேடியா என்பவர் தாக்குபவர் போடியாவின் வேலை இங்குமங்குமாக சென்று இறந்தவர்கள் போல நடிப்பவர்களைக் கண்காணிக்க வேண்டும். யாராவது ஒருவர் கண்களைத் திறந்தாலோ, சிரித்தாலோ அசைந்தாலோ பேடியா அவர்களை விளையாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும்.

### நான்காம் நாள்

நான்காம் நாளில் துலிகா கடினமான சொற்களை வகுப்பு தொடங்கும்போது எடுத்துக்கொண்டார். அவர் குழந்தைகளை அந்த கதையில் வரும் கடினமான சொற்களை வட்டமிடுமாறு கூறினார். குழந்தைகளால் வட்டமிட்டு காட்டப்பட்ட கடினமான வார்த்தைகளை கரும் பலகையில் எழுதினார். அவர் குழந்தைகளில் யாருக்காவது வட்டமிடப்பட்ட வார்த்தைகளில் பொருள்; தெரியுமா? எனக்கேட்டு, அந்த சொற்களைப்; பயன்படுத்தி வாக்கியங்களாக எழுதச் சொல்லி அவர்களை ஊக்கமூட்டினார். பிறகு அவர் அந்த கடினமான சொற்களுக்கான பொருளை விளக்கிக்கூறி அந்த சொற்களை வைத்து வாக்கியங்களைக் கூறச் செய்தார்.

### ஐந்தாம் நாள்

துலிகா குழந்தைகளுடன் சேர்ந்து அந்த இயலின் முடிவில் தரப்பட்ட பயிற்சியைச் செய்து முடித்தார். அந்த பயிற்சிகளில் ஒன்றில் குழந்தைகளை தரப்பட்ட ஒரு சொலிலிருந்து எழுத்துகளை எடுத்து பதிய சொற்களை உருவாக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. அடுத்த பயற்சிக்கு அழைத்துச் செல்லுமுன் துலிகா முதலில் ஏதேனும் இரு சொற்களைக் கூறுமாறு குழந்தைகளைக் கேட்டுக்கொண்டார். அவள் 'செக்கு' 'பல்லடம்;' என்ற இரு சொற்களை பலகையில் எழுதினார். அவர் முதல் சொல்லிருந்து 'செ' என்ற எழுத்தையும் இரண்டாவது சொல்லிருந்து 'ல்' என்ற எழுத்தையும் எடுத்துக்கொண்டார். பிறகு அந்த இரண்டு எழுத்துக்களையும் சேர்த்தால் என்ற வார்த்தை கிடைக்கும் எனக் கேட்டார். அந்தப் பயிற்றுமுறை குழந்தைகளுக்கு சுலபமாக புரிந்து கொண்டதால் தொடர்ந்து அந்த பயிற்சியை செய்ய ஆரம்பித்தனர். அவர் இரண்டு அல்லது மூன்று குழந்தைகளை அழைத்து கரும் பலகையில் அந்த பயிற்சியை செய்யுமாறும் மற்றவர்களை அவரவர்களுக்கென்று வழங்கப்பட்ட பயிற்சி தாட்களில்; பயிற்சியைத் தொடருமாறும் கேட்டுக்கொண்டார். துலிகா குழந்தைகளிடம் சென்று அடுத்த பயிற்சியைத் தொடருமாறு அறிவுறுத்தினார். குழந்தைகள்

குறிப்புகள்

ஏற்கனவே அவர்களுக்கு தெரிந்த விலங்குகளின் பெயர்களைக் கண்டுபிடித்து எழுத ஆரம்பித்தனர் சிறிது நேரத்திற்கு பிறகு துலிகா கொடுக்கப்பட்ட பயிற்சியைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடினார். எழுத்துக்களை சொற்களிலிருந்து எடுத்து அவற்றை ஒழுங்குபடுத்தி பொருள்தரும் வார்த்தைகளாக உருவாக்குதல் என்பது சிறது கடினமான செயல்;. இதன்; பின் அவர் அடுத்த பயிற்சியை குழந்தைகளுக்குத் தந்தார். அதில் தரப்பட்ட வாக்கியத்திற்கு மிகவும் பொருத்தமான வார்த்தையை அவர்கள் தேர்ந்தெடுக்குமாறு கூறினார். அவர் அந்த வார்த்தைகளை சத்தமாகப் படித்துக்காட்டி தேர்ந்தெடுத்த மிகப் பொருத்தமான வார்த்தையைக் கொண்டு கேட்கப்படும் கேள்விகளுக்கு பதலளிக்குமாறு கேட்டுக்கொண்டார். பிறகு துலிகா கரும்பலகையில் முடிவுபெறாத வாக்கியங்களை எழுதி, அவற்றை முடிக்குமாறு குழந்தைகளை உற்சாகப்படுத்தினார். குழந்தைகளில் பலர் வாய்மொழி வாயிலாக அப்பயிற்சியை செய்ய, மற்றவர்கள் தங்கள் பயிற்சித்தாட்களில் அதை எழுதினர். அவர் தொடர்ந்து திரும்பத் திரும்ப அப்பயிற்சியை செய்ய வைத்தவுடன் அந்த வகுப்ப முடிவுற்றது.

**ஆறாவது நாள்**

துலிகா ஆறாவது நாள் வகுப்பைத் தொடங்கினார். முதலில் அவர் கேள்விக்கு பதில் என்ற பயிற்சியை ஆரம்பித்தார். அவர் அந்த பயிற்சியில் தரப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க குழந்தைகளை உற்சாகமூட்டினார். சிலர் பதிலளித்தனர். சிலர் பதலளிக்கவில்லை. குழந்தைகள் வினாகளுக்கு கூறிய பின் விடைகள் பற்றிக் கலந்துரையாடினார். அந்த கேள்விகளுக்கான சரியான விடைகளைக் கரும்பலகையில் எழுதினார். தரப்பட்ட வினாக்களுக்கு விடையளித்தல் இம் முறையில் பயிற்சியளிக்கப்பட்டு அவற்றை மாணவர்கள் தம் ஏடுகளில் கரும்பலகையிலிருந்து பார்த்து எழுதி முடித்தனர். துலிகா வகுப்பறையைச் சுற்றி வந்து குழந்தைகள் அனைவரும் பயிற்சியில் பங்கேற்றுச் செயல்படுகிறார்களா? எனக் கவனித்தார். அவர் கரும்பலகையிலிருந்து பார்த்து எழுத சிரமப்படும் குழந்தைகளுக்கு உதவி செய்து கரும்பலகையில் எழுதப்பட்டிருக்கும் பதில்களை எழுதச் செய்தார்.

பிறகு அவள் அடுத்த நான்காம் பயிற்சியாக தரப்பட்ட ஒரு சொல்லிருந்து வாக்கியத்தை உருவாக்குதலை மேற்கொண்டார். அந்தப் பயிற்சியை கலந்துரையாடல் மூலம் ஆரம்பித்தார். அவர் குழந்தைகளுக்கு ஒவ்வொரு சொல்லிறக்கும் பல பொருத்தமான எடுத்துக்காட்டுகள் தந்து அச்சொற்களின்; பொருள் அறிய உதவி செய்தார். சில குழந்தைகள் எழுத்துகள்; மூலம் தரப்பட்ட சொற்களைக் கொண்டு சொற்றொடர் அமைக்கச் சிரமப்பட்டனர். அவ்வார்த்தைகளை அவர் கரும்பலகையில் எழுதினார். பொதுவாக அனைத்துக் குழந்தைகளும குறைந்தது ஐந்து வார்த்தைகளை வைத்து சொற்றொடர் உருவாக்கினர். அப்பயிற்சியின் நடுவில் வகுப்பு

குறிப்புகள்

முடிவுற்றது. துலிகா மீதமுள்ள மூன்று சொற்களைக் கொண்டு சொற்றொடர் அமைத்து வருமாறு குழந்தைகளுக்குத் தொடர் பணி தந்தார்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 5**

1. துலிகாவின் வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை

   A.. 10 B. 20 C. 30 D. 40

2. துலிகா ஏன் விலங்குகளின் படங்களை பயன்படுத்துவதற்கு பதில் குழந்தைகளை படங்களை வரையச் செய்தார்?

   ..................................................................................................

   ..................................................................................................

   ..................................................................................................

3. துலிகா ஏன் குழந்தைகளிடம் விலங்குளின் பெயர்களை கூறுமாறு கேட்கவில்லை?

   (குழந்தைகளுக்கு அளவிகளை தெரியுமா தெரியாதா என்று தெரிந்துகொள்ள விரும்பினார்)?.

   ..................................................................................................

   ..................................................................................................

   ..................................................................................................

4. ஆசிரியர் ஏன் கரடிக்கதையின் முடிவைக் கூறாமல் மாணவர்களை யூகிக்க கூறினார்?

   ..................................................................................................

   ..................................................................................................

   ..................................................................................................

5. துலிகா ஏன் மூன்றாவது நாளும் அக்கதையின் முதல் பாதியை மீண்டும் கூறினர்?

   ..................................................................................................

   ..................................................................................................

   ..................................................................................................

6. நீங்கள் துலிகாவாக இருந்தால் குழந்தைகளின் பாதுகாவலரோ அல்லது பெற்றேரோ, உங்கள்; வகுப்பறையில்; தேவையற்ற


குறிப்புகள்

செயல்களில் ஈடுபடுகிறீர்கள் என்று புகார் செய்தால் உங்கள் எதிர்பினை இவ்வாறு தெரிவிப்பீர்களா?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## 8.6.2 மாதிரி பாடம் : 2

ஹீனா திட்டமிட்ட செய்யுள் பகுதியை பார்க்கலாம்;

ஹீனா என்வர் 'போபால்' நகரின் அருகில் இருக்கும் 'மன்கல்பல' பள்ளியில் இந்தி மொழி பாடத்தை ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியை இக்கிராமம், எவ்வித அடிப்படை வசதிகளான கழிப்பறை வசதி, குடிநீர், மின்சாரம், அல்லது சாலை வசதியோ இல்லாத ஒரு கிராமம் தெருவிளக்கே அம்மாணவர்களுக்கு பாடம் படிப்பதற்கான மின்சார விளக்காகும். அம்மாணவர்களுடைய பெற்றோர் பாமரர்கள்; சிலர் ஐந்தாம் வகுப்பு மட்டுமே கற்றவர்கள். பெரும்பாலானவர் அன்றாடக் கூலி வேலை செய்பவர்களாகவும் மூன்று சக்கர வாகனங்கள் ஓட்டுபவர்களாகவும், குப்பைகளை பெருக்குபவர்களாகவும், வீட்டு வேலை செய்பவர்களாகவும் இருந்தனர். மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களுக்கு உதவி செய்வர். ஹீனாவின் வகுப்பறையில் 25 மாணவர்கள் இருந்தனர். அம்மாணவர்கள் இந்தி மொழியில் மற்ற மொழிகளான உருது, கோந்தி, மற்றும மாலிவிமொழி வார்த்தைகளை சேர்த்து பேசினார்கள். பெரும்பாலான மாணவர்களுக்கு வாசிக்கத்தெரியாமல் அப்படியே வாசிக்கத் தெரிந்தாலும் எழுத்துக்கூட்டி மிகவும் நிதானமாக வாசித்தனர். சாத்புரா கேகாரேநூள்கலாஎன்றவாறு வாசித்தனர்.

சர்புரா கே கானே ஐஸ்லில் என்ற செய்யுளை மத்திய பிரதேசத்திலுள்ள அடர்ந்த காடுகளைப் பற்றியதாகும். முக்கியய பிரதேசத்தின் வரைபடத்தைக் கொண்டு, ஆசிரியை 'சத்புரா' எங்கே அமைந்துள்ளது என்பதை காண்பித்தார். இச்செய்யுளை ஹீனா இரண்டு அல்லது மூன்று முறை வாசித்தார். மேலும் இச்செய்யுளை நான்கு நாட்களில் கற்றுக் கொடுக்க திட்டமிட்டார். அத்திட்டத்தின் குறிக்கோள்களில் பின்வருவன.

- மாணவர்களை அவர்களின் காடுகளைப் பற்றிய அனுபவங்களை பகிருமாறு கேட்டல்.
- மாணவர்களை குழு விவாதத்தில் பங்கேற்க செய்தல்
- செய்யுளின் நயத்தை கற்கச் செய்தல்.



குறிப்புகள்

- மாணவர்கள் அவர்கள் எழுதிய செய்யுளை மற்ற மாணவர்களின் முன்பு வாசிக்கச் செய்தல்.

**முதல்நாள்**

- காட்சி அனுபவங்களை பகிர்த்தல்.
- சத்புராவை வெவ்வேறு விதமாக அறிமுகம் செய்தல்.
- கற்ற செய்யுளை தன்னம்பிக்கையோடு மனப்பாடம் செய்து கூறச் செய்தல்.
- இந்தி மொழியில் விலங்குகளின் பெயர்களை கூறவும், தெரிந்து கொள்ளவும் கற்பித்தல்.

**இரண்டாம் நாள்**

- கடினவார்த்தை கண்டுபிடித்து அவைகளை வாக்கியங்களில் அமைத்து எழுதச் செய்தல்.
- மாணவர்கள் புரிந்து கொண்ட நிலையில் அவர்களுடன் பகிர்ந்து கொண்டு மேம்படச் செய்தல்.
- சேர்ப்பு வார்த்தைகளை கற்பி;த்து அவற்றை புரியச்செய்தல்.

**மூன்றாம் நாள்**

- செய்யுள் வரிகளை வாசித்து அதன் அர்த்தகங்களை விவாதித்தல்.
- மாணவர்களின் அனுபவங்களை வகுப்பறை சூழல்களுக்கு கொண்டு செல்லுதல்.
- ஆசிரியர் மாணவர்களோடு சேர்ந்து அச்செய்யுளின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சியை முடிக்கச் செய்தல்.

**நான்காம் நாள்:**

- கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளை மாணவர்களின் உதவியோடு செய்து முடித்தல்.
- மாணவர்களை அவர்களின் சொ்நத நடையில் பதில்களை தயார் செய்ய உதவுதல்.
- செய்யுள் நடை வார்த்தைகளுடன் செயல்பாடுகளை அமைத்தல்.

**தினசரி பாடத்திட்டத்தை தொகுத்தலும் ஆய்வு செய்தலும்.**

**முதல்நாள்**

ஹீனா குழந்தைகளைப் பார்த்து அவர்கள் அனைவரும் காடுகளை பார்த்திருக்கிறார்களா எனக் கேட்டு வகுப்பை ஆரம்பித்து அவர்களில்

குறிப்புகள்

ஒவ்வொருவரையும் அதைப்பற்றி அவர்களுக்குள் பேசும் இந்தி மொழியில் பேசச்சொன்னார். அவர் அவர்கள் கூறிய காடுகளைப் பற்றிய் விளக்கங்கள், காடுகளில் காணப்படும் விலங்குகள், பறவைகள் போன்றவைகளை அவர்களின் கற்றல் மொழியான இந்தியில் எழுதினார். மேலும் அவர்களுக்கு தெரிகிறதா என்பதை சோதிக்க அவர் விலங்குகளின் பெயர்களை இந்தி மொழியல் கூறுமாறு ஊக்கப்படுத்தினார். பிறகு அவர் கற்பித்தல் உபகரணமான மத்திய பிரதேசத்தின் வரைபடத்தை காண்பித்து அதில் குழந்தைகளை சாத்பூரா என்ற இடத்தை குறிப்பிட்டு காண்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். அதன்பிறகு குறிப்பிட்டு காண்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். அதன்பிறகு அவர் ஒரு செய்யுளை அறிமுகம் செய்தார். அன்றை நாளிலேயே அவர் வாசிக்கும் பயிற்சியாக குழந்தைகளில் ஒருவரை அந்த செய்யுள் முழுவதையும் வாசிக்குமாறு கேட்டுக்கொண்டார். பிறகு அவர் அடுத்த குழந்தையை அந்த செய்யுளின் இரண்டு பாராவை வாசிக்குமாறு கேட்டுக்கொண்டார். அச்செய்யுளின் விளக்கத்தை புரிந்து கொள்வதோடு காட்டில் வாழும் விலங்குகளின் தினசரி வேலைகள் என்னவாக இருக்கும் என்ற கற்பனை உரையாடலுடன் அன்றைய வகுப்பு முடிந்தது.

### இரண்டாம் நாள்

இரண்டாவது நாளில் ஹீனா அந்த செய்யுளை முழுவதும் படித்து அதன் கருத்துகளை தெளிவுடன் விளக்கினார். அதன் பிறகு அவர் குழந்தைகளிடம் அச்செய்யுளின் மூன்று பாராக்களில் உள்ள சிறவினாக்களை வகுப்பறை கலந்துரையாடலுக்காக தேர்ந்தெடுக்கச் சொன்னார் இடையிடையே அவர் கடுமையான சொற்களுக்கு உரிய விளக்கம் கூறி அச்சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை அமைக்க குழந்தை ஊக்கப்படுத்தினார். அவர்கள் அச்செயல்பாடுகள் தடுமாறியபோது அவர் அக்குழந்தைகளுக்கு உதவி செய்தார்.

### மூன்றாம் நாள்

தொடர்ந்து அவர்கள் அச்செய்யுளை சத்தமாக வாசித்து கலந்துரையாடல் மூலம் புரிந்து கொண்டனர். ஆவர் குழந்தைகளை அச்செய்யுளை சத்தமாக படித்து அவர்களுக்குள் கலந்துரையாடி அச்செய்யுளில் உள்ள வார்த்தைகளின் அர்ததங்களை என்பதை உறுதி செய்து கொண்டார். அச்செயல்பாடுகள் முழுவதிலும் அவர் குழந்தைகளுக்கு உதவியாக இருந்தார். பின்பு அவர் அச்செய்யுள் பகுதியிலிருந்து வினாக்களை கேட்டு குழந்தைகள் அனைவரையும் அச்செய்யுளைப்பற்றி கலந்துரையாடுமாறு கேட்டுக் கொண்டார். பிறகு அவர் பலகையில் இரண்டு தலைப்புகளில் இரண்டு கோடுகளை வரைந்தார். ஒருதலைப்பில் ‘மஜ்ஹி ஜய்கில், ஆச்சா நகி லக்டா ஹய்’ என்றும் இரண்டாவது தலைப்பில் ‘மஜ்ஹிஜஸ்கில் அச்சா, நகி

குறிப்புகள்

லக்டா ஹய்’ எனவும் எழுதினார். பிறகு அவர் குழந்தைகளிடம செய்யுளைப் பற்றி கலந்துரையாடி அவர்களின் பதில்களை ஒரு பிரிவில் அவர் ஏற்கனவே குழந்தைகளிடமிருந்து பெறப்பட்ட பதில்களை எழுதியிருப்பதைப் போல எழுதுமாறு கேட்டுக்கொண்டார். பிறகு அவர் செய்யுளில் உள்ள ஒரு பாராவை எழுதுமாறு கேட்டுக்கொண்டார். அவர் வகுப்பறையில் சுற்றி வந்து குழந்தைகள் சரியாக எழுதுகிறார்களா என்பதை கவனித்து அவர்களுக்கு உதவிசெய்தார்.

**நான்காம நாள்**

ஹீனா நான்காம் நாளில் முந்தைய நாளில் அவர் நடத்திய பகுதியின் கருத்துக்களை குழந்தைகளிடமிருந்து வரவைத்தார். அதன் பிறகு அவர் அச்செய்யுளின் இறுதியில் கொடுக்கப்பட்ட பயிற்சியின் பக்கத்தை திருப்பினார். அவர் ஏற்கனவே அச்செய்யுளை விளக்கி விட்டதால் குழந்தைகள் சிறிது விவாதித்த பின் தாங்களே கேள்விகளுக்கான பதில்களை தயார் செய்தனர். அவர் செய்யுள் நடை வார்த்தைகளை எடுத்துக்கூறி அதைப் போன்ற வார்த்தைகளை குழந்தைகளையும் கூறுமாறு கேட்டுக்கொண்டார். இச்செயல்பாட்டை புரிந்து கொள்ளாத குழந்தைகளுக்கு சில எடுத்துக்காட்டு வார்த்தைகளை பலகையில் எழுதினார். ஹீனா பதில் கூறிய குழந்தைகளை பாராட்டினார். சில மாணவர்கள் பிழையுள்ள பதில்களை கூறினர். அவர்களையும் ஹீனா ஊக்குவித்தார். அவர் மீண்டும் குழந்தைகளை ஒரு நாள் முழுவதும் ஒரு காட்டில் இருக்க நேரிட்டால் என்ன செய்வீர்கள் என்பது பற்றி ஒரு பாரா எழுதுமாறு கேட்டுக்கொண்டார். குழந்தை எழுத ஆரம்பித்தவுடன் ஹீனா அவர்களை சுற்றி வந்து அவர்கள் கேட்ட கேள்விகளுக்க பதில் கூறி உதவினார்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 6**

1. ஹீனா எந்த நாளின் திட்டதில் குழந்தைகளுடன் சேர்ந்து பயிற்சியை செய்ய முடிவு செய்தார்.

   a) முதல் நாள் b) இரண்டாம நாள்

   c) மூன்றாம நாள் d) நான்காம நாள்

2. வரைபடம் வகுப்பறையில் காண்பிப்பதன் முக்கியத்துவம் என்ன?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

குறிப்புகள்

3. ஹீனா தன்னுடைய வகுப்பறையில் செய்யுளுக்கான முழு அர்த்தத்தையும் தானே விளக்காமல் இருந்ததற்கு நீங்கள் என்ன மதிப்பளிப்பீர்கள். விவாதத்துடன் உங்கள் பதில்களை தரவும்.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

4. நீங்கள் காட்டில் ஒருநாள் விடப்பட்டால் என்ன செய்வீர்கள் என்பது போன்ற கேள்விகளுக்கு பதிலளிப்பதன் மூலம் குழந்தைகளிடம எந்த மாதிரியான திறன் வளர்க்கப்படுகிறது.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

5. மாணவர்களை அவர்களாகவே அத்தியாயத்தின் முடிவில் உள்ள பயிற்சியை செய்ய வைத்தல் சரியா? உங்கள் பதிலை விவரி.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

## 8.6.3 எழுத்துக்களை கற்பிக்கும் முறை

லோகேஷ் தேவ்நகர் அரசு பள்ளியில் முதல் வகுப்பு கற்பிக்கிறார். அந்தப் பள்ளி நகர்புறத்தில் இருந்தது, அதனால் அங்கு வரும் குழந்தைகள் வறுமையில் உள்ளவர்களே பெரும்பாலான குழந்தைகளின் பெற்றோர் கூலித்தொழிலாளர்கள் அவர்களுக்கு சொர்நத வீடுகூட இல்லை. அவர்கள் அனைவரும் தாங்கள் வேலை செய்யும் இடத்திலேயே தங்கிவிடுவர், அந்த இடத்தில் வேலை முடிந்து விட்டால் வேறொரு வேலை செய்யும இடத்திற்கு அவர் சென்று தங்கிவிடுவர். ஆவர்கள் நகரத்திற்கு நகரம வேலைக்காக தங்களின் குழந்தைகள் நீண்ட நாட்கள் ஒரு குறிப்பிட்ட பள்ளியில் நிலையாக படிக்க முடிவதில்லை. அவர்கள் மூன்று நான்கு மாதங்கள் அல்லது அதிகபட்சம் ஒரு வருடம் மட்டுமே ஒரு பள்ளியில் படிப்பர். ஆதிகமாக பள்ளிக்கு விடுப்பு எடுப்பது அக்குழந்தைகளின் நிலையாக உள்ளது.

15 குழந்தைகள் லோகேஹின் வகுப்பில் பதிவு செய்தனர். அந்த வகுப்பில் பதிவு செய்த குழந்தைகளின் சகோதர சகோதரிகள் 5 குழந்தைகள் பதிவு

குறிப்புகள்

செய்யாமல் இருந்தனர். எனவே அந்த வகுப்பின் குழந்தைகளின் வயதுகள் ஒன்றரை வயது முதல் ஐந்து அல்லது ஆறு வயது வரை இருந்தது. அந்த வகு;பில் உறுப்பினர்களாக இல்லாத சிறு குழந்தைகள் இருந்தாலும் அவர் முழு வகுப்பையும் கவனம செலுத்தாமல் இருந்ததில்லை. அந்த வகுப்பறையில் எழுதுவதற்கோ, அமர்வதற்கோ இருக்கைகள் இல்லை. சில குழந்தைகள் கம்பளத்தின்மேல் அமர்ந்திருந்தனர். மற்றவர்கள் அவரவர் வீட்டிலிருந்து கொண்டுவந்த பாயை தரையில் விரித்து அதன்மேல் அமர்ந்தருந்தனர்.

லோகேஷ் அந்த வகுப்பிற்கு இந்தி எழுத்துக்களை கற்பிக்க வேண்டியிருந்தது. முதலில் அவர் அந்த வகுப்பில் உள்ள குழந்தைகள் பார்க்கும் பொருட்களின பெயர்களை கூறச் செய்தார். அங்கு மின்விசிறி, நாற்காலி, பிரதிகள் போன்ற பொருட்கள் இருந்தன. மேலும் அவர் குழந்தைகளிடம் படங்களை வரைந்து அவற்றின் அடியில் அவற்றின் பெயர்களை எழுதுமாறு கேட்டுக்கொண்டார். அவருடைய நான்கு நாட்களுக்கான திட்டம பின்வருமாறு இருந்தது.

- வகுப்புச் சூழலில் எழுத்துக்களை கற்பித்தல்
- கதை கூறல் மூலம் எழுத்துக்களை கற்பித்தல்
- குழந்தைகள் அவர்களின் கருத்துக்களை கலந்துரையாட போதுமான இடைவெளி தருதல்.
- வார்த்தைகள் எழுதுவதை அதிகப்படுத்துதல்

அவருடைய தினசரி திட்டங்கள் பின்வருமாறு,

**முதல்நாள்** : 'ர' என்ற எழுத்தை அறிமுகப்படுத்துதல்.

**இரண்டாம் நாள்** : 'கா' என்ற எழுத்தை அறிமுகப்படுத்துதல்

**மூன்றாம நாள்** : 'ச' 'ல' என்ற வார்த்தைகளை அறிமுகப்படுத்தி ஒரு செய்யுளை வாசித்து அதில் அந்த எழுத்துக்களை வட்டமிடச் செய்தல்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 7**

1. லோகேஷின் நான்காம நாளின் திட்டம் என்ன?

   a) 'ச' என்ற எழுத்தை அறிமுகப்படுத்துதல்

   b). 'ப' என்ற எழுத்தை அறிமுகப்படுத்துதல்

   c). 'ச்ச' என்ற எழுத்தை அறிமுகப்படுத்துதல்

   d) எழுத்துக்களுக்கு பயிற்சி அளித்தல்

குறிப்புகள்

2. லேகேஷ் சரியான முறையில் எழுத்துக்களை கற்பிக்கும் முறையை தேர்ந்தெடுத்தாரா? ஆம் எனில், பிறகு ஏன்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## 8.6.4. மாதிரி பாடத்திட்டம்: 4. ராதாவின் வகுப்பறை.

ராதா, ராஜஸ்தான் மாநிலத்தில் அடாசா தொகுதியில் உள்ள நடுநிலைப் பள்ளி ஆசிரியை, அவர் ஆங்கிலம் கற்பிக்கிறார். அந்த ப்ளிள நகர்புற, கிராமப்புற குழந்தைகளை கொண்டிருந்தது. பெரும்பாலான குழந்தைகளின் பெற்றோர் வயல்களில் வேலை செய்பவர்களாகவும், மளிகைக் கடைகளில் வேலை செய்பவராகவும், சிறிய உணவகங்களில், காணிக கடைகளிலும் வேலை செய்பவர்களாகவும இரந்தனர். தவறாமல் பள்ளிக்கு வரும் குழந்தைகளில் பெரும்பாலோர் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ராதாவின் வகுப்பில் இடைநிற்றல் என்பது அறுவடை காலங்களில் பெற்றோருக்கு உதவ குழந்தைகள் செல்லும் காலமாக இருக்கும்.

ராதா 41 குழந்தைகளை கொண்ட எட்டாம் வகுப்பிற்கு பாடம் கற்பிக்கிறார். அவர் அதிகமாக வாய்ப்புகள் கிடைத்தால் செய்யுள் பகுதி கற்பிக்கவே விரும்புவார். ஆவர் தயாரித்த பாடத்திட்டமானது இரண்டு நாட்களுக்கு தொடர்ந்து மழை பெய்யும் போது எடுக்கும் வகுப்பிற்கானதாக இருந்தது.

அந்த பாடத்திட்த்தில் பொதுக்குறிப்புகள்:

- செய்யுள் பகுதியை விவாதிப்பதில் குழந்தைகளின் பங்கு
- செய்யுள் பகுதியைப் பற்றிய குழந்தைகளின் மன வரைபடம்
- விவாதித்தல் மூலம் மொழியைக் திறன்களை வளர்த்தல்.
- ஆங்கில செய்யுள்கள் மூலம் குழந்தைகளின் தன்னம்பிக்கையை வளர்த்தல்.

குறிப்பிட்ட தினசரி அவருடைய வகுப்பின் நோக்கங்கள் பின்வருமாறு:

**நாள் ஒன்று**

1. மழை சம்பந்தப்பட்ட அனுபவங்களை விவாதித்தல் மூலம் குழந்தைகளிடம் பகிர்தல்.

குறிப்புகள்

2. செய்யுளை மனப்பாடம் செய்து வகுப்பறை செயல்பாடுகளை வளர்த்தல்.

3. விவாதித்தல் மூலம் அந்த செய்யுளின் அர்த்தத்தை கலந்துரையாடுதல்

4. குழச்செயல்பாடுகள் மூலம் சிரமமான வார்த்தைகளுக்கு அர்த்தங்களை காணச்செய்தல்.

**நாள் இரண்டு**

1. ஒரு படத்தை உருவாக்கி அச்செய்யுளில் உள்ள முன்னடைச் சொற்களைப் பற்றி கலந்துரையாடல்.

2. அச்செய்யுளின் பின்னணியைப்பற்றி விவாதித்தல்.

**நாள் மூன்று**

1. உரிச்சொற்களைப் பற்றி கற்பித்து அச்செய்யுளின் கொடுக்கப்பட்ட உரிச்சொற்களை காணச்செய்தல்.

**நாள் நான்கு**

1. அந்த பாடப்பகுதியின் இறுதியில் கொடுக்கப்பட்ட பயிற்சியை செய்தல்.

**தினசரி செயல்பாடுகளின் தொகுப்பு.**

**நாள் ஒன்று**

ராதா மாணவர்களுடைய அனுபவங்களை வினா விடை வாயிலாக விவாதித்தார். பிறகு ஒரு விளையாட்டை செயல்பாட்டின் மூலம் ஆரம்பித்தார். ஆச்செயல்பாடு, 'மழை' என்ற வார்த்தையைக் கேட்டவுடன் அக்குழந்தைகளுக்கு நினைவுக்கு வரும் சொற்களை கூற வேண்டும். பிறகுகு ஒரு மாணவனை முழு செய்யுளையும் உரத்த குரலில் வாசிக்குமாறு கூறினார். அவர் மாணவர்களை செயல்பாடுகளுடன் சார்ந்த செயல்பாடுகளை செய்வதன் மூலம் மிக எளிதாக கற்றல் நிகழ்கிறது.

**நாள் இரண்டு:**

ராதா மாணவர்களிடம் அவர்களது கிராமத்தை வரையச்சொல்ல மாணவர்களின் வரைபடங்கள் திருப்திகரமாக இல்லாததால் அவரவர் வீடுகளை வரைந்து வீட்டிலிருந்து பள்ளிக்கு வரும் வழியில் இருக்கும் முக்கிய வழித்தடங்களையும் வரையமாறு கூறினார். குழந்தைகள் பெரிய குடிசை, மரம் போன்றவைகளை பலகையில் வரைந்து அவற்றின் அடியில் கீழே, உள்ளே, வெளியே போன்ற முன்னிடைச் சொற்களையிட்டு நிரப்பினர். அவர் குடிசை, மரம் போன்ற படங்களை வைத்து முன்னிடைச் சொற்களை விளக்கினார். பிறகு அவர் ஆங்கிலத்தில் எழுதும் முறைகளைப் பற்றி அறிவுறுத்தினார். அந்த அறிவுரைகள் மரத்தின் அடியில் ஒரு பொம்மை

குறிப்புகள்

படம் வரை போன்ற சிறய சிறிய வாக்கியங்களாக இருந்தன. அவர் வகுப்பறையைச் சுற்றி வந்து குழந்தைகள் அனைவரும் அச்செயலில் ஈடுபட்டிருக்கிறார்களா என்பதை கவனித்தார். இங்கு 'சுற்றி' பின்னால் போன்ற வார்த்தைகளுக்கு அர்த்தங்களை கற்பித்தல் என்பது அறிது சிரமமான வேலை, ஆனால் ராதா வேறு பல எடுத்துக்காட்டுகள் மூலம் அந்த இரண்டு முன்னிடைச் சொற்களை விளக்கி புரிய வைத்தார். இம்முறையில் வகுப்பு முடிக்கப்பட்டது.

**மூன்றாம் நாள்**

ராதா அந்த செய்யுளை குழந்தைகளை வாசிக்க வைத்து அதிலிருந்து சிலவற்றை வினாக்களை கேட்டு அவற்றிற்கு விளக்கம் கூறுமாறு கேட்டுக்கொண்டார். எடுத்துக்காட்டாக அவர் தோட்டம் என்ற வார்த்தையை கரும்பலகையில் எழுதி அதனுடன் பசுமை, பெரிய, போன்ற உரிச்சொற்களுடன் சேர்த்து எழுதுமாறு குழந்தைகளைக் கேட்டுக் கொண்டார். பிறகு அந்த செய்யுளில் உள்ள உரிச்சொற்களை வட்டமிட்டுக்காண்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும் உரிச் சொற்களை பயன்படுத்தி சில வாக்கியங்களை எழுதுமாறும் கேட்டுக்கொண்டார். அதுவே கரும்பலகையில் இருந்த படத்தின் கருத்துருவை புரிந்துகொள்ள ஏதுவாக இருந்தது.

**நான்காம் நாள்**

ராதா பயிற்சிக்குள் சென்றார் அவர் அப்பயிற்சியிலிருந்து வினாக்களை சத்தமாக படித்து, குழந்தைகள் ஆங்கிலத்தில் புரிந்து கொள்ளமுடியாத போது இந்தி அல்லது அவர்களுக்கு தெரிந்த உள்@ர் மொழிகளில் விளக்கம் கொடுத்து அவர்களை அச்செயல்பாட்டில் பங்கு பெறச்செய்தார். குழந்தைகளால் கொடுக்கப்பட்ட பதில்களை அவர் கரும்பலகையில் எழுதினார். மேலும் அவர்கள் கூறிய பதில்களை அவர்களின் உள்@ர் மொழியிலும் எழுதினார். பிறகு அந்த விடைகளை ஆங்கிலத்தில் விவாதம் மூலம் மொழிபெயர்த்து குழந்தைகளுக்க புதிய வைத்தார். முடிவில் அந்த அத்தியாயத்தின் முடிவில் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கான விடைகளை கரும்பலகையிலிருந்து பார்த்து எழுதினார்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 8**

1. ராதா என்ன பாடம கற்பித்தார்?

   a) இந்தி b) ஆங்கிலம்

   c) அறிவியல் d) கணிதம்





2. ராதா கடைசி நாளில் கரும்பலகையிலிருந்து மாணவர்களை விடைகளைப் பார்த்து எழுதச் சொன்னார். அங்கு ஏதாவது மொழியைக் கற்றுக்கொண்டார்களா?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

3. ஒருவேளை நீ மூன்றாம் வகுப்பிற்கு இதே செய்யுளை கற்பிக்க தேவை ஏற்படுமானால் அதற்கான பாடத்திட்டத்தை தயார் செய்க.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## 8.6.5 பயனுள்ள பாடத்திட்டத்திற்கு கதை கூறும் நுட்பத்தை பயன்படுத்துதல்

காஷ்வில் என்பவர் ஹரியானா மாநிலத்தில் உள்ள பாரிடாபாத் என்ற ஊரில் உள்ள பள்ளியில் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும ஆசிரியர் அவர் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த 25 மாணவர்கள் கொண்ட குழுவிற்கு கற்பித்தார். பெரும்பாலான பெற்றோர்கள் தனிக்கூலியாகவும் சிலர் பாதையோரம் பழங்கள் விற்பவர்களாகவும் இருந்தனர். குழந்தைகள் வீடு வேலைகளிலும் தங்களின் உடன்பிறந்த சிறு குழந்தைகளை கவனிப்பதிலும் ஈடுபட்டிருந்தனர். அன்று அவர் ஹரியானா மாநிலத்தின் பாடப்புத்தகத்தில் இருக்கும் ஒன்பதாவது பாடப்பகுதியை நடத்த விரும்பினார். அந்த பாடம் பின்னாளில் ஒரு பெரிய மனிதராக திகழந்த நரேந்திரா என்பவரின் குழந்தை பருவ வாழ்க்கை பற்றியதாகும். காஷ்வில் வகுப்பிறக்கு செல்லும் முன் அப்பாடத்தை படித்தார்.

**நாள் ஒன்று:**

காஷ்வில் குழந்தைகளிடம் தங்கள் குழந்தை பருவத்தில் ஏற்பட்ட வேடிக்கை அனுபவங்களையும் அதற்குண்டான தண்டனைகளின் வகைகளைப் பற்றியும் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். குழந்தைகள் தங்களுடைய குழந்தைப்பருவங்களின் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி கூற வெட்கப்பட்டு கூறாமல் இருக்கும் குழந்தைகளை ஊக்கவிக்க அவர் தன்னுடைய குழந்தைபருவத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி கூற ஆரம்பித்தார். அது மற்ற குழந்தைகளுக்கு அவர்களின் குழந்தைப் பருவத்தில் நடைபெற்ற

குறிப்புகள்

நிகழ்ச்சிகளை தடையின்றி கூற உதவியாக இருந்தது. பிறகு காஷ்வில் அந்த அத்தியாத்ததை உரக்கப்படித்துக் காண்பிக்க, பெரும்பாலான குழந்தைகளால் ஆங்கிலத்தில் படிக்க முடியாமலும் சிலரால் ஒரு தடவையில் தொடர்ந்து ஓரிரு வார்த்தைகள் மட்டுமே ஆங்கில்தில் படிக்க முடிந்தது. அவர் பலவித செயல்பாடுகள், குரல்கள் மூலம் அப்பாடத்தை படித்துக்காண்பித்தார். அச்சமயங்களில் அப்பாடத்தை விளக்க உள்ளூர் மொழியையே பயன்படுத்தினார். காஷ்வில் நரேந்திராவின் குழந்தைப் பருவத்தைப் பற்றிய மூன்று பத்திகளை படித்தார். பிறகு அவர் குழந்தைகளிடம் நரேந்திராவின் குழந்தை பருவத்தில் எப்படி இருந்தார் எனக்கேட்டு மறுபடியும் கதை கூற ஆரம்பித்தார். குழந்தைகள் தாங்கள் புரிந்துகொண்ட நரேந்திராவின் வாழ்க்கையைப் பற்றி கூற ஆரம்பித்தனர். விவாதித்தது விளக்கமளித்து பின் காஷ்வில் பின்வரும் வினாக்களை கரும்பலகையில் எழுதினார்.

பெயர் : ______________________

வயது : ______________________

தாயின் வயது : ______________________

உன் தாய் என்ன செய்கிறார் : ______________________

தந்தையின் பெயர் : ______________________

உன் தந்தை என்ன செய்கிறார் : ______________________

உனக்கு பிடித்தது என்ன? ______________________

உனக்கு பிடிக்காதது என்ன? ______________________

காஷ்வில் முதல் அனுபவமாக நரேந்திராவிடம் உள்ள அனைத்தையும் கண்டுபிடிக்குமாறு குழந்தைகளை கேட்டுக்கொண்டார். நரேந்திராவைப் பற்றிய அனைத்து விவரங்களையும் கண்டறிதல் என்பது சிரமமாக இருந்ததால் அதை அவர்கள் முறையாக எழுத ஆரம்பித்தனர். பிறகு காஷ்வில் குழந்தைகளிடம் தங்களுடன் பயிலும் குழந்தைகளுடன் கலந்துரையாடி அவர்களின் தகவல்களை மேற்கூறிய வினாத்தாளை நிரப்புமாறு கேட்டுக்கொண்டார். ஆரம்பத்தில் ஆண், பெண் குழந்தைகள் தங்களுக்குள் பேசத்தயங்கி பின்ப அவர்களுகுள் பேச ஆரம்பித்தனர்.

குறிப்புகள்

### நாள் இரண்டு

காஷ்வில் நாள் ஒன்றின் செயல்பாடுகளைப் பற்றி பேச ஆரம்பித்தார். முழுபாடத்தையும் உள்ளூர் மொழியில் வாசித்த சில கடுமையான சொற்களையும் பயன்படுத்தினார். பின்பு அவர் மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து நரேந்திராவைப் பற்றி விவாதித்த பின்னரே குறிப்பகளை எழுதக் கூறினார். அவர்கள் உள்ளூர் மொழியில் பேச சுதந்திரம் அளித்தார். ஆதனால் வகுப்பறை மிகவும் சத்தமாக இருக்க அவர்களை அமைதியாக இருக்க கேட்டுக் கொண்டார்.

### நாள் மூன்று

கொடுத்த வேலையை மாணவர்கள் குழுவாக செயல்படுத்தினர். முடிவில் அவர்களது செயல் திறன்களை மதிப்பெண் அடிப்படையில் அவர்களை வரிசைப்படுத்தினார். அவர்கள் அக்குழுக்களிலிருந்து குறிப்புகளை எடுத்து கரும்பலகையில் எழுதினார். இவ்வாறு வகுப்பின் இறுதிவரை அவ்விவாதங்களிலிருந்து எடுக்கப்பட்ட குறிப்புகளை கரும்பலகையில் எழுதினார்.

### நாள் நான்கு

அவ்விவாதத்தின் முடிவில் கொடுக்கப்பட்ட கேள்விகளுக்கு காஷ்வில் அத்தியாயத்தின் இறுதியில் பதிலைக் கண்டுபிடித்து எழுதச் செய்தார். மாணவர்கள் கொடுத்த பதில்களை கரும்பலகையில் எழுதினார். இவ்வாறு முழு பயிற்சினையும் செய்து முடித்தார்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 9**

1. இரண்டாம் நாள் கதையை வாசிக்கும்போது எந்த மொழியை காஷ்வில் பயன்படுத்தினார்?

   a) உள்ளூர் மொழிச் சொற்கள்

   b) ஆங்கில மொழிச் சொற்கள்

   c) உருது மொழிச் சொற்கள்;

   d) இந்தி மொழிச் சொற்கள்;

2. காஷ்வில் ஏன் நரேந்திராவைப்பற்றி எழுதுவதை நிறுத்தி விட்டு தங்களில் ஒருவருக்கொருவரைப் பற்றி எழுதுமாறு கேட்டுக் கொண்டார்.

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

குறிப்புகள்

3. காஷ்வில் ஏன் அந்த வகுப்பை நான்கு குழுக்களைப் பிரித்தார்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

4. குழுச்செயல்பாடு எவ்வாறு குழந்தைகளை திறன்படக்கற்றுக் கொள்ள பயன்படுகிறது.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

5. விவாதிக்கும் நிலையால் கஷ்விலின் வகுப்பறை மிகுந்த சத்தமாக இருக்க நீங்கள் வகுப்பை நடத்திச் செல்ல அது சரியான வழியா என நினைக்கிறீர்களா? அல்லது வகுப்பறை கற்றல் சூழல் பாதிக்கப்படுமா? உங்கள் பதிலை விவாதிக்கவும்.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## 8.7 சுவரொட்டிகளும் விளம்பரங்களும்

ஒரு பயனுள்ள பாடத்திட்டத்திற்கு சவரொட்டிகளும் விளம்பரங்களும் மிக முக்கியமானவை. ஆவைகள் நம் வாழ்க்கைக்கும் சுற்றுச்சூழலிற்கம் மிகவும் அவசியமானவை. இதுவரை பொதுவான சுவரொட்டிகளும் விளம்பரங்களும் முறையான கற்றல் கற்பித்தல் பொருட்களாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. ஆனால் அவைகள் ஆசிரியர் மாணவர்களுக்கு ஒரு முக்கிய தொடர்பை ஏற்படுத்துகிறது.

நாம் பலவகையான பதிவுக்குழு, சுவரொட்கள் மற்றும் விளம்பரங்களை பள்ளிகளிலும் அலுவலகங்களிலும் கடைவீதிகளிலும் காணலாம். இவகைளை நாம் புரிந்து கொள்ள சிரமம் இல்லாத வகையில் அடிப்படை நோக்கத்துடன் பாமரமக்கள் புரிந்து கொள்ளும் வகையிலும் விளங்குகிறது. இவைகள் வாசித்தல் திறனை மேம்படுத்த உதவுகிறது. மற்ற மொழிகளை எவராலும் கற்றுக்கொள்ள உதவும் ஒரு வழியாக அமைகிறது. சேயல் திட்டத்தை எழுதுதல் மற்றும் வரைதலுக்காக சுவரொட்டி, பதிவக்குழு விளம்பரங்கள் போன்றவற்றைக் கொண்டு தயாரிக்கலாம் என

குறிப்புகள்

மாணவர்களுக்கு கூறுதல் அவசியம். வாசித்தல் திறனை மேம்படுத்தவும், படஅட்டைகளை விளக்குவதிலும், செய்வதிலும் சுவரொட்டிகளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

துவக்கப்பள்ளியிலல் பயிலும் 3 ஆம் வகுப்பு மாணவர்கள் அச்சித்திரங்களிலிருந்து எடுக்கும் வார்த்தைகளை முறையாக பட்டியலிடலாம். நீங்கள் பதிவுக்குழுவைக் காட்டி, அதன் பொருள், அந்த பலகை அவற்றில் எழுதப்பட்ட சின்னங்கள் படங்கள் போன்றவைகளைக் கொண்டு என்ன சொல்கிறது? அவை அடிப்படையில் என்ன கருத்தை உணர்த்துகிறது என்பதை சொல்கிறது. மேலும் நாம் மாணவர்களை அவர்களது சொந்த நடையில் எழுதச் சொல்லலாம்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 10**

1. எந்த விதத்தில் சுவரொட்டிகளும், விளம்பரங்களும் நமது சுற்றுப்புற சூழல்களிலிருந்து புரியவைக்கிறது.

   1. சிரமமான வழிகளில்
   2. கவர்ச்சியற்ற வழிகளில்
   3. சாதாரண மற்றும் கவர்ச்சிகர வழிகளில்
   4. களைப்பூட்டும் வழிகளில்

2. நீ வசிக்குமிடத்தில் நீ பார்வையிட்ட 20 சுவரொட்டிகள், பதிவுக்குழுக்கள் அடங்கிய பட்டியலை தயார் செய்க.

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

3. 5ஆம் வகுப்பு பாடத்திட்டத்திற்கு நாம் எந்த விதமான சுவரொட்டிகளை தயார் செய்யலாம். அது தொடர்பான 5 வினாக்களை பட்டியலிடுக.

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

4. உன்னைப் பொருத்த வரையில் மொழிப்பாடம் கற்பிக்கும போது இத்தகைய சுவரொட்டிகள் எந்த வகையில் பயன்படுகிறது.

குறிப்புகள்

மேலும் மற்ற எந்த வழிகளில் இவைகளை பயன்படுத்தலாம்.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

5. சில விளம்பரங்களை பயன்படுத்தி முதல் அல்லது இரண்டாம் வகுப்பிற்கு ஒரு பாடத்திட்டம் தயார் செய். மேலும் நான்காம் வகுப்பிற்கு அதே விளம்பரங்களை கற்பித்தல் பொருளாகப் பயன்படுத்தி ஒரு வித்தியாசமான பாடத்திட்டம் தயார் செய்.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## 8.8 பாடத்திட்டத்தை எவ்வாறு தயார் செய்வது?

ஒரு வகுப்பறையின் இரண்டு கூறுகள், ஆசிரியர்களும் மாணவர்களும் ஆவர். இருவருமே அறிவைப் பெறுவதும், உள்வாங்குதலும், அதிகரிக்கச் செய்வதிலும் கற்றல் என்ற செயல்பாடே நடைபெறுகிறது. வகுப்பறையின் மற்ற கூறுகளாக பாடப்புத்தகங்கள், பாடங்கள், தேர்வுகள், குழந்தைகளின் அனுபவங்கள், பெற்றோர்களின் எதிர்பார்புக்கள் இவை அனைத்தும் அடங்கியுள்ளன. இவை அனைத்தையும மனதில் கொண்டு பாடத்திட்டம தயார் செய்தல் வேண்டும். பாடத்திட்டமானது கடுமையாக, நெகிழ்வுத் தன்மை ஆகிய இரண்டையும் கொண்டதாக இருத்தல் வேண்டும். கற்பித்தல் பொருட்களை பயன்படுத்தும்போது திடமான உறுதியும கற்பித்தலின்போது ஏற்படும் உண்மையான சிரமங்களில் நெகிழ்வுத் தன்மையும், முக்கியமாக இடம் பெறுகின்றன. எனவே ஆசிரியர் கடைசி நேரங்களில் சமாளிக்க வேண்டிய தருணங்களில் திடமான பொருட்களின் பயன்பாட்டை மனதில் கொண்டு பாட்திட்டம் தயாரித்தல் வேண்டும். வகுப்பறை செயல்பாடுகள் சிறந்த முறையில் முன்னேற்றமடையச்செய்யவும் வகுப்பில் சில மாற்றங்கள் செய்ய நேரிடுமாயின் அவற்றிற்கு ஆசிரியர் தன் குறிப்புகளை எழுதி அதில் கவனம் செலுத்தி அவற்றை நிறைவேறச் செய்தல் வேண்டும். ஒரு பாடத்தை எவ்வாறு பிரித்து மொழியைப் பயன்படுத்தி இலக்குவை எட்டுவதை மனதில் வைத்து பாடத்திட்டத்தை தயாரித்தல் வேண்டும்.

1. **வகுப்பு நேரங்கள்:** ஆசிரியர் முதலில் தெரிந்து கொள்ள வேண்டியது ஒரு பகுதியை முடிக்க ஒரு வாரத்தில், ஒரு வருடத்தில் எத்தனை

குறிப்புகள்

நாட்கள், எத்தனை மணிநேரங்கள் தேவை என்பது ஒரு பாடத்தை முடிக்க எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்து உங்கள் கற்பித்தல் குறிக்கோள்களை அடைகிறீர்கள் என்பது உள்ளது. ஒரு முழுமையான பாடத்திட்டத்திட்டத்தை விருப்பப்பட்ட குறிக்கோளுடன் உருவாக்குதல் ஒரு பாடப்பகுதி முழுவதையும் கற்பித்தலின் நேரம், நாட்கள் போன்றவைகளை பொறுத்து அமையும்.

2. **வகுப்பின் எண்ணிக்கையும் மாணவர்களின் வயதும்.**

3. **அத்தியாயத்தின் தலைப்பு.**

4. **முன்னறிவு :** மாணவர்களின் முன்னறிவை சோதிப்பது மிகவும் முக்கியம் ஏனெனில் அந்த முன்னறிவே இனிமேல் நடத்தப்போகும் பாடப்பகுதிகளுக்கம் கற்றல் கற்பித்தல் குறிக்கோள்களை அடைவதற்கும் முழுமையைச் செய்வதற்கும் ஆகும். ஒரு ஆசிரியர் மூன்றாம் வகுப்பிற்கு கற்பிக்கிறார் எனில் அவருடைய எதிர்பார்ப்பு என்னவெனில் அவ்வகுப்பு மாணவர்கள் குறைந்தது ஆங்கில எழுத்துக்கள், எண்கள் பற்றி அறிந்திருப்பதே ஆகும். ஒருவேளை அந்த வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு அவை தெரியவில்லை எனில், அந்த ஆசிரியர் அவரது பாடத்திட்டத்தில கீழ்மட்டத்தில் உள்ள மாணவர்களுக்கென தேவையான மாற்றங்களைக் கொண்டுவருதல் வேண்டும்.

5. நாம் ஒரு பாடத்தின் பொதுவான நோக்கங்களே அப்பாடத்தின் மூலம் நாம் கற்பிக்கு ஒட்டுமொத்த நோக்கங்களாகும்.

6. ஒரு வகுப்பறையில் அன்றைய நாள் என்ன கற்றல் கற்பித்தலில் நிகழ்ந்தது என்பதை குறிப்பிட்ட நோக்கங்கள் அன்றாட நாட்களில் நிகழ்வதை விளக்குகிறது.

7. **முறைகள் / செயல்முறைகள்:** பொதுவான மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களை மனதில் கொண்டு முறைகள் / செயல்முறைகள் என்பது அத்தியாத்தின் முன்னேற்றத்தை பற்றி கூறுவதாகும்.

8. **சுயமதிப்பீடு:** சுயமதிப்பீடு என்பது காலியாக இருக்கும் இடம், ஆசிரியர் ஒரு பாடத்தை கற்பித்த பிறகு நிரப்பக் கூடியவை. ஆசிரியர் ஒரு வகுப்பறையில் எது சரியாக நடந்தது, எது தவறாக நடந்தது மற்றும் எதிர்பார்த்த நோக்கங்கள் அடைய நேரிட்டதா? இல்லையா என்பதைப் பற்றி எழுதவேண்டும். அவ்வப்போது சில மாற்றங்களை பாடத்தில் செய்யத்தக்கதற்கான காரணத்தையும சூழலையும் அறிய உதவுகிறது.

குறிப்புகள்

**9. பரிந்துரைகள் /கருத்துக்கள்:** இங்கு தயாரிக்கப்பட்டது வகுப்பறையில் நமது சொந்த அனுபவங்கள் மற்றும் அதை சரிசெய்யும் செயல்பாட்டினை செய்யவும் உதவுகிறது. முதல் நாளின் கற்பித்தலின் பெற்று அப்பாடத்தின் நம்பகத்தன்மையை வெளிப்படுத்துகிறது.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 11**

1. ஒரு பாடத்திட்டத்தை தயார் செய்யும்போது எத்தனை குறிப்புகளை மனதில் கொள்ள வேண்டும்.

   a) நான்கு b) ஐந்து c) ஒன்பது d) பனிரெண்டு

2. சுயமதிப்பீடு என்றால் என்ன?

   ........................................................................................................

   ........................................................................................................

   ........................................................................................................

3. பொதுவான அல்லது ஒட்டுமொத்த நோக்கங்களுக்கும், குறிப்பிட்ட நோக்கங்களுக்கும் உள்ள வேறுபாடு யாது?

   ........................................................................................................

   ........................................................................................................

   ........................................................................................................

4. ஒரு பாடத்திட்டத்தை தயார் செய்யும்போது எவற்றை எல்லாம் சேர்ப்பாய்?

   ........................................................................................................

   ........................................................................................................

   ........................................................................................................

இந்த அலகு ஒரு மாதிரி பாடத்திட்டத்தை பல்வேறு மாதிரிகளில் உருவாக்க மிகவும் பயன்படுகிறது. முகிமா கோட்ராவில் உள்ள பள்ளியில் ஐப்பான் என்ற 5 ஆம் வகுப்பு பாடத்திற்கு எழுதப்பட்ட பாடத்திட்டத்தை நீங்கள் கவனித்தருப்பீர்கள். எடுத்துக்காட்டால் மகிமா எவ்வாறு வகுப்பில் ஆரம்பிக்கும்போது குழந்தைகளிடம் ஐப்பானைப் பற்றி பேசிவிட்டு பிறகு பண்பாடு, விழாக்கள் பற்றி கூறினார் என்பதை பார்த்தோம். அவர் வரைபடத்தைக் கொண்டு ஐப்பான் எங்குள்ளது என்றும் அதன் தலைநகரமான டோக்கியோ பற்றியும் பேசினார். ஆவர் ஐப்பானைப்பற்றிய உயிரோட்டமான படங்கள், சாஸ்திர சம்பிரதாயங்கள், உடை, பண்பாடு,

குறிப்புகள்

நாகரிகம், உணவு, பூவேலை போன்றவற்றையும் விவரித்தார். அதன்பிறகு கொடுக்கப்பட்ட பட்ட படங்களைக் கொண்டு விவாதித்து சிரமமாக வார்த்தைகளையும் அதன் பொருள்களையும் கற்பித்தார். தனியாகவும் குழுவாகவும் மாணவர்களும் அவ்விரவாத்தின் மூலம் தக்க விளக்கமாகவும் புரியுமாறு அளிக்கப்பட்டது. ஒவ்வொரு பத்தியை கற்பித்த பிறகு அவற்றில் உள்ள நிகரான கேள்விகள் கேட்கப்பட்டது. செயல்திட்டத்தில் பத்தாம் வகுப்பு பாடத்தில் உள்ள ஒரு பிரிவில் மாணவர்கள் ஐப்பான் சம்பந்தப்பட்ட அனைத்து பொருட்களையும் ஒருங்கிணைத்தபடி கொண்டுவரச் செய்து பின்பு அவற்றை வகுப்பில் செயல்திட்ட கண்காட்சிக்கு வைக்கப்பட்டது.

## 8.9 தொகுத்தறிதல்

- நாம் நம் பாடத்திட்டத்தை நன்கு தயார் செய்வதனால் நமது வகுப்பறை பாடத்தை முறையாக நடத்த முடியும்.
- மாணவர்களின் பின்னணியை தெரிந்து கொள்வது மிக அவசியம் வகுப்பறை சூழல் மற்றும் அவ்வத்தியாயத்தின் பின்னணியையும் ஒரு பாடத்திட்டத்தின் வெற்றயாகும்.
- தொடக்கப்பள்ளியில் கற்கும் குழந்தைகளை எவ்வித தயக்கமுமின்று பேச செய்வதும் மற்றும் அவர்களுக்கு தெரிந்த மொழியை உபயோகிக்க செய்வதும் அவசியமாகும்.
- குழந்தைகள்அவர்களது வகுப்பறை செயல்பாடுகளில் பங்கேற்று ஆசிரியர் மட்டும் பேசாமல் குழந்தைகளையும் பேசச் செய்துவத நன்மை பயக்கும்.
- நாம் கற்றுக்கொடுப்பது மட்டுமே மாணவர்களுக்கு பாடமல்ல குழந்தைகளுக்கு அவர்களின் சுயசிந்தனை மூலம் அவர்களே கற்றுக்கொள்கின்றனர். எனவே சிந்தனை செயல்பாடுகள் நமது பாடத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.
- குழந்தைகளுடைய பதிலில் குற்றங்களை கண்டுபிடிப்பதற்கு மாறாக அவர்கள் கூறிய பதில்களை ஏற்றுக்கொள்ளுதல் நன்று. அவர்கள் எதைக் கற்றுக்கொண்டார்கள் என்பதை மட்டுமே மனதில் கொள்ள வேண்டும். குழந்தைகள் எதைச்சரியாகக் கூறினார்கள் என்பதை மட்டும் மனதில் கொண்டு அவர்களை விளக்கப்படுத்த வேண்டும்.
- ஆசிரியர் வகுப்பறைக்கு வருமுன்பே இரண்டு மூன்று முறை அந்த அத்தியாயத்தை படித்து விட்டு அதற்கேற்ற பொருத்தமான செயல்பாடுகளைத் தயாரித்து வந்தால் வகுப்பில் கற்பித்தல் சுலபமாக இருக்கும்.

குறிப்புகள்

- ஆசிரியர் ஒரு பாடத்திட்டத்தை தயார் செய்யுமுன் அவர் வகுப்பறையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை வயது, வகுப்பறை சூழல், பாடத்தலைப்பை பற்றிய மாணவர்களின் அறிவாற்றலின் பின்னணி, போன்றவற்றை மனதில் கொள்ள வேண்டும்.

## செயல்பாடு

மூன்று பாடத்திட்டங்களை தயார் செய்க ஒன்று செய்யுள் பாடத்திட்டம் இரண்டு–கதை கூறும் பாடத்திட்டம் மூன்று–நாடகம் பற்றிய பாடத்திட்டம், இவைகளை தயார் செய்து குழந்தைகளுக்க கற்பிக்க உங்கள் அனுபவங்களை பதிவு செய்க.

## 8.10 பரிந்துரைக்கப்பட்ட வாசிப்புகள், குறிப்புகள்

இந்தி பக்கம்2 (2000) பாட்டை பீகார் மாநில புத்தக வெளியீடு.

ஆங்கில புத்தகம் 5(2004) பஞ்குலா, ஹரியானா அரசு பாடப்புத்தக அச்சகம்.

## 8.11 அலகு முடிவு பயிற்சி

1. இங்கு கொடுக்கப்பட்ட மாதிரி பாடத்திட்டத்திலிருந்து நீங்கள் புரிந்து கொண்ட பொருட்களை அட்டபணைபடுத்துக பின்வரும் குறிப்புகளை வைத்து விவாதிக்க.

   a) ஆசிரியரின் பங்கு b) வகுப்பறையில் குழந்தைகளின் பங்கீடு

   c) தலைப்பை ஒட்டிய வேலை d) வினா விடைகளை விவாதிக்கும் முறைகள்.

2. மகிமாவின் வகுப்பறைக்கும் மற்றவர்களின் வகுப்பறைகளுக்கும் உள்ள முக்கியமான வேறுபாடு யாது?

3. ஒரு வகுப்பை கற்பிக்கப்போகும் முன் நீங்கள் எந்த மாதிரியான தேவையான அத்தியாவசியம் பொருட்களை சேகரிப்பீர் அது பாடத்தை திட்டமிடும் போது என்ன மாற்றத்தை கொடுக்கும்.

4. மகிமாவின் இடத்தில் நீங்கள் இருந்தால், ஐப்பான் என்ற அத்தியாத்தை எவ்வாறு கற்பிப்பீர்கள்? உங்கள் பதிலுக்கு எடுத்துக்காட்டாக ஒரு பாடத்திட்டத்தை தயார் செய்க.

குறிப்புகள்

# அலகு 9

# கல்வி சார் பொருட்கள் : சில புதிய பரிமாணங்கள்

## அமைப்பு

9.0 அறிமுகம்

9.1 கற்றல் இலக்குகள்

9.2 கற்கத்தேவையான பொருட்கள்

9.3 கல்வி சார் பொருட்கள் ஏன்?

9.4 கற்றல் கற்பித்தல் பொருட்கள் (அ) கற்பித்தல் கருவிகள்

9.5 மாதிரிகள் மற்றும் காட்சிபடுத்தும் பொருட்கள்

9.6 கற்றல் கற்பித்தல் கருவிகள் உதவும்முறை?

9.7 சிறந்த கல்விசார் கருவிகள்;.

9.8 ஒரு முறை ஒரு பொருளை கொண்டு என்ன செய்யலாம்?

9.9 மொழிபாடம் கற்;பித்தலில் அட்டைகளின் பயன்பாடு.

9.10 கற்றல் சூழலில் மொழிப்பாடம் கற்பித்தலுக்கு உதவும் கருவிகள்.

9.11 மொழி வகுப்பில் பயன்படுத்தக் கூடிய பொருட்கள்

9.12 எளிதில் பெறக்கூடிய கல்விசார் பொருட்கள்

9.13 பொருட்களை பயன்படுத்தும்முறை.

9.14 பொருட்களை எவ்வாறு தேர்வு செய்வது?

இயல் இறுதி பயிற்சிகள்

9.15 தொகுப்புரை

9.16 பரிந்துரைக்கப்பட்ட மேற்கோள் நூல்கள்

9.17 இயல் இறுதி பயிற்சிகள்

## 9.0 அறிமுகம்

நாம்; கவனமுடன் சிந்தித்தால், நம்மைச் சுற்றியிருக்கும் பெரும்பாலான பொருட்கள் கல்விசார் பொருட்களாகப் பயன்படக்கூடியவையாகும். ஒரு வகையில் பள்ளி, வகுப்பறைகள், மைதானம் முதலியன கற்கள், இலைகள்,

குறிப்புகள்

மற்றும் கூழாங்கற்கள் போன்று கல்வி சார் பொருட்களாக பயன்படக்கூடியவையே. அன்மைக்காலங்களில் கல்வி சார் பொருட்கள் சிக்கலானதாகவும் அசாதாரண தொழில்;நுட்பம சார்;ந்ததாகவும் மாறிவருகின்றன. மின்னனுப் பொருட்களும் விலையுயர்ந்த சாதனங்களுமே சிறந்த கற்பித்தல் பொருட்கள் என்ற மாயை உள்ளது. தகவல் தொழில் நுட்பத் துறையின் முக்கியத்துவத்தினால் கணினி, இணையம், வலைதளம், பிணையம் மேலும் பல புதிய வகையான பொருட்கள் மற்றும் சொற்கள் நம்மை சுற்றி வலம் வருகின்றன. ஒரு காலத்தில் வானொலி, தொலைக்காட்சி, ஒலி நாடா கருவி போன்றவை சிறந்த கல்விசார் பொருட்களாக கருதப்பட்டது. இதற்கும் முன்; சிறிய பொருட்கள், சுவரொட்டிகள,; மின் அட்டைகள் முதலியன கல்விசார் பொருட்களாப் பயன்படுத்தப்பட்டன். அண்;;;மைக் காலங்களில் அத்தகைய பொருட்களின் முக்கியத்துவம் குறைந்துவிட்ட போதிலும் தற்பொழுது இப்பொருட்களுங்; கூட பொருத்தமானதாக, போதுமான தரத்தில், எண்ணிக்கையில்; பள்ளிகளுக்குச் சென்றடைவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மை ஆண்டுகளில் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்முறைகளைப் பற்றிய புரிதல், குழந்தையின் திறன் மற்றும் ஆர்வம் முதலியன பெரும் மாற்றத்திற்கு உடபடுத்தப்;பட்டுள்ளன. இந்த புதிய புரிதலின் பின்னணியில் கல்விசார் பொருட்களின் தரம்;, அதன் பயன்பாடு மற்றும் வகைகள் ஆகியவற்றை மறுஆய்வு செய்வது அவசியம் எனும் வகையில் இது புதிய பரிமாணம் பெறுகிறது.

கல்வி சார் பொருட்களை வகைப்படுத்துவதற்கு பல வழிகள் உள்ளதை இங்கு எளிதாகக் காணலாம். ஒரு பிரிவில் மாணவர்களுக்கான பொருட்கள் மற்றும் ஆசிரியருக்கான பொருட்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மற்றொரு பிரிவில் காட்சி பொருட்கள் மற்றும் வாய்மொழி கேள்விக் கருவிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த பிரிவுகளின்; நோக்கம் மற்றும் பயன்படுத்தும் முறைகள் வேறுபடுகின்றன. கல்வி சார் பொருட்களை மட்டும் கொண்டு பொருத்தமான கற்பித்தல் முறைகளைத் தேர்ந்தெடுக்க முடியாது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். கல்விசார் பொருட்களின் பயன்பாட்டிற்கான திட்டம் என்ன?. வகுப்பறையில் காட்சிபடுத்தப்படும் கல்விசார் பொருட்களின் அமைப்பு மற்றும் பயன்பாடு எவ்வகையான நோக்கங்களை நிறைவேற்றியுள்ளன? என்பது போன்ற வினாக்களை இவ்வலகானது விவரிக்கிறது.

## 9.1 கற்றல் இலக்குகள்

இந்த அலகின் வழியாக

- கற்றல் பொருட்களின் வகைகளைப் பற்றித் தெளிவாக தெரிந்து கொள்ளுதல்.

குறிப்புகள்

- மிக அவசியமான கற்பித்தல் பொருட்களை அடையாளம் காணுதல்
- சிறந்த கற்றல் பொருட்கள் எவை என்ற கருத்துக்களை வெளிப்படுத்துதல்.
- கற்றல் கற்பித்தல் பொருட்கள் மற்றும் கற்பித்தல் கருவிகளின்; வேறுபாட்டை அறிதல்.
- மொழிக் கற்பித்தலில் கற்றல் கருவி பயன்பாட்டைப் பகுத்தாய்தல்.
- கற்றல்; கருவிகளை, எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற புரிதலை வளர்த்தல்

ஆகிய நோக்கங்கள் நிறைவேற்றப்படும்.

## 9.2 கற்றலுக்கு அவசியமான பொருட்கள்

ஒரு வகுப்பறையில் சில அவசியமான கல்விசார் பொருட்கள் இருக்க வேண்டும் என்பதை ஆசிரியர் அறிந்திருத்தல் அவசியம்;. அதேபோல் பள்ளிகளிலும் சில அவசியமான கல்விசார் பொருட்கள் இடம் பெற வேண்டும்; பள்ளிகளில் தரமான கல்வியைத் தருவதற்கும் சில பொருட்கள் இருக்க வேண்டிய அவசியத்தை பல நேரங்களில் நாம் மனதில் கொள்வதில்லை. சில அவசியமான கல்வி சார் பொருட்களை நம்மால் உடனே நினைவு கூர முடியும். ஆனால் சில பொருட்கள் நம் நினைவில் வருவதில்லை. உதாரணமாக ஒரு குழந்தை அமர தேவையான நாற்காலி, அல்லது இருக்கை, தேவையான வெளிச்சம் வெளிச்சம்;, தூய குடிநீர் வசதி மற்றும் கழிவறை வசதிகள் போன்ற வசதிகளைக் கூறலாம். 1986 ஆம் ஆண்டின் புதிய கல்வி கொள்கை ஆவணம் நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் கல்வியை மேம்படுத்துவதற்கு ஒரு முக்கிய படியாக இருந்தது. பள்ளிகளில் இருக்க வேண்டிய அவசியமான பொருட்களை கண்டறிவது இதன் முக்கிய அம்சமாகும். குறைந்த பட்ச வகுப்பறைகள், இருக்கை வசதிகள், சில விளையாட்டுப் பொருட்கள், நூலகப் புத்தங்கள் முதலியன இதில் அடங்கும். இது உங்கள் பள்ளியை பற்றிச் சிந்திக்க உதவுவதோடு பள்ளி சரியான முறையில் செயல்படுவதற்கு தேவையான பொருட்களை கண்டறிவதற்கும் உதவும். உங்கள் பள்ளிகளில் இடம் பெற்றுள்ள/பெறாத பொருட்கள் எவை என்பது பற்றி அறியுவும் உதவும்.

இதன்றி மேலும் சில அவசியமான கல்வி சார் பொருட்கள் கற்பித்தலுக்குத் தேவைப்படுகின்றன.

குறிப்புகள்

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 1**

1. கேட்டல், பேசுதல் திறன்

1. பின்வரும் அனைத்தும் முக்கியமான பொருட்களா? உங்கள் பதிலுக்கான காரணத்தை கூறுக.

   அ. விளக்கப்படம் ஆ. மாதிரிகள்

   இ. இருக்கை ஈ. மொழி அட்டைகள்

2. பள்ளிகளில் இருக்க வேண்டிய அவிசியமான பொருட்கள் எவை?

   ............................................................................................................

   ............................................................................................................

   ............................................................................................................

3. உங்கள் பள்ளியில் எவ்வகையான கல்வி சார் பொருட்கள் இல்லை என்று நினைக்கிறீர்கள். சிலவற்றைக் குறிப்பிடுக.

   ............................................................................................................

   ............................................................................................................

   ............................................................................................................

## 9.3 கல்வி சார் பொருட்கள் ஏன்?

கல்வி சார் பொருட்களை பயன்படுத்தும் முதன்மைப் பயனாளர் யார்? இந்த வினாவிற்கான விடை கற்றல் கற்பித்தலை காட்சிபடுத்துதலில் அடங்கும். ஒரு சாத்தியமான அணுகுமுறை என்ன வென்றால் கல்வி சார் பொருட்களின் பயன்பாட்டை புரிந்து கொண்டு அவருடைய பார்வையில் உரிய விளக்கத்தைக் எங்ஙனம் அளிக்கிறார் என்பதில் உள்ளது. இதன் பொருள்; சரியான விளக்கத்தை மாணவர்களுக்கு அளிக்கிறார் என்பதுதான். பொதுவாக ஒரு குழந்தை அமைதியாக அமர்ந்து கவனிப்பதும் ஆசிரியர் கூறும் கருத்துக்களை தனது ஏட்டில் குறிப்பெடுத்துக் கொள்வதும்;, மற்றும் பொருட்களை கையாள ஆசிரியர் வழிகாட்டியிருந்தால் அதை பயன்படுத்தும திறன் பெற்றிருப்பதுமே அக்குழந்தையிடம் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அடிப்படையில் மாதிரிகள், நழுவங்கள், விளக்கப்படங்கள் ஆகிய பொருட்களை குழந்தைகள் அறிந்திருக்க வேண்டியது அவசியம். இது ஆசிரியர் மைய முறையாகும். அண்மைக்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரபலமான முறை இதுவாகும். தற்பொழுதும் கூட பலர் அதை ஏற்றுக்கொள்கின்றனர். இந்த முறையில் கற்பித்தல் பொருட்களை


குறிப்புகள்

பெரும்பாலும் ஆசிரியர்களே கையாளுகின்றனர். குழந்தைகள் பார்வை யாளர்களாக மட்டுமே உள்ளனர். குழந்தைகள் அப்பொருட்களை தொடவோ, பயன்படுத்தவோ, முடிவதில்லை. அப்பொருட்களை குழந்தை கையாண்டால் அது சேதமடைந்துவிடும் என்று ஆசிரியர்கள் அஞ்சுகின்றனர். இதற்கு முந்தைய இயல்களில் படித்ததைப்போல கற்பித்தலுக்கான இந்த அணுகுமுறை தொடக்க வகுப்புகளுக்கு ஏற்றதாக இல்லை. தற்பொழுது ஒவ்வொரு குழந்தையும் அவர்களுடைய அறிவைத் தங்களுடைய சிந்தனையின்; அடிப்படையில் கட்டமைக்கின்றனர். ஆசிரியர் அம்முயற்சியில் உதவியாளராக மட்டுமே செயல்படுகிறார். குழந்தைகள் மற்றவர்களின் சிந்தனையின் அடிப்படையில் செயல்படாமல் தங்களுடைய விவாத வடிவிலான எண்ணங்களில் செயல்படுதல் வேண்டும். கல்வி சார் பொருட்களை குழந்தைகள் பயன்படுத்தும் முறையே தற்பொழுது பெரும்பாலும் பரிந்துரைக்கப்படுகிறது. குழந்தைகள் தங்கள் விவாத வடிவிலான எண்ணங்களின் அடிப்படையில் வெவ்வேறு கருத்துக்களை உருவாக்குவதற்கு கல்விசார் பொருட்கள் உதவுகின்றன. பொருட்களைக் கையாளுவதற்கும், ஆய்வு செய்வதற்கும் அதன் பாகங்களைப் பிரித்தும் சேர்ப்பதற்கும,; வெவ்வேறு வகையில் ஆய்வு செய்வதற்கும் குழந்தைகளுக்கு வாய்ப்புகள் கொடுக்க வேண்டும். இந்த கற்பித்தல் செயல்முறைக்குக் கல்வி சார் பொருட்கள் குழந்தைகளிடமே இருக்க வேண்டும் மேலும் அவர்கள் பயன்படுத்தக் கூடிய இடத்தில் இருக்க வேண்டும். கல்வி சார் பொருட்களின் பயன்பாடு மொழி வகுப்புக்கும் மற்ற பாட வகுப்புகளுக்கும் முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. நாம் மொழி வகுப்புகளில் பயன்படுத்தக்கூடிய பொருட்களின் வகைகளைப் பற்றியும் கற்பித்தலைப் பற்றிய இரு வெவ்வேறு புரிதலைக் கொண்டு பொருட்களைப் பயன்படுத்தும் சூழலை பற்றியும் அடுத்தப்பகுதியில் பார்ப்போம்.

மேலும் நாம் சில நன்கு தெரிந்த, கலைச்சொற்களைக் கருத்தில் கொண்டு கற்பித்தலுக்கான இரண்டு கண்ணோட்டத்திலும் அவற்றை தொடர்ந்து ஆய்வு செய்வோம். TLM (கற்றல் கற்பித்தல் பொருட்கள்) என்னும் சொல் கல்வி துறையில் நன்கு தெரிந்த சொல்;. அதுபோலவே கற்பித்தல் கருவிகள் என்ற சொல்லும் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இந்த இரு சொற்களுமே இணைச்சொற்களாகக் கருதப்படுகின்றன. இருப்பினும் இவ்விரு சொற்களும் பல்வேறு பொருட்களையும் பயன்பாட்டில் இருவேறு பார்வையையும் கொண்டதாக உள்ளன.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 2**

*1.* TLM-ன் விரிவாக்கம்

| | |
|---|---|
| a) Total Listening Matter | b) Total Learning Matter |
| c) Teaching Learning Material | d) Teaching Learning Module. |

குறிப்புகள்

(2) கற்றல் கற்பித்தல் பொருட்கள் மாணவர்களைச் சென்றடைதல் அவசியமானது ஏன்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

(3) TLM பொருள் என்ன?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

(4) கற்பித்தல் பற்றிய எவ்வகையான பார்வை தொடக்க வகுப்புகளுக்கு பொருத்தமற்றதாக உள்ளது.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## 9.4 கற்றல் கற்பித்தல் பொருட்கள் ஏள கற்பித்தல் உபகரணங்கள்

அனைத்து வகுப்புகளிலும், பாடங்களிலும் உள்ள எல்லா சிக்கல்களுக்கும் உலகளாவிய தீர்வாக கற்றல் கற்பித்தல் பொருட்கள் உள்ளது. கற்றல் கற்பித்தல் பொருட்களின் பயன்பாடு அனைத்தையும் மாற்றிவிடும் என்ற நம்பிக்கை உள்ளது. கற்றல் கற்பித்தல் பொருட்களை உருவாக்குவதற்கு பணிமனை உள்ளது. தெர்மாக்கோல், விளக்கப்படம், வண்ணங்கள் சார்ந்த அனைத்துப் பொருட்களும் இந்தப் பணிமனையில் இடம் பெற்றிருக்கும். ஆசிரியர்கள் தங்கள் கலைத்திறனையும், கற்பனை திறனையும் பயன்படுத்தி அழகிய மற்றும் நேர்த்தியான மாதிரிகளை இப்பணிமனையில் உருவாக்க முயற்சிக் செய்கிறார்கள்.

## 9.5 மாதிரிகள் மற்றும் காட்சிப்படுத்தும் பொருட்கள்

இந்த மாதிரிகளை நாம் கருத்தில் கொண்டு அவற்றின் பயன்பாட்டுச் சூழலில் அதன் பண்புகளை ஆராய்ந்தால், பின்வரும் மூன்று முக்கியமான வினாகள் தோன்றும்.


குறிப்புகள்

1) இந்த "மாதிரிகள்" குழந்தையின் சிந்தனைக்கு உதவுகின்றன என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? குழந்தை தனது கற்பனைத்திறனுடன் தடையின்றிப் படைப்புகளை உருவாக்கவும,; வெளிப்படுத்தவும் இது ஒரு அடிப்படையாக அமைகின்றதா?

**(அல்லது)**

சில தகவல்களை அனைவரும் ஒரே விதமாகப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துகிறார்களா?

2) இம்மாதிரிகளைக் கொண்டு குழந்தைகள் வேறு ஏதேனும் செய்ய இயலுமா? அவர்கள் அவற்றை ஏதேனும் ஒரு வகையில் தொடரவும், மாற்றவும் முடியுமா?

**(அல்லது)**

குழந்தைகள் பொருட்களை விட்டு விலகி இருக்க வேண்டும். ஏனெனில் அதை அவர்கள் தொட்டால் பயன்படுத்தினால் அது உடைந்துவிடும் அல்லது சேதமடைந்துவிடும்.

3) குழந்தைகள் கல்வி சார் பொருட்களை அணுகவும், அவா பயன்படுத்தவும் முடியும்.

**(அல்லது)**

மாதிரிகளை, ஒரு பிரதி எடுப்பது கூட மிகக்கடினமான செயல். ஒவ்வொரு பிரதியையும் எடுக்க அதிக நேரம் செலவாகிறது. மேலும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு பிரதி என்பது சாத்தியமில்லாதது.

TLM என்பதை கற்றல் கற்பித்தலுக்கான பொருட்கள் என்று எளிமையாக மொழிபெயர்க்கலாம். இதற்கு இணையாக வரும். அனைத்து சொற்களுமே கற்போரிடத்தில் மிகக் குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றன. இவ்வகையான சொற்கள் அனைத்தும் கற்பித்தல் கருவிகளாகும் பொருட்களைக் குறிக்கின்றன.

கற்றல் கற் பொருட்கள் மற்றும் கற்பித்தல் கருவிகள் ஆகிய இரண்டுமே பயனுள்ளதாக இருக்கலாம் ஆனால் அவை எந்த சூழலில் எவ்வாறு பயனுள்ளதாக அமைகின்றன என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். ஆனால் வகுப்பறையில் இப்பொருட்கள் இருப்பதாலேயே தரமான கற்பித்தல் மேற்கொள்ளப்படுகிறது என்று உறுதிப்படுத்த இயலாது. வெவ்வேறு வகையான விளக்கப்படங்கள், தெர்மாக்கோல்/நெகிழியைக் கொண்டு தயாரிக்கப்படும் மாதிரிகள், ஆகியவையே சிறந்த கற்றல் கற்பித்தல் பொருட்கள் மற்றும் கற்பித்தல் கருவிகளுக்கு மாதிரிகளாக விளங்குகின்றன. கற்பித்தலுக்கு துணைபுரிய ஆசிரியர்கள்; குழந்தைகளுக்காகத் தயாரித்துக்

குறிப்புகள்

காட்டப்படும் சில மாதிரிகளே இவை. அவற்றுள் சில கற்றல் கற்பித்தல் செயல்முறைக்கு உதவாமலும் இருக்கலாம். பொதுவாக ஆசிரியர்கள் இப்பொருட்களை பல நாட்களாக தயார் செய்து, அவற்றை TLM அறைகளில்; பல ஆண்டுகள் காட்சிப்படுத்தினாலும், வகுப்பறையில் குழந்தைகள் தொடுவதற்கோ, கையாளவோ விடுவதில்லை. ஏனெனில் அந்தப் பொருட்கள்; சேதமடைந்துவிடும் என்ற பயத்;தினால்தான். மேலும் அவை கலைத்திறன் மிக்கதாகவும் பல மணிநேரம் செலவிட்டு உருவாக்கப்படுவதாலுமே ஆகும். அவை சேதமடைந்தால் மீண்டும் உருவாக்குவது கடினம்.

அனைத்து பள்ளிகளிலும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களிலும் (DIETs) ஒரே வடிவிலான கற்பித்தல் கருவிகளின் மாதிரிகள் காணப்படுகின்றன. அவற்றில் பயன்படுத்தப்படும் பொருட்களில், வண்ணங்களில் உருவாக்கும் திறனில் மட்டுமே சிறுவேறுபாடு உள்ளது. இம் மாதிரிகளை உருவாக்குவது மிகச் சவாலான பணியாகும். மேலும் ஆசிரியர்களுக்கு கைவேலைப்பாட்டுடன் கூடிய திறனும் தேவைப்படுகிறது. ஆனால் குழந்தைகளுக்கு எந்த பயனும் இல்லை. அவர்கள் அதை ஒரு முறை மட்டுமே வியப்புடன் பார்க்கிறார்கள் பின்னர் அவற்றை மறந்து விடுகிறார்க்ள. அங்கு கற்றல் நடைபெறுவதில்லை.

அவற்றைப் பற்றி மறந்து விடுகிறார்கள். அங்கு கற்றல் நடைபெறுவதில்லை.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 3**

1. இவற்றுள் கற்பவர் பங்கு குறைவாக உள்ளது எது?

   (அ) கற்றல் கற்பித்தல் பொருட்கள்

   (ஆ) கற்பித்தல் உபகரணங்கள்

   (இ) கற்றல்

   (ஈ) மாதிரிகள்.

2. கற்றல் கற்பித்தல் பொருட்கள் என்பது “மாய மந்திரம் அல்ல” இக்கூற்றை விவரி.

   ......................................................................................................

   ......................................................................................................

   ......................................................................................................

3. கற்றல் கற்பித்தல் பொருட்களுக்கும் கற்பித்தல் கருவிகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை கூறுக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

4. குழந்தைகளிடம் கற்றல் கற்பித்தல் பொருட்கள் சென்றடைவது அவசியமா? ஏன்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

5. கற்றல் கற்பித்தல் பொருட்கள் கற்பித்தலுக்கு எவ்வகையில் உதவுகின்றன?. இவற்றை வழங்குவக எவ்வாறு உதவலாம்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## 9.7 சிறந்த கல்வி சார் பொருட்கள்

சிறந்த கல்விசார் பொருட்கள் ஆசிரியரின் கருத்துகளை விளக்குவதற்காக மட்டும் பயன்படுபவை அல்ல. இவ்வாறு கூறும் போது ஒரு வினா எழுகின்றது. கற்பித்தலுக்குத் துணைபுரிய கூடுதல் பொருட்கள் தேவையா? வகுப்பறையில் கரும்பலகை, சுண்ணாம்புக் கட்டி, பாடநூல் போன்றவை மட்டும் போதுமா அண்மை சமீப காலத்தில் கல்விசார் பொருட்கள் மற்றும் அதன் பயன்பாடு பற்றிய புரிதல் உரிய வகையில் இல்லாத போது வகுப்பறையில்; இப்பொருட்களை எவ்வாறு பயன்படுத்துவது? இதைக் கரும்பலகைக்கு மாற்றாக பயன்படுத்த இயலுமா? இதை ஆய்வு செய்ய கற்றல் செயல்பாடுகளில் குழந்தைகள் எவ்வாறு பங்கேற்கின்றனர் என்று நமக்கு தெரிய வேண்டியது அவசியம். மேலும் நடைமுறையில் உள்ள கற்றல் கற்பித்தல் பற்றிய புரிதலை மனதில் கொள்ள வேண்டும். குழந்தைகள் அனைவருமே தமது புதிய அனுபவங்கள் மற்றும் கருத்துக்களை முந்தைய அறிவோடு தொடர்புபடுத்துகின்றனர் என்பது இந்த புரிதலின் முக்கிய அம்சமாகும். முந்தைய சூழலில் பெற்ற அனுபவம் புதிய அறிவைப் பெற உதவுகின்றது. குழந்தைகளின் புரிதலுக்கு நிலையான உடனடி அனுபவங்கள் உதவுவதோடு இச்சிந்தனையைப் புரிந்து கொள்ள இயலா குழந்தைகளுக்கும்

குறிப்புகள்

அதனை உள்வாங்கி கொள்ள உதவுகிறது. உண்மையில் ஒவ்வொரு குழந்தைகளும் சுயமாகவே இதனைச் செய்கின்றனர். கற்றல் கற்பித்தலில் கற்போரின் பங்கு மிக முக்கியமானது. பள்ளிகளில் கற்போர் அமைதியான பார்வையாளராக, கேட்பவராக மட்டும் இருக்க இயலாது. எனவே குழந்தைகள் நிலையான அனுபவங்களைப் பெற கற்க கல்விசார் பொருட்கள் உதவ வேண்டும்.

குழந்தைகள் புதிய அறிவைப் பெறுவதற்கான செயல்களில் ஈடுபடும்போது அவர்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் எளிதாகக் கையாளவும் ஆய்வு செய்யவும் உதவ வேண்டும். குழந்தைகள் பொருட்களை பயன்படுத்தி செயல்பாடுகளை செய்யும் போது பொருட்கள் உடைந்துவிடும் அல்லது சேதமடைந்துவிடும் என்ற அச்சமின்றி இருக்க வேண்டும். குழந்தைகள் அவர்களின் சுயஅறிவை வளர்த்துக் கொள்ள கற்றல் கற்பித்தல் பொருட்களை வழங்க வேண்டும். குழந்தைகள் அப்பொருட்களை வைத்து விளையாடவும், பகுத்தாய்வு செய்யவும்; மீண்டும், மீண்டும் அக்கற்றல் செயல்பாடுகளை செய்வதற்கான வாய்ப்புக்களைத் தர வேண்டும். (எ.கா) இல்லையெனினும இருப்பது போல் தோன்றும் பொருட்களைப் புரிந்து கொள்வதற்கும், சவாலான சூழ்நிலைகளில் வெவ்வேறு கருத்துக்களை விவாதிப்பதற்கும் கற்றல் கற்பித்தல் பொருட்கள் பயன்படுகி;ன்றது. இவை அனைத்தும் கருத்துகளை புரிந்து கொள்ள வளப்படுத்த உதவுகின்றன.

தகுதியான பொருட்கள் இல்லாதபோதும் குழந்தைகள் கருத்துகளை புரிந்து கொள்ளுதல் அவசியம். புரிதலை வளர்க்கத் துணையாக கற்பித்தல் பொருட்களின் பயன்பாடு அமைவதயன்றி, கற்றல் கற்பித்தல் செயல்முறையில் ஒரு பொருளாக கருத இயலாது. வகுப்பறைக்கான இலக்குகள் தெளிவாக இல்லாதபோது பொருட்களின் பங்கு பயனற்றது. சரியாக சொல்வதென்றால் குழந்தைகளின் வெவ்வேறு வயது, வகுப்பு மற்றும் கற்றல் படிநிலைகளில் வுடுஆன் பொருளானது ஒன்றுபோல் அமையாதது. மட்டுமின்றி ஒரே பாடத்திலுள்ள அனைத்து அம்சங்களிலும் அல்லது ஒரே தலைப்பின் கீழும் இதன் பொருள் வேறுபடுகிறது.

ஆசிரியர்களின் கலைத்திறனையும், படைபாற்றல் திறனையும் வெளிப்படுத்தும் வண்ணம் கல்வி சார் பொருட்களைத் தயாரிப்பது, பார்வையாளர்களுக்குக் காட்சி படுத்துவதற்கே என்பது தெளிவாகிறது. பள்ளிகளில் முதல்வரின் அறையையோ அல்லது TLM அறையையோ அழகு படுத்துவதற்கே TLM தயாரிக்கப்படுகிறது. TLM பற்றி விவாதிக்கையில் குழந்தைகள் அதை எவ்வாறு பயன்படுத்துவர் மற்றும் அதன் துணையோடு எவ்வாறு செயல்படுவர் என்பதைப் பற்றி சிந்திப்பது மிக முக்கியமானது. கற்றல் பொருட்களை பல வகைகளில் சேகரிப்பது உற்றுநோக்குவது, ஆய்வு செய்வது, அவசியமானது. தேவைப்படுமானால் அதனுடைய அமைப்பு மாறுபட்டதாக இருக்க வேண்டும். குழந்தைகள் பொருட்களை பயன்படுத்தி

செயல்பாடுகளில் ஈடுபடவேண்டுமானால் காட்சிபடுத்துவதற்காக மட்டுமே தயாரிக்கப்பட்ட பொருட்களைப்போல் இருக்கக்கூடாது. அதாவது அப்பொருட்கள் விலையுயர்ந்ததாகவோ அல்லது எளிதில் உடைந்துவிடக் கூடியதாகவோ இருக்க கூடாது.

கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் மாணவர்கள் பங்கேற்கவும் மற்றும் புரிதலை வளர்ப்பதற்கான வாய்ப்புக்களை வழங்கவும் வகுப்பறைகள் மாணவர்களைக் கவரக்கூடிய வகையில் அமைய வேண்டும். இக்கவர்ச்சி என்பது வகுப்பறைகளின் புறத்தோற்றத்தை பொறுத்து அமைவதில்லை. அது குழந்தைகளின் பயன்பாட்டை பொறுத்து அமைகின்றது. வகுப்பறைகள் மாணவர்களை வரவேற்கும் விதமாகவும், அவர்களுக்கே உரியது என்ற உணர்வை ஏற்படும் வகையிலும் அமைய வேண்டும்; மாணவர்கள் வகுப்பறையிலிருக்கும் பொருட்களை தொடுவதால், அங்கே விளையாடுவதால் தாம் அப்பொருட்களை அசுத்தப்படுத்துகிறோம் அல்லது சேதப்படுத்துகின்றோம் என்ற உணர்வைப் பெறக்கூடாது. வண்ணச்சுவர்கள், அழகான சுவரொட்டிகள் மற்றும் பொருட்களை அறைகளில் காட்சிபடுத்துவதில் மட்டும் அழகில்லை. தொடக்கப்பள்ளியின் அழகு என்பது உயிரோட்டமான, மகிழ்ச்சியான குழந்தைகளே.

தொடக்கப்பள்ளியின் வகுப்பறையை அழகாகவும் கவரும் விதத்திலும் அமைக்க வேண்டுமானால் குழந்தைகள் தம்மைச் சுதந்திரமானவராகவும், திறன் பெற்றவர்களாகவும் உணரும் விதத்தில் பொருட்களும், செயல்முறைகளும் அமையவேண்டும். பொருட்கள் தமக்குரியவை, அவை, தம் அனுபவங்களையும் கருத்துக்களையும் வளர்க்கக் கூடிய திறன்மிக்கவை என்ற உணர்வையும் அவர்கள் பெறவேண்டும்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 4**

1. தொடக்கப்பள்ளி வகுப்பறையின் அழகு எந்த மதிப்பீட்டுக்கூறில் அமையும்.

   (அ) வண்ணச்சுவர்கள்

   (ஆ) வண்ணவிளக்கப்படங்கள்

   (இ) மகிழ்ச்சியான ஈடுபாடுடைய குழந்தைகள்

   (ஈ) மற்ற கவர்ச்சிகரமான பொருட்கள்

2. சிறந்த கல்விசார் பொருட்களின் பண்புகள் யாவை?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

குறிப்புகள்

3. கற்றல் கற்பித்தல் செயல்முறையில் கற்போரின் பங்கு மிகமுக்கியம், ஏன்?

...........................................................................................................

...........................................................................................................

...........................................................................................................

4. கல்வி சார் பொருட்களின் அறை எவ்வாறு காட்சியளிக்க வேண்டும்?

...........................................................................................................

...........................................................................................................

...........................................................................................................

## 9.8 ஒரு பொருளைக் கொண்டு என்ன செய்யலாம்?

கற்றலுக்கு உதவிபுரிய அதிக எண்ணிக்கையில் கல்வி சார் பொருட்கள் தேவையில்லை. ஓவ்வொரு செயலுக்கும் ஒரு புதுவிதமான பொருள் தேவையற்றது. இலக்குகளில் தெளிவிருந்து, நாம் கவனத்துடன் சிந்தித்தால் ஒரு பொருளை பல விதத்தில் பயன்படுத்தலாம். கல்வி சார் பொருட்களின் பயன் என்பது ஒரு பாடத்திற்கு மட்டுமல்லாமல் பல பாடத்திற்குமானது. உதாரணத்திற்கு கனசதுர கட்டை நம்மிடம் உள்ளது என்றால் அதை வைத்து குழந்தைகளை என்னென்ன செயல்பாடுகளை செய்யவைக்க இயலும்? கன சதுரத்தின் மீது புள்ளிகள் வைப்பதன் மூலம் பகடை விளையாடலாமா? குழந்தைகளை பகடை விளையாடச் செய்து பகடையில் விழும் புள்ளிகளின் எண்ணிக்கைக்கேற்ப கூழாங்கற்களை சேகரிக்கச் செய்து, இரண்டு மூன்று சுற்றுக்குப்பின் மொத்த கூழங்கற்களின் எண்ணிக்கையை சரி பார்க்க செய்யலாம். விளையாட்டை குழுக்களாக விளையாடினால் எந்த குழந்தை அதிக எண்ணிக்கையிலான கூழங்கற்களை சேகரித்துள்ளது என்பதை தெரிந்து கொள்ளலாம். அதேபோல் எந்த குழந்தை குறைவான எண்ணிக்கையில் சேகரித்துள்ளது என்பதையும் அறியலாம். இதுபோல நிறைய விளையாட்டுக்களை நாம் சிந்திக்கலாம். பகடையை உருட்டி வருகின்ற எண்ணிக்கையை மதிப்பெண்களாக பதிவு செய்தும் விளையாடலாம். ஒரு குறிப்பிட்ட எண் எத்தனை முறை வருகிறது, எந்த வரிசையில் வருகிறது என்றும் பதிவு செய்து விளையாடலாம்.

கனசதுரத்தை ஒரு தாளில் திரும்பத்திரும்ப வைத்து அந்த தாளை நிரம்புவதற்கு எத்தனை கனசதுரங்கள் தேவைப்படும் என்றும் பார்க்கலாம். இது தாளின் பரப்பளவைப் பற்றி அறிய உதவும். குழந்தைகள் இந்த

குறிப்புகள்

கனசதுரத்தை வைத்து பல செயல்பாடுகளை செய்ய இயலும். அவர்கள் இதைக்கொண்டு பலவிதமான வடிவங்களை செய்ய முடியும். அப்படி உருவாக்கும் வடிவங்கள் என்ன என்றும் குழந்தைகளை யூகிக்க வைக்கலாம். மேலும் அவ்வடிவங்களை விவரிக்கவும் சொல்லலாம். உங்களிடம் எழுத்தட்டையோ, சொல்லட்டையோ, படஅட்டையோ இருந்தால் அதை வைத்து கற்றலுக்கான சுவாரசியமான செயல்பாடுகளை உருவாக்கலாம்.

## 9.9 மொழி கற்பித்தலில் அட்டைகளின் பயன்பாடு

மொழி கற்பித்தலில் அட்டைகளை பயன்படுத்துவதன் நோக்கம் என்னவென்றால் குழந்தைகள் அதில் எழுதப்பட்டுள்ளதை கண்டறிவதற்கே நாம் அவர்களுக்கு பட அட்டைகளைக் கொடுத்து சொல்லட்டையுடன் சரியாக இணைக்கச் செய்யலாம். மேலும் அவர்களை ஒரு சொல்லட்டையை எடுத்து அதற்கு ஒத்த வேறு சொல்லட்டையை கண்டுபிடிக்க சொல்லலாம். அவர்களை பல சொல்லட்டைகளை இணைத்து கதை கூறச்செய்யலாம். அழிதுபோல் படங்கள் மற்றும் பட அட்டைகளை உரையாடல்கள், விவாதங்கள் கற்பனைத்திறன் விரிவாக்கம் போன்றவற்றைச் செய்யவும் கதை மற்றும் விளக்கங்களை உருவாக்குவதற்கும் பயன்படுத்தலாம். தொடக்கத்தில் இச்செயல்பாடுகளை வாய்மொழியாகவும் பின்னர் எழுதவும் பயிற்சி அளிக்கலாம். செயல்பாடுகளின் மூலமாக இந்த அட்டைகளை அனைத்து வகுப்பிற்கும் வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தலாம். உதாரணமாக சொல்லடையின் பயன்பாட்டை வகுப்பு 1 மற்றும் வகுப்பு 3க்கும் எப்படி வழங்கலாம் என்று சிந்தியுங்கள்.

ஒரு பொருளை பலநோக்கங்களுக்காக பயன்படுத்தலாம். அவற்றின் பயனபாடு; நோக்கங்களை நிறைவு செய்து, கற்றல் கற்பித்தலை புரிந்து கொள்வதில் அடங்கும். நாம் இவற்றை கருத்தில் கொண்டு TLM-யை யார் பயன்படுத்துகிறார்களோ அவர்கள் குழந்தைகள் எதை கற்கவேண்டும் மற்றும் கற்றல் படிநிலைகள்; செயல்பாடுகள் எவை என்று புரிந்திருந்தால் மட்டுமே கற்றல் கற்பித்தல் பொருட்கள் உபயோகமானதாக இருக்கும். அச்செயல்பாடுகள் குழந்தைகளால்; ஈடுபடக்கூடியதாக அமையவேண்டும் என்பதும் தெளிவாகிறது. இது நடக்குமேயானால் நம்மைச்சுற்றி இருக்கும் பொருட்களை தேர்ந்தெடுப்பது கடினமானதல்ல.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 5**

1. மொழி கற்பித்தலில் அட்டைகளைப் பயன்படுத்துவதன் நோக்கம்:

   (அ) படிக்க கற்றுக்கொள்ளும் போதே புரிந்து கொள்ள

   (ஆ) படங்களை பார்க்க

குறிப்புகள்

(இ) படங்களை உருவாக்க

(ஈ) கடிதங்கள் / எழுத்துகளை எழுத

2. வகுப்பறையில் ஒரு பந்தை எத்தனை விதமான வழிகளில் பயன்படுத்தலாம்?

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

3. மொழி கற்பித்தலில் சொல்லட்டைகள் மற்றும் பட அட்டைகளை எவ்வாறு பயன்படுத்துவது?

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

## 9.10 "கற்றல் என்ன" என்ற சூழலில் மொழிப்பாடம் கற்பித்தலுக்கு உதவும் கருவிகள்

மொழிப்பாட கற்றல் மற்றும் கற்பித்தலின் உள்ள வேறுபாடுகள்இ கல்விசார் பொருட்களின் தன்மை மற்றும் அதன் பயன்பாடு மிக குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கொண்டுள்ளது. கற்போருக்கு குறிப்பிட்ட செய்யுள்கள் மற்றும் உரைநடைகளை விளக்குவது மட்டுமே குறிக்கோளாகயிருந்தால் கற்பித்தல் செயல்முறை மற்றும் அதற்கு பயன்படும் கல்வி சார்பொருட்கள் ஒரு வகையானதாக இருக்கும். மாறாக கற்போரை ஒரு சுதந்திரமான சிந்தனையாளராக, எண்ணங்களை வெளிப்படுத்தக் கூடிய நபராக, அறிஞராக அல்லது இலக்கியம் மற்றும் வேறு பாடங்களில் ஆர்வம் உள்ளவராக மாற்ற வேண்டுமென்றால் எதிர்ப்பார்ப்புகள் மிக வித்தியாசமானதாக இருக்கும். கற்போரின் கருத்துகளை, எண்ணங்களை தெளிவாக வெளிபடுத்தவும் விளக்கவும் நாம் விரும்பினால் அதற்கு பயன்படும் பொருட்கள் வேறுவகையாக இருக்கும்.

புத்தகங்களில் உள்ள பாடல்களை குழந்தைகள் சரியான உச்சரிப்புடனும் ஏற்ற இறக்கங்களுடனும் மட்டுமே கூறவேண்டுமா அல்லது அவர்கள் வேறுபுதிய பாடல்களையும் இணைத்துக் கூறவேண்டுமா என்பது பற்றி நாம் தெளிவாக இருக்க வேண்டும். குழந்தைகள் கேள்விகளுக்கான விடைகளை அல்லது கட்டுரைகளை மனப்பாடம் செய்து எழுத வேண்டுமா? அல்லது அவர்களின் அனுபவங்கள் மற்றும் கருத்துகளை பகிர்ந்து கொள்ள

வேண்டுமா? என்பதில்லை அவர்கள் புதிய சூழலில் தன்னம்பிக்கையுடன் மொழியை பயன்படுத்துவதையே நாம் எதிர்பார்க்கின்றோம். நமது நோக்கம் இரண்டாவதாக சொன்னது போல் இருந்தால், அதாவது ஒரு குழந்தையை மொழியில் சுதந்திரமாக திறன்மிக்க பயன்பாட்டாளராக உருவாக்க, நமது வகுப்பறைகள் குழந்தைகளுக்கு தொடர்ச்சியான வாய்ப்புகள் வழங்கி அவர்களுடைய கருத்துக்கள் மற்றும் கற்பனைகளை வெளிப்படுத்துமாறு அமையவேண்டும்.

இதற்கு நமக்கு கவரும் விதத்தில் கற்பனையை தூண்டக் கூடிய புதியபடங்கள் தேவை. குழந்தைகள் மற்றவர்களுடன் இணைந்து கதைகளை உருவாக்குவதற்கான வாய்புகளும் மற்றும் சுதந்திரமாக கருத்துக்களை உருவாக்குவதற்கான செயல்முறைகளும் தேவைபடுகின்றன. மேலும் வேறுசில கற்றல் பொருட்களும் ஊக்கிகளாக செயல்பட வேண்டும். கல்வி பொருட்கள் குழந்தைகளுக்கு சிந்திப்பதற்கு, விவாதிப்பதற்கு அவர்களுடைய கருத்துக்களை ஒருங்கமைப்பு செய்வதற்கு மற்றும் திறந்தமனதுடன் புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்வதற்கும் உதவவேண்டும். சத்தமாக சொல்லுதல் வாசித்தல் போன்ற கற்பித்தல் செயல்முறைகள் குழந்தைகளின் அறிவை சுருக்கி அவர்களுடைய வளர்ச்சிக்கு தடையாக அமைகிறது. அது குழந்தையின் வளர்ச்சியையும், கருத்துக்களை கிரத்துக்கொள்ளும் தன்மையையும் குறைக்கின்றது. சுலபமாக மொழியை பயன்படுத்துவதற்குஇ கற்போரை எளிதாக சிந்திக்கவும் அவர்களின் கற்பனைத்திறனை பெருக்குவதற்கான வாய்ப்புக்களை கற்பித்தல் செயல்முறைகள் மற்றும் கல்வி சார் பொருட்கள் வழங்க வேண்டும். இதற்கான உதாரணங்கள் மேலே தரப்பட்டுள்ளன. இருப்பினும் மேலும் சிலவற்றை பார்ப்போம். வெவ்வேறு நிகழ்வுகளை வெளிப்படுத்தும் படங்கள், வரிசையான படத்தொகுப்புகள் போன்றவற்றை பயன்படுத்தி கதைகளை உருவாக்குவதற்குகான வாய்ப்புகளை வழங்க வேண்டும். இது போன்ற படங்களை குழந்தைகள் புரிந்துகொள்வது மட்டுமல்லாமல் படங்களை தாண்டிய சிந்தனையை தூண்டுவதற்காகவும் அவர்களின் மொழியில் வெளிப்படுத்துவதற்காகவும் உள்ளது.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 6**

1. புதிய சூழலில் குழந்தைகள் நம்பிக்கையுடன் மொழியை பயன்படுத்துவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

   (அ) குழந்தைகளின் கற்பனைத்திறனையும், கருத்துக்களையும் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு வாய்ப்புகள் வழங்க வேண்டும்.

   (ஆ). கேள்விகளுக்கான பதில்களை மனப்பாடம் செய்து வரச்சொல்லுதல்.

குறிப்புகள்

(இ) குழந்தைகளை படத்தில் தரப்பட்டுள்ள செய்யுளை ஒப்புவிக்க செய்தல்.

(ஈ) குறிப்பிட்ட வகையிலான உரைநடை மற்றும் செய்யுள்களை மாணவர்களுக்கு விளக்குதல்.

2. வகுப்பறையில் மொழிப்பாடம் கற்பித்தலுக்கு எளிதாக எடுத்துவரக்கூடிய கல்விசார் பொருட்கள் யாவை? இப்பொருட்களை பயன்படுத்தி குழந்தைகளால் எவற்றையெல்லாம் செய்ய இயலும்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

3. குழந்தைகளிடத்தில் மொழியை வளர்ப்பதில் கதை சொல்லுதல் மற்றும் கதை / உருவாக்குதல் முதலியவற்றின் பங்கு யாவை?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## 9.11 மொழி வகுப்பில் பயன்படுத்தக்கூடிய பொருட்கள்

மொழி வகுப்பில் பொருட்களை பயன்படுத்துவதன் நோக்கம் குழந்தைகளுக்கு வெவ்வேறு மொழி உரைகளை அறிமுகப்படுத்துவது மட்டுமல்ல. அதன் நோக்கம் என்னவென்றால் அவர்களின் மொழித் திறன்களை வளர்ப்பதாகும். இதன் பொருள் என்னவென்றால் அக்குழந்தையின் மொழித்திறனையும் கற்பனைத்திறனையும் வளர்ப்பதற்கான வளங்களை நாம் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதுதான் இது வாய்மொழியாகவோ அல்லது எழுத்து வடிவமாகவோ இருக்கலாம். இதைத் தவிர ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகளை அவற்றை பற்றிய கருத்துக்களை எழுதும் வகையில் அப்பொருட்கள் அமைதல் வேண்டும். மொழி கற்பித்தலில் எழுதுதல் என்பது முதன்மையான பகுதியாகும். சிறு குழந்தைகள் புதிய வார்த்தைகளை பயன்படுத்தி உரையாடலில் ஈடுபட செய்வதற்கு வகுப்பறையில் பொருட்கள் தேவைப்படுகிறது. வெவ்வேறு வகையான மொழி பயன்பாடுகளை கேட்டு குழந்தைகள் அவற்றின் ஏற்ற இரக்கங்கள், நிறுத்தற்குறிகள் போன்றவற்றை புரிந்து கொள்ளுதல் மிக அவசியம். இது அவர்களின் மொழிதிறனில் ஒரு பகுதியாகும். மொழி வகுப்பறைக்கு தேவையான பொருட்களை வரிசைப்படுத்தினோமானால் அதை இரண்டு

குறிப்புகள்

வகையாக பிரிக்கலாம். ஒன்று எழுத்து வடிவிலான பொருட்கள் மற்றொன்று வாய்மொழியானது. பாடநூல்கள் மற்றும் பயிற்சி ஏடுகள் எழுத்து வடிவிலான பொருட்களில் குறிபிடத்தக்கவை. இதைத் தவிர விளக்கப்படங்கள் சுவரொட்டிகள், செய்யுள்கள், பாடல்கள் மற்றும் வார்த்தைகளும் இதில் அடங்குகின்றன. மேலும் எழுத்து அட்டைகள், சொல் அட்டைகள், பட அட்டைகள் மற்றும் வேறு வகையான அட்டைகள், நூலகம் (பத்திரிக்கைகள், புத்தகங்கள் நாளேடுகள்) போன்றவையும் உபயோகமான பொருட்களாகும். வாய்மொழி கருவிகளான வானொலி, ஒளி நாடா கருவி, குறந்தகடு ஒலிப்பான், படச்சுருள் வீழ்த்தி போன்றவைகள் குழந்தைகளை சென்றடையக் கூடியவை. இவை பாடல்கள், நாடகங்கள் போன்றவற்றை கவனிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதோடு அவற்றின் ராகம், தாளம், சுருதி நயத்திற்குகேற்ப உடலசைவுகளைப் பயன்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கின்றன. இப்பொருட்கள் கருத்துகளைக் புரிந்துகொள்ளும் திறனை பெற உதவுவதோடு சிறந்த உச்சரிப்பையும், பாராட்டும் மனப்பான்மையையும் உருவாக்குகிறன. வாய்மொழி கருவிகள் (ஒலிநாடா, குறுந்தகடு) தரமானதாக இருக்க வேண்டும். சிறந்த இயந்திர கருவிகள் மட்டுமே கற்றலுக்கு உதவாது, தரமான மென்பொருட்களும் இருக்க வேண்டும்.

கணினி மற்றும் இணையம் போன்றவை குழந்தைகளின் பயன்பாட்டிற்கு கிடைக்கும்பட்சத்தில் அவை பலவகைகளில் உதவுகின்றன. அவை குழந்தைகளின் எண்ணங்களை சுயமாக வெளிப்படுத்துவதற்கு உதவுவதோடு வெவ்வேறு வகையான படங்கள் மற்றும் காட்சிக்களில் அவர்களை ஈடுபடச்செய்கின்றன. மற்றும் வகுப்பறையில் படங்களைத் திரையிடவும் பயன்படுகிறது. காட்சிகேள்வி கருவிகள் மொழிவளர்த்தலில் மிகமுக்கியப் பங்கு வகிக்கிறன. ஆசிரியரால் திறம்பட கவிதைகளை வாசிக்கவோ, பாடல்களைப் பாடவோ முடியாதபோது, காட்சிக்கேள்வி கருவிகளைப் பயன்படுத்தி திறம்பட பாடிய பாடல்கள், கவிதைகள், கதைகள் போன்றவற்றை குழந்தைகள் கவனிக்குமாறு செய்யலாம். இவற்றையெல்லாம் இணையம் மற்றும் கணினி வழியே செய்யலாம். ஆசிரியர்கள் சிறந்த, பொருத்தமான நிகழ்ச்சிகளை தேர்வு செய்து சரியான தருணத்தில் அவற்றைப் பயன்படுத்தும்ழிலீது இவை சாத்தியமாகின்றன.

கருத்துக்களை வளர்பதில் மொழி பாடவகுப்புகள் முக்கிய பங்காற்றுகிறன. இதற்குமுன் நாம் கூறியதைப் போல கல்வி சார்பொருட்களை வகைப்படுத்துவது, பண்புகளை அறியச் செய்வது, ஆய்வுகள்/செயல்பாடுகள் செய்வதற்கான வழிமுறைகளைக் கொடுப்பது, மற்றும் உற்றுநோக்கலின் மூலம் தர்க்கவாதங்களை உருவாக்குவது, இவையனைத்தும் மொழிக்கற்பித்தலின் ஒரு பகுதியே. இவற்றிக்கேற்ற கல்விசார் பொருட்களைப் பற்றி அதற்குரிய பகுதியில் பின்னர் விவாதிப்போம். கணிதம், அறிவியல், சமூக அறிவியல் புத்தகங்களும் கூட மொழியை வளர்ப்பதற்கான பொருட்களே என்பதை

குறிப்புகள்

புரிந்துகொள்வது அவசியம். குழந்தைகளுக்கு வழங்கப்படும் செயல் திட்டத்திற்கான செயல்பாடுகள், வழி முறைகள் போன்றவையும் கூட மொழி கற்றலில் பொருத்தமான பொருட்களாக உதவிபுரிகின்றன.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 7**

1. இவற்றுள் எவை வாய்மொழி கருவி அல்ல?

   (அ) வானொலி (ஆ) பாடப்புத்தகம்

   (இ) குறுந்தகடு (ஈ) படவீழ்த்தி

2. மொழிபாட கற்பித்தலில் நீங்கள் பயன்படுத்த விரும்பும் வாய்மொழி கருவி எது? ஏன்?

   ........................................................................................................

   ........................................................................................................

   ........................................................................................................

3. மொழி பாடக்கற்பித்தலுக்கு நீங்கள் நூலகத்தை பயன் படுத்துவீர்களா?

   ........................................................................................................

   ........................................................................................................

   ........................................................................................................

4. மொழிப்பாட கற்பித்தலுக்கு ஏற்ற சிறந்த பொருட்களைப் பற்றி எண்ணும்போது எவையெல்லாம் உங்கள் மனதில் இடம் பெறவேண்டும்? தோன்றவேண்டும்?

   ........................................................................................................

   ........................................................................................................

   ........................................................................................................

## 9.12 எளிதில் கிடைக்ககூடிய கல்விசார் பொருட்கள்

இயற்கையாகவே நம்மை சுற்றி பொருட்கள் கிடைக்கிறது. சில அரிதான கல்வி சார்பொருட்களை விலைகொடுத்து வாங்க வேண்டும். வகுப்பறைக்காக தேர்வு செய்யும் பொருட்கள் அருகில் உள்ள கடைகளில் எளிதாக கிடைக்கக்கூடியதாகவும், விலை குறைவானதாகவும் இருக்க

குறிப்புகள்

வேண்டும். சில வகையான பொருட்களைப் அதிக எண்ணிக்கையில் வாங்கி பள்ளிகளுக்கு பிரித்தளிப்பதாக அமைய வேண்டும். அப்பொருட்களை ஆசிரியர்கள் வாங்குவதாக இருந்தால் அதற்கான செலவீனங்கள் அவர்களுக்கு கிடைக்கும் வகையில் செய்ய வேண்டும். இதற்காக முறையான அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

கடந்த இரண்டு சதாப்தங்களாக பள்ளிகளில் எளிதில் பொருட்கள் கிடைக்கச்செய்வதற்காக முறையான அமைப்பை ஏற்படுத்த பெருமுயற்சி நடக்கிறது. பெரும்முயற்சிக்கு பிறகு இப்பொழுதுதான் பள்ளிகளில் அதற்கான அமைப்பும் மற்றும் ஆசிரியர்களுக்கு பொருட்களை வாங்குவதற்கான செலவீனமும் வழங்கப்படுகிறது. ஆசிரியர்கள் அவர்களின் விருப்பத்திற் கேற்பவும், பயன்பாட்டிற்கேற்பவும் இப்பொருட்களை வாங்கலாம் என்பது நடைமுறை விதி. கல்வி சார்பொருட்களை அதிக அளவில் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக கணக்கியல் விதிகள் எளிதாக்கப்படுள்ளது. பல இடங்களில் பள்ளிகளும் ஆசிரியர்களும் இதற்கு வழங்கப்படும் நிதியை திறம்பட பயன்படுத்துவதை உறுதிபடுத்த அழுத்தம் கொடுக்கப்படுகிறது. இருந்தபோதும் ஆசிரியர்கள் இந்த பொருட்களை பெற்றிருந்தாலும்கூட சரியான முறையில் வகுப்பறையில் பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு உத்திரவாதம் தரமுடியாது. சரியான முறையில் இப்பொருட்களை பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

பொதுவாக பள்ளிகள் மற்றும் ஆசிரியர்கள் அழகான பொருட்களை காட்சிபடுததுவதற்காகவே கடைகளிலிருந்து வாங்குகின்றனர். மேலும் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்கள் வாங்கப்பட்ட பொருட்களை காட்சிப் படுத்துவதற்கு தயக்கம் காட்டுகிறார்கள் என்ற எண்ணம் உள்ளது. உபயோகமான பொருட்களை பெறுவதற்கு, ஆசிரியர்களுக்கு உரியவழி தெரிவதில்லை. பள்ளிகளுக்கு அருகில் உள்ள கடைகளில் மொழித்திறனை மேம்படுத்தும வகையான சிறந்த குறுந்தகடுகள், விளக்கப்படங்கள் கிடைப்பதில்லை.

தற்பொழுது ஒவ்வொரு மாநில கல்வித்துறையும் மாவட்டங்களிலுள்ளசில பள்ளிகளை தேர்வுசெய்து கவரக்கூடியவகையான பொருட்களை காட்சிப்படுத்த அறைகளை உருவாக்கி குழந்தைகள் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுகிறது. நாம் இந்த அறைகளின் நோக்கத்தையும் பயன்பாட்டை பற்றியும் சிந்திக்க வேண்டும். மேலும் தற்போதைய சூழலில் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள அவ்வாறான அறைகளின் தாக்கத்தையும கருத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறு உருவாக்கப்படும் ஒவ்வொரு அறைக்கான செலவினத்தை கணக்கிட்டு மொத்த எண்ணிக்கையிலான பள்ளிகளுக்கு, செலவாகும் செலவீனத்தை கணக்கிடுதல் வேண்டும். ஒரு குழந்தைக்கு ஆகும் செலவு மற்றும் பொருட்களின் பயன்பாட்டதற்கான விகிதத்தையும் மதிப்பிடுவது அவசியம். இவ்வாறு காட்சிப்படுத்தப்படும்

குறிப்புகள்

அறைகளை குழந்தைகள் காணவும், பயன்படுத்தவும் முடியுமா என்பது பற்றி சிந்திப்பது அவசியம். குழந்தைகள் அதனை பார்ப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் முடியாத சூழலில் இதை பரந்த அளவில் செயல்படுத்தமுடியாது. மேலும் ஒரு குழந்தைக்கான செலவு அதிகமாக இருப்பின் அவ்வகையான பொருட்களினால் எப்பயனும் இல்லை.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 8**

1. பின்வருவனவற்றுள் எவை கல்விசார் பொருட்களை தேர்ந் தெடுப்பதற்கான சரியான கொள்கை அல்ல.

   (அ) விலையுயர்ந்த பொருட்களாக இருக்க வேண்டும்.

   (ஆ) அருகில் உள்ள சந்தைகளில் கிடைக்ககூடியதாக இருக்க வேண்டும்.

   (இ) பொருட்களின் விலை உயர்வாக இருக்க கூடாது.

   (ஈ) பொருட்களை வாங்கி பள்ளிகளுக்க வழங்கலாம்.

2. பொருட்களை எளிதில் அனுகமுடியாத பிரச்சனையை எவ்வாறு தீர்ப்பாய்?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

3. வகுப்பறையில் மொழி கற்பித்தலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களை சரியான முறையில் பயன்படுத்துவதற்கு உங்களின் தயாரிப்ப என்ன?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

4. வகுப்பறைக்கு பொருட்களை தேர்ந்தெடுக்கும் போது நினைவில் கொள்ள வேண்டியவை எவை?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

## 9.13 பொருட்களை எவ்வாறு பயன்படுத்துவது?

குறிப்புகள்

கல்விசார் பொருட்கள் பற்றியும் கற்பித்தலில் அதன் பயன்பாடு பற்றியும் இந்த அலகில் நாம் கற்று கொண்ட சில முக்கிய கோட்பாடுகளை மறுசீரமைத்தால் உபயோகமானதாக இருக்கும். இக்கோட்பாடுகள் ஆசிரியருக்கு வகுப்பறையில் பொருட்களை பொருத்தமான முறையில் பயன்படுத்த உதவும்.

1. பொருட்கள் எளிதில் அடைய கூடிய வகையில் இருக்க வேண்டும். ஆசிரியர் மட்டுமே உபயோகித்தாலும் கூட தயாரிப்புகளை முன்கூட்டியே செய்ய வேண்டும். ஆசிரியர் பொருத்தமான பொருட்களை தேடிக்கொண்டியிருக்கும் பட்சத்தில் காத்திருப்பது குழந்தைகளுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும். மேலும் கற்றலில் ஆர்வமும் தொடர்ச்சியும் இல்லாமல் போகும்.

2. பொருட்கள் கற்றலுக்காக பயன்படுத்த வேண்டுமே அன்றி காட்சிபடுத்துவதற்கல்ல என்பதை நினைவில்கொள்ள வேண்டும். பொருட்களால் சுயமாக கற்பிக்க இயலாது. ஆசிரியர்களுக்கு எந்த பொருட்களை எந்த சூழலில் பயன்படுத்துவது என்பது தெரியவேண்டும். TLM என்பது பாடங்களை பொருளுணர்ந்து கற்றுக்கொள்ள உதவும் ஒரு கருவி மட்டுமே. மாணவர்களின் ஆர்வம் மற்றும் திறன்களை கருத்தில் கொண்டு கற்பித்தல் பொருட்களை தேர்வு செய்வது ஆசிரியரின் கடமையாகும்.

3. ஆதிக பொருட்களை பயன்படுத்த வேண்டுமெனில் அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக பயன்படுத்துவதே சிறந்தது. பல்வேறு விதமான பொருட்களிடையே உள்ள ஒற்றுமையை அல்லது எதிர்வினையை கூற முற்படும் சமயங்களில் மட்டுமே நாம் அவற்றை ஒன்றாக பயன்படுத்தலாம்.

4. பொருட்களை ஒழுங்காக சேமித்து வைப்பது அவசியம் ஆனால் அதே சமயத்தில் குழந்தைகளுக்கு அவற்றை விரைவாக சேர்ப்பதையும் உறுதிபடுத்துதல் வேண்டும். குழந்தைகள் பொருட்களை பெற்று திரும்ப ஒப்படைக்க வேண்டுமெனில் கொடுத்தல் மற்றும் சேகரிப்பு முறைகளில் அவர்களையே ஈடுபட வைக்கலாம். அவர்கள் பொறுப்புகள் மற்றும் உதவி புரிதலைப் பற்றி உணரவேண்டும். கொடுத்தல்; மற்றும் சேகரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த கால அளவு அதிகமல்ல என்பதை அத்தகைய பங்கேற்பு உறுதி செய்யும்.

குறிப்புகள்

5. பொருட்களை பயன்படுத்தும் போது உடைந்து போகக் கூடிய வாய்ப்புகள் உள்ளது. அவ்வாறு நடக்கும பட்சத்தில் சேதத்தை ஏற்றுக்கொண்டு

6. எழுதிதருதல், அவற்றிறக்கு பதிலாக மாற்றிதருதல் போன்றவை மிகமுக்கியம். குழந்தைகள் புத்தகங்களை படிக்கும்போது, விளக்கட்டைகளை பயன்படுத்தும்போது, வண்ணங்கள் மற்றும் சுண்ணாம்பு கட்டிகளை பயன்படுத்தும்போது கிழிந்தும் உடைந்தும் போகலாம். அத்தகைய செயல்முறைகளுக்கு அனுமதிக்காத எந்தவொரு அமைப்பும் பொருட்களை பயன்படத்துவதை ஊக்குவிக்க முடியாது.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 9**

1. பொருட்களை குழந்தைகள் பயன்படுத்தும்போது இவைகளில் எது சாத்தியமில்லை?

   (அ) பொருட்கள் உடைந்து போகலாம்

   (ஆ) பொருட்களின் நுகர்வு இருக்கலாம்

   (இ) பொருட்கள் தேய்மானம அடையலாம்.

   (ஈ) அது அப்படியே இருக்கலாம்.

2. கல்வி சார் பொருட்களை பயன்படுத்துவதில் எந்த கொள்கையை கணக்கில் எடுத்துக்கொள்ளலாம்?

   ..................................................................................................

   ..................................................................................................

   ..................................................................................................

3. வகுப்பிலுள்ள பொருட்களை ஒழுங்காக சேமிக்க வேண்டும், ஏன்?

   ..................................................................................................

   ..................................................................................................

   ..................................................................................................

## 9.14 பொருட்களை தேர்வு செய்யும் அடிப்படை

ஒவ்வொரு ஆசிரியரும் என்ன பொருட்களை கொள்முதல் செய்யலாம், எவற்றை வாங்கலாம், எவற்றை அவர் வலியுறுத்தலாம் என்பதைப் பற்றி


குறிப்புகள்

சிந்திக்க வேண்டும். மேலும் பொருட்களை தேர்ந்தெடுக்கும் அடிப்படைகள்; நாம் சிந்திக்க வேண்டிய கொள்கைகள் பின்வருமாறு.

1. முதல் கோட்பாடு, கல்வி நோக்கங்களை நிறைவேற்றுவதாக இருக்க வேண்டும். அதாவது நாம் செய்ய வேண்டிய வேலைகளை குழந்தைகளுக்கு தரகூடிய வாய்ப்புகளை அவை சாத்தியமாக்க வேண்டும். உதாரணத்திற்கு நாம் குழந்தைகளின் கற்பனைத்திறனை வளர்க்க மற்றும் அவர்களின் கருத்துகளை ஒருங்கமைப்பு செய்து வெளிப்படுத்த விரும்பினால், நாம் அத்தகைய வாய்ப்பை அளிக்கக்கூடிய வகையில் படத்தை தேர்வு செய்ய வேண்டும்.

2. இரண்டாவது கோட்பாடு பொருட்கள் பல்வேறு நோக்கங்களுக்காக பயன்படக்கூடியவையாக இருக்க வேண்டும். அவ்வாறான பொருட்களை கொள்முதல் செய்து ஆசிரியர்களை தயார் செய்ய வேண்டும். இதனால் அவர்கள் பொருட்களை எளிதான முறையில் பயன்படுத்தலாம்.

3. மூன்றாவதாக பொருட்கள் எளிதில் கிடைக்கக் கூடியதாகவும் கடின முயற்சி மேற்கொள்ள அவசியமில்லாததாகவும் இருக்க வேண்டும். அவை போதுமான அளவு கிடைக்கக் கூடியதாகவும் அதிக விலையற்றதாகவும் இருக்க வேண்டும் என்பது அவசியம். குழந்தைகள் அவற்றை பயன்படுத்த முடியும். தெர்மோகோலினால் ஆன மாதிரிகளை தொடுவதானல் சேதமடைந்தாலோ அல்லது உடைந்து போனாலோ அவை தரமான பொருட்களல்ல. பெரும்பாலான பொருட்கள் குழந்தைகளின் பயன்பாட்டிற்கே உள்ளது.

4. நான்காவதாக தெளிவான முன்னெச்சரிக்கையுடன் உபயோகப் படுத்தப்படும் பொருட்களை தேர்வுசெய்யக்கூடாது. அவைகள் அபாயமிக்கதாக இருக்க கூடாது.

5. ஐந்தாவது கோட்பாடு: பொருட்களை தேர்வு செய்வதிலும், உருவாக்குவதிலும் ஆசிரியர் மற்றும் மாணவரின் பங்கு அவசியமானது. பொருட்களை முன்பாகவே தேர்வுசெய்து பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களுக்கு அனுப்புதல் கூடாது. ஆசிரியர்களும் குழந்தைகளும் பொருட்களை தேர்வுசெய்வதில் இடம் பெற வேண்டும்.

6. அவர்கள் வகுப்பறையில் பொருட்களை பயன்படுத்தும் வழிமுறைகள் பற்றி சிந்திக்கவும் கற்றுக்கொள்ளவும் வாய்ப்புகள் வழங்க வேண்டும். பொதுவாக நம்முடைய கல்விமுறையில் குழந்தைகளுக்கான பொருட்களை தேர்வுசெய்வதிலும் உருவாக்குவதிலும் ஆசிரியரின்

குறிப்புகள்

பங்களிப்பு மிக அவசியமானது என்பதை நாம் அறிவோம். பொருட்களை கொள்முதல் செய்வதிலும் அதுசார்ந்த அம்சங்களை நடைமுறைபடுத்துவதிலும் ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகள் பங்கேற்பதில்லை. அனுபவமிக்க ஆசிரியர்கள் குழந்தைகளுடன் பொருட்களை பயன்படுத்தும் போது வளமிக்க உள்ளீடுகளை சேர்த்து புதுமையான பொருட்களை உருவாக்குகிறார்கள். மையப்படுத்தப் பட்ட அமைப்பின் மூலம் பொருட்களை பள்ளிகளுக்கு வழங்குவதில் நல்ல அனுபவங்கள் இல்லை என்ற உண்மை இருப்பினும் அவற்றில் மாற்றமி;ல்லை. பொருட்களை தேர்வுசெய்து கொள்முதல் செய்வதில் ஆசிரியர்களை அனுமதிப்பது பொறுத்தமற்றதாக நம்பப்படுகிறது.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 10**

1. பொருட்களை தேர்ந்தெடுப்பதற்கு எத்தனை கொள்கைகள் மேலே விவாதிக்கப்பட்டது? இவற்றுள் எதை முக்கியம் என கருதுகிறீர்கள் ஏன்?

   (அ) 2 (ஆ) 4 (இ) 5 (ஈ) 8

2. பொருட்களை தேர்ந்தெடுத்தல் அவற்றை உருவாக்குதல் மற்றும் பயன்படுத்துவதில் ஆசிரியரின் பங்களிக்க வேண்டும் ஏன்?

   ................................................................................................................

   ................................................................................................................

   ................................................................................................................

3. பொருட்களை தேர்வு செய்வதில் இரண்டு முக்கிய கொள்கைகளை குறிப்பிடுக.

   ................................................................................................................

   ................................................................................................................

   ................................................................................................................

## 9.15 தொகுப்பரை

பள்ளிகளில் குழந்தைகள் கற்றுக்கொள்வதற்க்காக சில பொருட்கள் இருப்பது அவசியம். இவற்றுள் பாய்கள், மேசைகள், நாற்காலிகள், கழிப்பறைகள் மற்றும் தூய்மையான குடிநீர் அடங்கும். இவற்றை அவசியமான அடிப்படை பொருட்கள் எனக்கூறுகின்றோம். வேறுவகையான பொருட்களும் நமக்கு தேவைப்டுகிறது அவற்றை கல்வி சார் பொருட்க்ள

குறிப்புகள்

என கூறுகின்றோம். இவற்றுள் விளக்கப்படங்கள் மாதிரிகள், மொழிஅட்டைகள் அடங்கும். கற்றல் கற்பித்தலில் ஆசிரியருக்கு கல்விசார் பொருட்கள் உதவிகின்றது. இதனால் இவற்றை கற்றல் கற்பித்தல் பொருட்கள் அல்லது TLM எனக்கூறுகின்றோம். புதிய கண்ணோட்டத்தில் கல்விசார் பொருட்களின் பயன்பாடு குழந்தைகளை சென்றடைய வேண்டும். இதற்கான பொருள் என்னவென்றால் குழந்தைகள் அப்பொருட்களை தொட்டு ஆய்வு செய்து செயல்பாடுகளை செய்தவற்கு அனுமதித்தல் வேண்டும். அவர்களுக்கு பொருட்கள் உடைந்துவிடும் அல்லது சேதமடைந்துவிடும் என்ற அச்சம் இருத்தல் கூடாது. சிறந்த கல்வி சார் பொருட்கள் குழந்தைகளுக்கு கற்றலில் உறுதியான அனுபவங்களை தந்து உதவுகின்றது. ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் ஒருபொருள் என்பது அவசியமில்லை. நாம் நன்றாக சிந்தித்தோமானால் ஒரு பொருளை பல நோக்கங்களுக்காக பயன்படுத்தலாம் மொழி வகுப்பில் பொருட்களை பயன்படுத்துவதன் நோக்கம் வெவ்வேறு விதமான மொழி உரைகளை குழந்தைகளுக்கு வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் மொழி பயன்பாட்டில் அவர்களின் திறனையும் மேம்படுத்துவதாகும். இது தவிர ஆசிரியர்கள் மட்டுமல்லாமல் குழந்தைகளும் பொருட்களை தேர்வுசெய்வதில், பயன்படுத்துவதில் வெவ்வேறுவகையில் அதன் பயன்பாட்டை பற்றி சிந்திப்பதிலும் பங்கேற்க செய்யலாம்.

## 9.16 பரிந்துரைக்கப்பட்ட மேற்கோள் நூல்கள்


- Dewan, H.K. 2008. TLM vs. Teaching Aids. *Buniyadi Shiksha* 18: 7-11. (Published by Vidya Bhawan Society and Azim Premji University)
- http://jtmadhavan.wordpress.com/2010/07/08/teaching-learning-materialsenglish/


## 9.17 அலகு இறுதி பயிற்சிகள்

1. அவசியமான அடிப்படை பொருட்களுக்கும், கல்விசார் பொருட் களுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன? எடுத்துக்காட்டுடன் விவரி?
2. கல்விசார் பொருட்களைப் பற்றிய புதிய கண்ணோட்டம் என்ன?
3. சிறந்த கல்விசார் பொருட்களின் அடிப்படை பண்புகள் யாவை? எடுத்துக்காட்டுகள் தருக.
4. பொருட்களை தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படை யாது?
5. பொருட்களின் பயன்பாடு பற்றியகோட்பாடுகள் யாவை?
6. கல்வி செயல்பாட்டில் பொருட்களை சேதம் ஏற்பட அனுமதிக்கலாம் என்ற கூற்றின் பொருள் என்ன?

குறிப்புகள்

# அலகு 10

# மதிப்பீடு

## அமைப்பு

10.0 அறிமுகம்

10.1 கற்றல் நோக்கம்

10.2 தற்போதைய மதிப்பீட்டு விதிகள்

10.3 மதிப்பீடு செய்வது ஏன்?

10.4 மொழி மதிப்பீட்டுள்ள கருத்துக்கள்

10.4.1 கவனித்தலும் பேசுதலும்

10.4.2 எழுதுதல்

10.4.3 வெளிப்பாடு

10:5 மொழி மதிப்பீட்டிலுள்ள வழிகள்

10.5.1 வாய்மொழித்தேர்பு

10.5.2 உற்றுநோக்கல்

10.5.3 எழுத்துத் தேர்வு

10:6 உரைநடை, செய்யுள், நாடகம் போன்றவற்றின் மதிப்பீட்டு செயல்பாடுகள்

10:6:1 செய்யுள்

10:6:2 உரைநடை

10:6:3 நாடகம்

10:7 தொகுப்புரை

10:8 பரிந்துரைக்கப்பட்ட புத்தகங்களும் மேற்கோள் நூல்களும்.

10:9 அலகுமுடிவு பயிற்சிகள்

## 10.0 அறிமுகம்

மொழிவகுப்பில் மதிப்பீட்டை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யலாம். மதிப்பீடு என்றால் என்ன? அவற்றின்

உள்ளடக்கம் என்ன? எந்தெந்தச் சூழலில் மொழிப்பாடத்தைக் கற்க எவ்விதக் கருத்துக்களை நாம வலியுறுத்த வேண்டும். தற்போதய மதிப்பீட்டுச் செயல்முறையில் நாம் பார்க்க வேண்டிய கற்றல் நோக்கங்கள் இடம் பெற்றுள்ளனவா என்பதைப் பார்க்கலாம். மதிப்பீட்டில் சில மாற்றுவழிகள் உள்ளனவா என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். மதிப்பீட்டுச் செயல்முறையில் ஒரு குழந்தையின் சுய முன்னேற்றத்திற்கும சுய நம்பிக்கை;கும் திறன்களை வளர்ப்பதற்கும் ஆர்வமூட்டுக்கூடியதாக இருக்க வேண்டும்.



குறிப்புகள்

## 10:1 கற்றல் நோக்கங்கள்

இந்த அலகினைப் படித்த பின்னால்

- தற்போதைய மதிப்பீட்டுச் செயல் முறையின் வெளிப்பாடுகளைப் புரிந்து கொள்ள முடியும்.
- எதற்காக மதிப்பீடு தேவை என்பதனைப் புரிந்து கொள்ளலாம்.
- வெவ்வேறு வழியில் நாம் எவ்வாறு இம்மொழி மதிப்பீட்டினை மேற்கொள்ளலாம் என்பதனை ஆராய முடியும்.

## 10:2 தற்போதைய மதிப்பீட்டுச் செயல்முறைகள்

நாம் தற்போதைய மதிப்பீட்டுச் செயல்முறைகள் நம் மதிப்பீட்டு நோக்கங்களைப்பூர்த்தி செய்கிறதா என்று கேட்க வேண்டும். மதிப்பீடு செய்யவேண்டியதை மதிப்பீடு செய்கிறதா? தற்போதைய செயல்முறையினை புரிந்துகொள்ள நாம் மொழி வகுப்பினை ஆராயலாம்.

### எடுத்துக்காட்டு 1

தொடக்கப்பள்ளியில் மூன்றாம் வகுப்பிற்கு மொழி பாடம் கற்பிக்கும் ஆசிரியரை மதிப்பீடு செய்ய குழந்தைகளின் பாடநூலிருக்கும் ஒரு கதையைக் கூற வேண்டும். இவ்வகுப்பில் 30 மாணவர்கள் உள்ளனர். மாயாங் என்ற மாணவனைத் தவிர மற்ற மாணவர்கள் 10 மதிப்பெண்களுக்கு 6 மதிப்பெண்கள் எடுத்துத்தேர்ச்சி பெற்றனர். ரவி என்ற மாணவன் 8 மதிப்பெண்கள் எடுத்துள்ளான். ஆனால் மாயாங் மட்டும் இரண்டு மதிப்பெண்கள் பெற்றுள்ளான். வகுப்பு ஆசிரியர் மாயாங் பெற்ற மதிப்பெண்களை வெளிப்படையாகக் கூற, அதைக் கேட்ட சக மாணவர்கள் அவனை ஏளனம் செய்து நகைத்தார்கள். மாயாங்கிற்கு தான் மட்டும் ஏன் குறைந்த மதிப்பெண் பெற்றுள்ளான் என்று புரியவில்லை. மற்ற மாணவர்களைப் போன்றே அவனும் கதை கூறினான். ஆகவே அவன் சோகமாகவும் அமர்ந்திருந்தான். சற்று நேரத்திற்குப்பின் ஆசிரியையிடம்

குறிப்புகள்

சென்று தானும் மற்ற மாணவர்களைப் போலவேக் கதையை கூறியுள்ளான். எனினும் தனக்கு மட்டும் குறைந்த மதிப்பெண்கள் கிடைத்தன் காரணம் புரியவில்லை என்று கேட்டான் அதற்கு ஆசிரியை "நான் உன்னைப் பாடநூலிலுள்ளக் கதையைத்தான் கூறச் சொன்னேன். உன் மனதிற்குவந்த சொந்தக் கதையை அல்ல. இதைக் கேட்ட மாயாங் மனம் உடைந்து அதற்குப் பிறகு எந்தச் செயல்பாடுகளிலும் உற்சாகத்துடன் ஈடுபடவில்லை. மேலும் அடுத்த நாள் பள்ளிக்கு வரவுமில்லை. அவன் பெற்றோர் அவனை மறுபடியும் பள்ளிக்கு வரச்செய்ய மிகவும் சிரமப்பட்டனர்.

**எடுத்துக்காட்டு 2**

இதுவும் மூன்றாம் வகுப்பு மொழிப்பாட வகுப்பிற்கு எடுத்துக்காட்டு ஆகும். ஆசிரியர் மாணவர்களிடம் பசுவைப் பற்றி ஐந்து வரிகள் அவர்களது பயிற்சி புத்தகத்தில் எழுதுமாறு கேட்டுக் கொண்டார்.

அவ்வரிகள்

1. பசு நமக்குத் தாய் போன்றது
2. பசுவிற்கு நான்கு கால்கள் உள்ளன.
3. பசு பசும்புல் தின்னும்
4. பசு நமக்குப் பால் கொடுக்கும்
5. பசுவின் சாணம் கொண்டு வரட்டி செய்யலாம்.

ஆசிரியர் மாணவர்களை அந்த ஐந்து வரிகளை மனப்பாடம் செய்து தேர்வு எழுதுமாறு கேட்டுக்கொண்டார். பெரும்பாலான மாணவர்கள் ஆசிரியர் கொடுத்த வரிகளை எழுதி நன்குத்தேர்ச்சி பெற்றனர். ஆனால் நீலா என்ற மாணவி மட்டும் ஆசிரியைக் கொடுத்த ஐந்து வரிகளை எழுதாமல் வெவ்வேறு பொருள் கொண்டவரிகளை எழுதினாள்.

அந்த ஐந்து வரிகள்:

1. பசு நமக்குத் தாய் போன்றது
2. பசுவிற்கு நான்கு கால்கள் உள்ளன.
3. நாம் நம் இல்லங்களில் அதிகமாக பசுக்களைக் வைத்துள்ளோம்.
4. பசுவின் பால் நமக்கு வருமானம் தருவதாக அமைகிறது.
5. ஐறிவாவின் பசு ஒரு கன்றுகுட்டியை ஈன்றுள்ளது.

பெரும்பாலான மாணவர்கள் ஐந்திற்கு ஐந்து மதிப்பெண்கள் பெற்றிருந்தனர். ஆனால் நீலா மட்டும் மற்றவர்களைப் போலவே ஐந்து வரிகள் எழுதியும் அவள் ஐந்திற்கு இரண்டு மதிப்பெண்கள் மட்டுமே பெற்றிருந்தாள். மேலும் அவள் எழுதிய வரிகளில் எவ்வித தவறும் இல்லாதபோதும் மதிப்பெண் குறைக்கப்பட்டிருந்தது.



குறிப்புகள்

இவ்விரண்டு எடுத்துக்காட்டுகள் நமது நாட்டில் நாம் மேற்கொள்ளும் மதிப்பீட்டின் விதத்தையே உணர்த்துகிறது. இத்தகைய மதிப்பீடு பதற்றம மற்றும் பாதுகாப்பின்மை, கவலை மற்றும் அவமானம் போன்றவைகளையே உருவாக்கும் நிலைஉள்ளது. பாடபுத்தகத்தை மனப்பாடம் செய்து ஒப்பிப்பது மொழிப்பாடத்தினைச் சரியாக மதிப்பீடு செய்வதாக எடுத்துக் கொள்ள முடியாது. மதிப்பீடு என்பது மாணவர்களின் கற்பனைத திறனையும படைப்பாற்றல் திறனையும் மதிப்பீடு செய்வதாக இருக்க வேண்டும்.

இத்தகைய மதிப்பீடு இன்றைய காலக் கட்டத்தில் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடானது முன்பே திட்டமிட்டு குறிப்பிட்ட இடைவெளியில் நடத்தப்படுகிறது. வாய்மொழித் தேர்வு ஒரு நாளிலும் எழுத்துத் தேர்வு மற்றொரு நாளிலும் தனித்தனியாக நடத்தப்படுகிறது. இதுவே குழந்தைகளின் அச்சத்திற்கும் பதட்டத்திற்கும் காரணமாக இருக்கிறது. இத்தகைய மதிப்பீடு கற்றல் கற்றல் கற்பித்தல் முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டுள்ளது என்ற தோற்றத்தை உருவாக்குகிறது. வினாத்தாளைத் தயாரிப்பவர் ஒருவராகவும் பாடம் நடத்துவர் வேறு ஒருவராகவும உள்ளனர்.

வினாத்தாளை தயாரிக்கும் நபர் மாணவர்களின் புரிதலையும் பின்புலத்தையும் கற்றுக் கொண்டவிதத்தையும் புரிந்து கொள்பவராக இல்லை.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 1**

1. *தற்போதைய மதிப்பீட்டு முறையில் குழந்தைகளுக்கு பொருந்ததாது எது?*

   *அ) பதட்ட நிலை*

   *ஆ) பாதுகாப்பில்லா நிலை*

   *இ) கவலை மற்றும் அவமான நிலை*

   *ஈ) சந்தோஷ நிலை*

2. *நீ அந்த ஆசிரியராக இருந்தால், மாயாங்கின் பதில்களை எவ்வாறு மதிப்பீடு செய்திருப்பாய்?*

   ....................................................................................................

   ....................................................................................................

   ....................................................................................................

3. *நீலா குறைவான மதிப்பெண்கள் பெற்றதன காரணம் என்னவாக இருக்கும் என்று நீ எண்ணுகிறாய்?*

குறிப்புகள்

அக்காரணங்கள் நியாயமானதா? விளக்கமாகச் கூறுக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## 10.3 மதிப்பீடு செய்வது ஏன்?

மதிப்பீடு என்பது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயனுள்ள ஒரு கருவி மதிப்பீடு. மதிப்பீடு என்பது மாணவர்களின் கற்றல் திறன்இ வயதுஇ கற்கும் வேகம், கற்கும் நிலை போன்றவற்றை அளவிட உதவுகிறது. மாணவர்களின் நிலையறிந்து கற்றல் கற்பித்தலை மேம்படுத்திக்கொள்ள ஆசிரியருக்கு மதிப்பீடு துணைபுரிகிறது.

மாணவர்களுக்கு மதிப்பெண்கள் வழங்குவதற்காக மட்டுமே மதிப்பீடு நடத்தப்படுவதில்லை. யார் யார் என்ன மதிப்பெண்கள் வாங்கியிருக்கிறார்கள் என்பது முக்கியமல்ல. மதிப்பீடு என்பது குழந்தைகளின் அதிகப்பட்ட திறன் அடைவதன் படிகளிலிருந்து குறைந்தபட்ச திறன் அடைவின் படிகளுக்கும் தரத்தை நிர்ணயிப்பது அல்ல. மதிப்பீட்டின் முதன்மை நோக்கம் ஆசிரியர் மாணவர்களுக்கு அடுத்த படியாக எதைக் கற்பிப்பது என்பதைத் தீர்மானிக்க உதவுகிறது. மதிப்பீடு ஒரு குழந்தைக்குத் தன் கற்றலில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை உணரவும் அவனுடைய முன்னேற்றத்தை உறுதிசெய்யவும் பயன்படுகிறது. மதிப்பீடானது ஒரு ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் மாணவர்களின் தேவையறிந்து அவர்களின் சிறந்த நிலைக்கு முன்னேற்ற என்ன செய்யவேண்டும் என்பதை உணர்த்த உதவுகிறது. மதிப்பீடு தற்போது பொதுவாக மாணவர்களின் தேர்ச்சிக்கும் தோல்விக்கும் மதிப்பெண்கள் எடுத்ததை உறுதிசெய்வதற்கும் நடத்தப்படுவதாக உள்ளது. இதனுடைய நம்பகத்தன்மை மிகவும் குறுகிய தன்மையுடையதாக உள்ளது. இந்தமுறை மதிப்பீடானது குழந்தையுடன் அடைவுத்திறனை அளக்கவும் கற்றல் கற்பித்தலில் ஆசிரியர் அதிக முயற்சி எடுத்துக்கொள்ளவும் பயன்படுவதாக உள்ளது. எடுத்துக்காட்டாக ஒரு மொழிப்பாட ஆசிரியர் தனது மதிப்பீட்டில் ஒரு குழந்தை எந்த அளவு வாசிக்கிறான் எவ்வளவு நல்ல முறையில் வாசிக்கிறான் அவனால் தடையில்லாமல் இயல்பாக வாசிக்க முடிகிறதா? எந்த அளவு அவனால் கவனித்துப் படிக்க முடிகிறது. எந்த அளவு திடமாகத் தங்களை வெளிப்படுத்துகிறான்? அவனால் அவன் நினைப்பதை எழுத முடிகிறதா? வாக்கியத்தில் எழுதும் போது பிழையில்லாமல் எழுதுகிறானா? போன்றவைகளைத் தெரிந்து கொள்ள வாய்ப்பளிப்பதாக உள்ளது. மதிப்பீடு மாணவர்களின் கற்கும் வேகத்தையும் நோக்கத்தையும் புரிந்துகொள்ள உதவுவதாக உள்ளது. எடுத்துக்காட்டாக ஒரு குழந்தையால் படிக்கமுடிய

வில்லையென்றால் அதற்கு என்ன காரணம் என்பதை அறிய வேண்டு மானால் அவன் சொற்கள் வாக்கியங்கள் எழுதும்போது சில எழுத்துகளை ஞாபகத்தில் கொண்டுவர முடியாமல் திணருகின்றானா? அல்லது அவன் ஒவ்வொரு எழுத்தாகப் படித்து அர்த்தம் புரியாமல் வாசிக்கிறானா? இவை அனைத்துமே குழந்தைகளைப் பற்றி புரிந்து கொள்ள உதவுகிறது.

நாம் தற்போது ஒரு குழந்தையின் படிக்கும் திறனையும் அவன் புரிந்துகொள்ளும் திறனையும் பற்றி பேசுதல் வேண்டும். மதிப்பீட்டின்போது ஒவ்வொரு குழந்தைக்கும் தகுந்த விளக்கங்களை எழுதுதல் வேண்டும். அந்த விளக்கங்கள் விரிவானதாக இல்லாமல் அடிப்படை கருத்துகளை உணர்த்துவதாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு கருத்துகளும் விரிவான விளக்கங்களாக பார்வையின்போது கவனிக்கப்பட்டதை எழுதுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக முதல் வகுப்பில் அடியெடுத்து வைக்கும் குழந்தைக்கு ‘ ஜெயா புத்தகங்களில் ஆர்வம் காட்டுகிறாள் என்பது மிக குறுகிய முழுமை பெறாத கருத்து. அடிப்படைக் கருத்து தெளிவாக இருத்தல் வேண்டும். அவை பின்வரும் வழிமுறைகளில் இருக்கலாம். ஜெயா புத்தகங்களில் முகவும் ஆர்வம் காட்டுகிறாள். நீண்ட நேரமாகப் புத்தகங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கிறாள். பிறகு ஒரு புத்தகத்தை எடுத்து அதன் ஒவ்வொரு பக்கத்தையும் திருப்பி அவற்றிலுள்ள படங்களை நீண்ட நேரமாகப் பாரத்துக்கொண்டிருக்கிறாள். அந்தப் புத்தகம் விலங்குகளைப் பற்றியதாகும். இம்மதிப்பீடு மாணவனின் நடத்தையையும் உண்மைச் சூழலில் என்ன நடக்கிறது என்பதையும் விவரிக்கிறது. இது வரு பொதுவான கருத்து அல்ல. 2 – 4 மாத கால அளவில் மாணவர்களின் மொழிப்பாடத்தில் அவர்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்து வந்தால் மட்டுமே ஏழு, எட்டு கருத்துகள் அவர்களைப் பற்றி கூற முடியும். அக்கருத்துகள் கற்றல் கற்பித்தல் முறையை ஒரு குழந்தை நன்கு தெளிவு படுத்திக்கொள்ள உதவும். இது சூழ்நிலையின் உண்மையை அறிந்து முன்னேற்றப்பாதையை மனதிற்கொண்டு செயல்படவும் உதவும். எடுத்துக்காட்டாக மாணவன் படித்தலி/ உள்ள இடர்ப்பாடுகளைப் புரிந்து கொண்டு அவற்றைக் களைவதற்கான தீர்வுகளைக் காண வேண்டியது அவசியம். பல செயல்பாடுகள் பயிற்சிகள் மூலம் ஒரு மாணவனின் படித்தல் திறனை வெளிக்கொணரலாம். ஒரு குழந்தையின் சொந்த முன் அனுபவ செயல்திறன்களை வைத்தே அக்குழந்தையை மதிப்பீடு செய்தல் வேண்டும். எந்த ஒரு குழந்தையையும் மற்ற குழந்தைகளின் செயல்திறன்களுடன் ஒப்பிட்டு மதிப்பீடு செய்தல் பயன்தராது. ஒவ்வொரு குழந்தைக்கும் புரிந்து கொள்ளும் திறன்இ நேரம் மாறுபட்டிருக்கும். எடுத்துக்காட்டாக சில குழந்தைகள் எளிமையானவற்றை விரைவில்ள புரிந்து கொண்டு படிக்கவும் கடினமானப் பகுதிகளை அதிக நேரம் எடுத்துக்கொண்டு படிக்கவும் கற்றுக்கொள்கின்றனர். விரைவாக கற்பித்தலைத் தவிர்த்து மாணவர்களை உற்சாகப்படுத்தி படிக்கவைத்தல் அவசியம். மதிப்பீடு என்பது ஒருமுறை

குறிப்புகள்

மட்டுமே நடத்தப்படுவது அல்ல. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அல்லது அடிக்கடி நடத்தப்படுவது. மேலும் இது வாழ்க்கை முழுவதும் நடத்தப்படும் ஒரு செயல்பாடாகும்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 2**

1. மதிப்பீட்டின்போது நாம் மனதிற் கொள்ள வேண்டியவை யாவை? நாம்

   அ) மாணவனின் தற்போதைய முன்னேற்றத்தை முந்தைய கற்றல் நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தல்

   ஆ) ஒரு குழந்தையின் முன்னேற்றத்தை மற்ற குழந்தைகளின் முன்னேற்றத்தோடு ஒப்பிடுதல்

   இ) ஒரு குழந்தையின் முன்னேற்றத்தை அதிகமாகவும் வேகமாகவும் படிக்கும் குழந்தையுடன் ஒப்பிடுதல்

   ஈ) ஒரு குழந்தையின் முன்னேற்றத்தை வேகமாகப் பேசும் குழந்தையுன் ஒப்பிடுதல்

2. மதிப்பீட்டு முறையினது மாணவனைச் சார்ந்ததாக ஏன் இருக்க வேண்டும்? அத்தகைய முறையின் நன்மைகள் யாவை?

   ......................................................................................................

   ......................................................................................................

   ......................................................................................................

3. மதிப்பீடு எவ்வாறு கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளுடன் இணைக்கப்படுகிறது.? உனது கருத்துகளை எழுதவும்.

   ......................................................................................................

   ......................................................................................................

   ......................................................................................................

4. ஒரு மாணவனின் வாசிக்கும் திறனைப்பற்றிய ஒரு கருத்தை நீர் வாசித்து பின் அதே மாணவனுடைய எழுத்துத்திறனைப் பற்றிய கருத்தை எழுதி அதனடிப்படையில் உமது பொதுக்கருத்தைத் தெரிவிக்கவும்.

   ......................................................................................................

   ......................................................................................................

   ......................................................................................................

## 10.4 மொழிப்பாட மதிப்பீட்டிலுள்ள பிரச்சனைகள்

குறிப்புகள்

எழுதுவதில் சரியான வார்த்தைகள் சரியான இலக்கணம், உச்சரிப்பு போன்றவற்றைப் பயன்படுத்தி எழுதுவதே சுத்தமான மற்றும் செம்மையான மொழியாகும். மற்றொரு வகையால் ஒரு குழந்தை தனது திறன்களைப் பயன்படுத்தி பேச, படிக்க மற்றும் எழுத ஏதுவாக செயல்படுவதே சரளகமாக வெளிப்படுத்துல் ஆகும். இலக்கணப் பிழையின்றி எழுதுவதைக் காட்டிலும் பொருளுடன் கூடிய பாட வரிகளை எழுதுவதையே அதிகமாக வலியுறுத்தல் வேண்டும்.

சரளமாகப் பேசுவதை ஆரம்ப வகுப்புகளிலிருந்தே மதிப்பீடு செய்ல் வேண்டும். சரளமாகப் பேசுதல் மற்றும் துல்லியமாக எழுதுதல் போன்றவற்றை உயர் தொடக்க வகுப்புகளில் கவனம் செலுத்தலாம்.

ஒரு குழந்தை தான் கற்றுக்கொண்ட மொழித்திறன்களை நமது மதிப்பீட்டின் மூலமே தெரிந்து கொள்ள விரும்புகிறோம். மதிப்பீடு செய்வதற்கு முன்னால் ஓர் ஆசிரியர் மாணவர்கள் அடைய வேண்டிய திறன்களுக்கு ஏற்ற பலவகைப்பட்ட பயிற்சிகளை பெற்றிருக்கிறார்களா? என்பதை அறிந்துகொள்ள வேண்டும். இப்படிப்பட்ட பயிற்சிகளைத் தராமல் மதிப்பீடு செய்வது பயனற்றது ஆகும். மாணவர்களுக்கு அவர்களின் திறன்களுக்குத் தகுந்தவாறு மதிப்பீடு செய்தல் வேண்டும். இப்படி செய்வது நமக்கு ஒரு தெளிவை உருவாக்கும். செயல்பாடுகளைப் பயன்படுத்தி மதிப்பீடுகளைச் செய்யும்போது ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் தனித்தனியாக திறன்களை மதிப்பீடு செய்வது அவசியமில்லை. இரண்டு மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட செயல்பாடுகளை ஒரே சமயத்தில் மதிப்பீடு செய்யலாம். அவற்றில் முக்கியமான திறன்களையும் உள்ளடக்கியதாகவும் இருக்கலாம்.

### 10.4.1. கவனித்தல் மற்றும் பேசுதல்

மாணவர்கள் ஒரு படத்தைப்பார்த்து விளக்கம் அளிக்கும்போது சுதந்திரமாக அவர்கள் பார்த்ததை தையும் கேட்டதையும் விவரிக்க முடிந்தது. அவைகள் கலந்துரையாடல், விரிவுரை மற்றும் விவாதிதல் மூலம் இருக்கலாம். அவர்கள் எழுப்பும் வினாக்கள் சரியான வார்த்தைகளைக் கொண்டும் பதில்கள் முழுப்பொருளுடைய வாக்கியங்களாகவும் இருத்தல் வேண்டும்.அவர்களுக்குத் தெரிந்த நபர்கள் மற்றும் சம்பவங்களைப் பற்றி பேசுதல் வேண்டும்.

### 10.4.2 புரிந்துகொண்டு படித்தல்

தனித்தனி சொற்களையோ சொற்றொடர்ளையோ புரிந்துகொண்டு படிப்பதே அடிப்படைக் குறிக்கோளாகும். பாடக் கருத்துகளை நன்கு புரிந்து கொண்டு படித்தலே சிறத்ததாகும். தெரிந்த வார்த்தைகளை புரிந்துகொண்டு படித்தலை மதிப்பீடு செய்தல் அவசியம். பின்னர் ஒரு குழந்தை ஒரு படத்தைப்

குறிப்புகள்

பார்த்து அதிலுள்ள சொற்கள் சொற்றொடர்கள் மற்றும் கதைகளை புரிந்துகொண்டு அதிலுள்ள முக்கிய கருத்துகளை கூற முடியும். அவர்கள் பாடநூல்களிலிருந்து தெரிந்துகொண்டதையே அங்க பயன்படுத்துகின்றனர்.

### 10.4.3 எழுதுதல்

எழுதுதலை மதிப்பீடு செய்யும் போது கடிதத்திலுள்ள எழுத்துகளையும் சிறிய சொற்றொடர்களையும் மாணவர்களால் எழுத முடிகிறதா என்பதை கவனித்துப் பார்க்க முயற்சி செய்ய வேண்டும். பின்னர் பார்க்காமல் கடிதத்ததையும் சொற்களையும் எழுதுவதை மதிப்பீடு செய்தல் வேண்டும். அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஒரு சொல் அல்லது ஒரு சொற்றொடரில் பதில் கூறுவதை மதிப்பீடு செய்தல் வேண்டும். அடுத்த கட்டமாக கேள்விப்படாத சொற்களை இரண்டு மூன்று வரிகளில் எழுதிப் பழகுவர்.

### 10.4.4. வெளிப்பாடு

இங்கு மாணவர்கள் தாங்கள் பார்த்த பொருள்கள் அல்லது சம்பவங்களை படங்ளாக வரைந்து சித்தரிக்க வேண்டும். பின்னர் மாணவர்கள் தாங்களாகவே படங்கள் வரைவதையோ செய்யுள் இயற்றுவதையோ கதைகள் அல்லது நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறுவதையோ நாம் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கலாம். மாணவர்கள் களிமண் அல்லது வேறு பொருள்களைக் கொண்டு மாதிரிகள் செய்வதையும் அவர்களுடைய படைப்பாற்றல் திறன்களையும் கதைகளை விவரித்தலையும் நாம் மதிப்பீடு செய்து அறிந்து கொள்ளலாம்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 3**

1. சரளமாகப் பேசுதல் / படித்தல் / எழுதுதல் என்றால் என்ன?
   - அ) சொற்றொடர்களை சரியாக உச்சரித்தல்
   - ஆ) பிழையின்றி எழுதுதல்
   - இ) தன்னைப்பற்றி வெற்றிகரமாக பேச படிக்க மற்றும் எழுத முடிகிறது.
   - ஈ) இலக்கண விதிகளை வெளிப்படுத்துதல்
2. புரிதலுடன் படிக்கும் திறன்களை மதிப்பிடுவதற்கு எந்த விதமான செயல்பாடுகளைப் பயன்படுத்தலாம்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

3. கவனித்தல் மற்றும் பேசும் திறன்களை மதிப்பீடு செய்யும்போது நீங்கள் மனதில் கொள்ள வேண்டியவை யாவை?

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

குறிப்புகள்

## 10:5:1 வாய்மொழித்தேர்வு

வாய்மொழித்தேர்வு முறைப்படுத்தப்பட்டடது. முறைபடுத்தப்படாதது என இருவகையில் அமையும். மாணவர்களைப் பல்வேறு தலைப்புகளில் பேசவைத்தல், மாணவர்களிடம் வினாக்கள் கேட்டல், கலந்துரையாடல்கள் நடத்துதல், மாணவரை நடிக்கச் செய்தல் போன்றவை கற்றல் கப்பித்தலில் ஒரு பகுதியாய் அமைகின்றன. இவற்றின் வாயிலாக மாணவரின் மொழித் திறன் அளவிடப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக கீழ்க்காணும் செயல்களைக் கையாளலாம்.

**வினா–விடை அமர்வு**

மாணவர்களை வினா விடை அமர்வினில் ஈடுபடுத்தி அவர்களின் மொழியறிவை மதிப்பீடு செய்யலாம். அனைத்து மாணவர்களையும் பதிலளிக்கச் செய்வதே இதன் நோக்கம். இதில் கேட்கப்படும் வினாக்கள் அனைத்தும் மாணவரின் அன்றாட வாழ்வில் நிகழும் நிகழ்வுகள், அவர்களின் அனுபவங்கள், விருப்பங்கள் மற்றும் தேவைகளை அடிப்படையாக் கொண்டவை. இந்நிகழ்வில் மதிப்பீட்டாளராகச் செயல்படும் ஆசிரியர் மாணவரின் கருத்துக்களைத் தெளிவாக வெளிப்படுத்த வாய்ப்பளித்தல் வேண்டும். ஆசிரியரும் நன்கு வினாக்களை தெரிந்து கேட்கும் திறன் பெற்றிருக்க வேண்டும். இவ்வினா விடை அமர்வு மாணவரின் சொல்லாட்சித்திறனையும், உச்சரிப்புத்திறனையும், தொடரமைக்கும் திறனையும் மதிப்பிடுவதாக அமையவேண்டும்.

**கதை கூறல்**

மாணவரைத் தாம் படித்த அல்லது கேட்ட கதைகளைத ;தமது சொந்த நடையில கூறச் செய்து மதிப்பிடுதல் இதன் முக்கிய நோக்கமாகும். முலீணவர் தாம கற்பனையாக உருவாக்கியதாகவும் கதை இருக்கலாம். மாணவரின் மெய்ப்பாடு, கதைகூறும் திறன், நிகழ்ச்சிகளைக் கோவையாக நினைவுபடுத்திக் கூறல் போன்றவற்றை மதிப்பீட்டுக்கூறுகளாகக் கொள்ளலாம்.

குறிப்புகள்

**வாய்விட்டுப் படித்தல்**

வாய்விட்டுப் படித்தலின் வழியாக மாணவரின் உச்சரிப்புத்திறனையும், இசையுடன் பாடும் திறனையும் மதிப்பீடு செய்யலாம். இவ்வாறு மதிப்பீடு செய்கையில் சொற்களை, தொடர்களை உரிய ஒலிப்புடன், போதிய இடைவெளி விட்டு, ஏற்ற இற்ககத்துடன் படிக்கின்றனரா? ஏன்பதைக் கவனித்து மதிப்பீடு செய்ய வேண்டும். இத்தேர்வில் பல்வேறு உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் சிறு சிறு பத்திகள், உரையாடல்கள், நாடகங்களின் சிறுபகுதிகள், பாடநூலில் உள்ள சிறுபகுதி, பாடல்கள் போன்றவற்றைத் தந்து மாணவரை வாய்விட்டு படிக்கச் செய்யலாம், மாணவரால் ஒருவேளை குறிப்பிட்ட பகுதியை சரியான ஒலிப்புடன், போதிய இடைவெளி விட்டு, ஏற்ற இறக்கத்துடன் படிக்க இயலவில்லையெனில் மாணவன் படிப்பதைத் தடுக்கக் கூடாது. அது மாணவருக்கு அச்சத்தை உண்டாக்கி படிப்பதில் ஆர்வமின்மையை ஏற்படுத்தும், மாறாக நமது முறையான வழிகாட்டுதல் மாணவனின் பிழையின்றிப் பேசுதலையும், தவறின்றி உச்சரித்தலையும் மேம்படுத்தும்.

மாணவன் தான் பார்த்ததையும், படித்ததையும், கேட்டதையும் விரித்துரைத்தல் சிறந்த மொழித்திறனாகும். விரித்துரைத்தல் மதிப்பிடுதலுக்குரிய முக்கியமான செயல்பாடாகும். தொடக்கப்பள்ளி வகுப்புகளில் முதலில் மாணவர்களுக்கு குறிப்பிட்ட பொருள், படம் அல்லது செயலைக் காட்டி அதை விரித்துரைக்கச் செய்யலாம். ஆரம்பநிலைகளில் ஒரு சொற்றொடரே போதுமானது.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 4**

1. ஒரு மாணவனால் ஒரு சொற்றொடரை, வினா, அல்லது உணர்ச்சி வாக்கியங்களை சரியாக உச்சரிக்க முடியவில்லை எனில் ஆசிரியர் என்ன செய்ய வேண்டும்?

   அ) மாணவன் படிப்பதை உடனே நிறுத்த வேண்டும்.

   ஆ) உச்சரித்தலை சரிசெய்ய வேண்டும்.

   இ) அச்சொற்றொடரை பலமுறை சரியாக உச்சரிக்கச் செய்ய வேண்டும்.

   ஈ) மாணவன் படிப்பதை உடனே நிறத்தக் கூடாது.

2. வினா விடை அமர்வில் கேட்கப்படும் வினாக்கள் எத்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

3. ஒரு விளையாட்டு மைதானத்தில் படம் கீழே தரப்பட்டுள்ளதெனில் அதைப்பற்றி இரண்டாம் வகுப்பு, ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் என்ன கூறுவார்கள் என எழுதுக?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

குறிப்புகள்

நீங்கள் வகுப்பறையில் கற்பிக்கும் பொழுது மாணவரின் வெளிப்பாடுகளை அவ்வப்போது மேலோட்டமாக உற்றுநோக்கல் வேண்டு;ம். ஆனால் அவ்வாறு உற்றுநோக்கியவற்றை பதிவு செய்தல் வேண்டும். இவ்வாறு பதிவு செய்யப்படுபவை மாணவர் மகிழ்வுடன் மொழிக்கற்றலில் ஈடுபட்டதையும், மொழிக்கூறுகளை சரளமாக வெளியிடும் திறன் பெற்றுள்ளதையும் மதிப்பீடு செய்ய உதவி செய்யும். மதிப்பீடு செய்கையில் மாணவருக்கு மதிப்பெண் அல்லது தரச்சான்று வழங்க மூன்று அல்லது ஐந்ததுநிலைப்புள்ளி அளவையில் அட்டவணை அமைக்கப்பட வேண்டும். அந்த அட்டவணை கீழ்க்காணும் விதத்தில் அமைக்கலாம்.

| உட்கூறுகுள் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| மொழியறிவு | | | ✓ | | |
| தடையின்றி வெளியிடும் திறன் | | ✓ | | | |
| கோவையாக அமைத்தல் | | | ✓ | | |
| வெளிப்பாடு | | | | ✓ | |

இவ்வட்டவணையின்படி 5 என்பது மிகநன்று எனும் நிலையிலும், 3 என்பது சராசரி எனும் நிலையிலும், 4 என்ப துநன்று எனும் நிலையிலும் மாணவர் தரத்தை உணர்த்தும். ஒன்றும், இரண்டும் சராசரிக்கும கீழ் எனும் நிலையில் அமைந்து மாணவருக்கு, அவர்நிலை உயர மேலும் அதிக வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பதைக் காட்டும்.

## 10.5.3 எழுத்துத்தேர்வு

இவ்வகைத்தேர்வில் வினாத்தாள் அமைப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். வினாத்தாள் மாணவரின் புரிந்து படித்தல், கற்பனை, படைப்பாற்றல், விவாதித்தல், ஒப்பீடுசெய்தல், வெளியிடுதல், ஒற்றுமை வேற்றுமைகளைப் புரிந்து கொள்ளுதல் முதலிய திறன்களை மதிப்பீடு செய்யக்கூடியதாகவும், மனத்திறனைத்தாண்டி மாணவரின் பிற திறன்களை மதிப்பிடுவதாகவும் அமைய வேண்டு;ம. மாணவர் தம் அனுபவங்களை வெளிப்படுத்த கட்டாயம் வாய்ப்பளிப்பதாய் இருக்க வேண்டும். விடையளிப்பதில் மாணவர் தம் கூர்சிந்தனையை பயன்படுத்தச் செய்வதாகவும், பாடநூலில் உள்ளதை அப்படியே நெட்டுரு செய்து எழுதத் தூண்டுவதாய் இல்லாமல் மாணவர் தம் சொந்த நடையில் தம் கருத்துகளை எழுத உதவுவதாய் அமைய வேண்டும்.

### சொல்லக்கேட்டு எழுதுதல்

சொல்லக்கேட்டு எழுதுதலும் மாணவரின் மொழித்திறனை அளவிட உதவும் ஒரு சிறந்த கருவியாகும். இது மாணவரின் கேட்டல் மற்றும் எழுதுதல் திறன்களை அளவிடப்பயன்படும் முக்கியமான முறையாகும். இது பொதுவாக நடத்தப்படுகின்றன முறையினின்று வேறுபட்டிருக்க வேண்டும். தற்சமயம் சொல்லக் கேட்டு எழுதுதல் சோதனையாக பார்க்கப்படாமல் மணாவரின் மொழக்கற்றலை அளவிட உதவும் கருவியாகக் கையாளப் படுகிறது. சொல்லக் கேட்டு எழுதுதல் மாணவரின் கேட்டுப் புரிந்துகொள்ளு தலையும், எழுதுதலையும் அளவிட உதவுவதோடு, கற்போரின் திறன்வளர்க்கும் செயல்முறையாகவும் அமைகிறது.

சோல்லக் கேட்டு எழுதுதல் மூன்றாம் வகுப்பு முதல் மாணவரிடையே கையாளப்படும் வழிமுறையாகும். இதற்கெனப் பயன்படுத்த பத்திகளைத் தேர்ந்தெடுப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படுகிற பத்திகள் மாணவர் முழுமையாகப் புரிந்து கொள்ளம் வண்ணம் கருத்தை உள்ளடக்கியதாக இருத்தல் மட்டுமின்றி, அதனினும் ஒருநிலை உயர்ந்த தரமுடையதாக கட்டாயம் அமைய வேண்டும். அப்பொழுதுதான் மாணவரின் வகுப்பறைக் கற்றலுக்குப்பின் நிகழ்கின்ற புரிதலை அளவிட இயலும். இச்செயல்பாடு முழுவதும் முறையாகத் திட்டமிடப்பட்டு உரிய இடைவெளி விட்டு நடத்தப்பட வேண்டும். இது கீழ்க்காணும் வகையில் பகுக்கப்படலாம்.

படிநிலை 1: தேர்ந்தெடுக்கப்பட்ட பத்தியை அல்லது பகுதியை ஆசிரியர் உரிய ஒலிப்புடன் ஏற்றஇறக்கத்துட்ன சரியான வேகத்தில் நிதானமாகப் படிக்க வேண்டும். மாணவர் ஆசிரியர் படிப்பதைக் கவனமாகக் கேட்டு மனதில் கொள்ள வேண்டும். அது பத்தியின் முழுப்பொருளை மாணவர்

குறிப்புகள்

புரிந்துகொள்ள உதவுவதோடு, சோதனையை சிறப்புடன் எதிர்கொள்ள மனதளவில் அவர்களை ஆயத்தம் செய்யும்.

படிநிலை 2: ஆசிரியர் முன் குறிப்பிட்ட பகுதியை உரிய ஒலிப்புடன், ஏற்ற இறக்கத்துடன் நிதானமாக முன்னை விட மெதுவாகப் படிக்கவேண்டும். இது மாணவர் கவனமாகக் கேட்டு தாளில் பிழையின்றி எழுத உதவும்.

புடிநிலை 3: ஆசிரியர் மீண்டும் முன் குறிப்பிட்ட பகுதியை உரத்த குரலில் நிதானமாகப் படிக்க வேண்டும். இது மாணவர் எழுதி முடித்தபின் ஏதேனும் தவறு செய்திருந்தால் திருத்திக்கொள்ள அல்லது இடையில் எழுதாமல் விட்டிருந்தால், இடைவெளியை நிரப்ப உதவும். ஆசிரியர் ஒவ்வொரு முறையும் 6 முதல் 8 நிமிடங்கள் இடைவெளி விட்டு இப்பயிற்சியை நடத்த வேண்டும்.

இம்முறையில் நடத்தப் பெறும் சொல்லக் கேட்டு எழுதுதல் கற்போர் தம் தவறுகளைத் தாமே கண்டறிந்து சரிசெய்து கொள்ள உதவுகிறது. தானே முடிவெடுக்குந்திறன் பெறவும், தம தவறுகள் மூலம் புதியன கற்கவும் வழிவகுக்கிறது. மாணவர் தத்தம் ஏடுகளில் இதனை செய்து தம் தவறுகளை திருத்தம் செய்வதால், ஆசிரியர் மாணவரின் ஏடுகளை காண்கையில் அனைத்து மாணவரின் கற்றல்நிலையை அறிந்து கொள்ள இயலும். ஆசிரியர் மாணவரின் ஏடுகளைத் திருத்துகையில் அதில் தென்படும் பெரும்பிழைகளைச் செய்த மாணவரைக் கண்டறிந்து அவர்களைத் தனது அடுத்து செயல்திட்டத்தின் இலக்குகளாகக் கொண்டு அவர்கள் நிலை உயர முயல்தல் வேண்டும். ஆகவே சொல்லக்கேட்டு எழுதுதலை தொடர்ந்து முவீயாகக் கையாண்டால் மாணவரின் கற்றலில் ஏற்படும் பிழைகள் நீக்கப்பட உதவுவதோடு மட்டுமின்றி, ஆசிரியர் மாணவரின் நிலை அறிந்து கற்றலில் அவர்களை மேம்படுத்த எதிர்காலத்திட்டமிட உதவும்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 5**

1. மாணவரின் கேட்டலையும் பேசுதலையும் அளவிடும் இன்றியமையாத வழி

   அ) பேசுதல் ஆ) கேட்டல்

   இ) கேட்டலும் பேசுதலும் ஈ) சொல்லக்கேட்டு

2. வாய்மொழித் தேர்வின் போது எந்தெந்த திறன்கள் மதிப்பிடுப்படுகின்றன?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

குறிப்புகள்

3. ஆசிரியப் பயிற்றுநர் தன் நண்பரிடம் கூறினார் மாணவன் தேர்வில் நான் கற்பித்த வார்த்தைகளை எழுதாமல் வேறு வார்த்தைகளை எழுதியுள்ளான். ஆனால் பொருள் மாறவில்லை, நான் என்ன செய்ய? மதிப்பெண்களை குறைத்துத் தரவா? இவருக்கு நீங்கள் தரும் பதில் என்ன?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

4. சொல்லக் கேட்டு எழுதுதலைப் பயன்படுத்தியதின் மூலம் நீங்கள் ஏதேனும் புதிதாகக் கற்றுக் கொண்டீர்களா? கலந்துரையாடுக.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

## 10.6 உரைநடை, செய்யுள் மற்றும் நாடகப் பகுதிகளை மதிப்பிடும் செயல்பாடுகள்

நாம் இதுவரை திறன்களை மதிப்பிடும் வழிவகைகள் பற்றிப் பார்த்தோம், இப்பொழுது சில உரைநடை, செய்யுள், நாடகப்பகுதிகளைத் தெரிந்தெடுத்து அவற்றின் வழியாக எவ்வகையான வாய்மொழி, எழுத்துத்தேர்வுக்கான வினாக்களைத் தெரிவு செய்யலாம். எவ்வகையான செயல்பாடுகளை வடிவமைத்து நடத்தலாம் என்பதைக் காண்போம். சில எடுத்துக்காட்டுகள் கீழே தரப்பட்டுள்ளன.

### 10.6.1 பத்தி

**விடுபட்ட சொற்களை நிரப்புதல்**

விடுபட்ட சொற்களை நிரப்பும் தேர்வு மாணவரின் மொழியாற்றலின் தேர்ச்சிநிலையை அளவிட உதவும் சிறந்த முறையாகும். இது அனைத்துவகை மொழித்திறன்களிலும் மாணவரின் தேர்ச்சிநிலைகளை அளவிடுகிறது. இத்தேர்வில் மாணவர்களுக்கு ஒரு பத்தி கொடுக்கப்படும். குறிப்பிட இடைவெளிகளில் வார்த்தைகள் நீக்கப்பட்டிருக்கும் மாணவர் அதன் பொருளுணர்ந்து அதனைசரியான வார்த்தைகளால் நிரப்ப வேண்டும்.

குறிப்புகள்

## விடுபட்ட சொற்களை நிரப்புதலை உருவாக்குதல்

இத்தேர்விற்கென ஒரு பத்தியை அல்லது பகுதியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அது மாணவர் விரும்பும் வண்ணமாகவும், சவாலாகவும், நற்கருத்துடையதாகவும் இருக்க வேண்டும். பத்தியின் முதல்வரியை விட்டு இரண்டாம வரி முதல் அனைத்து வரிகளிலும் ஐந்தாம் அல்லது ஆறாம் அல்லது ஒன்பதாம் வார்த்தைகள் நீக்கப்பட வேண்டும். குறைந்த அளவு இருபது சொற்களாவது நீக்கப்பட்டிருக்க வேண்டும். அதே வேளையில் பத்தியின் கருத்து சிதையா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மற்றொரு முறையிலும் இதனை உருவாக்கலாம்;, தேர்தெடுக்கப்படுகின்ற பத்திகளில் நீக்கப்படுகின்ற சொற்களை ஒரே வகையினதாக அமைக்கலாம். (எ.கா பெயர், வினா, இடை, உரிச்சொற்கள், எச்சங்கள் போன்றவை) இது மாணவர் அந்தந்த இனங்களை அடையாளம் காணுதலில்பெற்றுள்ள திறன்களை அளிவட உதவுவதோ அதற்கேற்றாற் போல் மாணவருக்கு கற்பிக்கவும் ஒழி வகுக்கிறது.

மாணவர்கள் பத்திகளில் விடுபட்ட சொற்களை நிரப்பும் முன் குறைந்தது இரண்டு அல்லது மூன்றுமுறையாவது பத்திகளைக் கவனமாகப் படித்துப் புரிந்துகொள்ளுமாறு ஆசிரியரால் வழிநடத்தப் படுகின்றனர். அதே வேளையில் ஒவ்வொரு விடுபட்ட பகுதியிலுமஒரு சொல்லை மட்டும் நிரப்பும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

மூன்றாம் வகுப்பு முதல் இத்தேர்வின் நடத்தலாம். பலமுறை இதனை நடத்தி மாணவரைத் திறன்பெறச் செய்யலாம். படிப்படியாகக் கடினப்படுத்தி நடத்துதல் சிறந்த பலனைத் தரும்.

இரண்டு வகையில் இதனை நடத்தலாம். முதல்வகையில் கொடுக்கப்பட்டுள்ள பத்தியின் கீழ் சரியான சொற்கள் வரிசை மாற்றி அடைப்புக்குறிக்குள் தரப்பட்டிருக்கும். மாணவர்கள் சரியான சொற்களை தேர்ந்தெடுத்து உரிய இடத்தில் நிரப்ப வேண்டும். அடுத்த வகையில் சரியான சொற்கள் தரப்பட்டிருக்காது மாணவரே சரியான சொற்களைப் புரிந்துகொண்டு தம் சொந்த நடையில எழுதி நிரப்ப வேண்டும். இதற்கு ஒரு உதாரணம் கீழே தரப்பட்டுள்ளது.

குளத்தில் வாழ்ந்த ஆமையும் குளக்கரையில் உள்ள குவீயில் வாழ்ந்த நரியும் நண்பர்களாய் விளங்கின. ஒருநாள் குளத்தில் உள்ளவற்றை பற்றி அவை பேசிக்கொண்டிருந்தபோது ஒரு சிறுத்தை வர நரி பயத்துடன் காட்டிற்குள் ஓடிவிட்டது. பாவம் ஆமை வேகமாக நகரவும், மறைந்து கொள்ளவும் இயலாததால் சிறுத்தையிடம் சிக்கிக் கொண்டது. ஒரே பாய்ச்சலில் ஆமையைக்கவ்;விப் பிடித்த சிறுத்தை மரத்தடியில் வைத்து அதை உண்ணமுயன்றது. ஆனால் அதன் கூரிய பற்களாலும், வலிய நகங்களாலும்

ஆமையின் ஓட்டை ஒன்றும் செய்ய முடியவில்லை.

சிறுத்தை ஆமை ஓட்டை உடைக்க முடியாது தவிப்பதைக் குகையிலிருந்து கண்ட நரி தன் நண்பனை சிறுத்தையிடமிருந்து காப்பாற்ற முடிவு செய்து, மெதுவாக சிறுத்தையிடம் சென்றது. 'ஆமையின் ஓட்டை உடைக்க எனக்கு ஒரு எளிய வழி தெரியும். வேறொன்றுமில்லை ஆமையின் ஓட்டை வேகமாகக் குளத்திற்குள் வீசினால் அது நீரில் ஊறி இளகிவிடும். சுலபமாக ஓட்டை உடைத்து ஆமையை உண்ணலாம். முயற்சி செய்து பாருங்களேன்' என்றது.

முட்டாள் சிறுத்தையும் 'இந்த அருதையான யோசனை எனக்குத் தோன்றவேயில்லையே' என்று கூறி ஆமையை குளத்திற்குள் எறிந்தது. அடுத்து ஆமை என்ன செய்திருக்கும்?

## விடுபட்ட சொற்களை நிரப்புதல்

குளத்தில் வாழ்ந்த ஆமையும் குளக்கரையில் உள்ள குகையில் வாழ்ந்த நரியும் நண்பர்களாய் விளங்கின. ஒரு நாள் குளத்தில் ..................(1) பற்றிஅ வை பேசிக்கொண்டிருந்தபோது ஒரு ....................(2) வர நரி .....................(3) காட்டிற்குள் ஓடிவிட்டது. பாவம் ஆணை ....................(4) மறைந்து கொள்ளவும் இயலாததால் சிறுத்தையிடம் ..................(5) கொண்டது. ஒரே ..............(6) ஆமையைக் .................(7) சிறுத்தை மரத்தடியில் வைத்து அதை ..........(8) முயன்றது. ஆனால் அதன் கூரிய பற்களாலும், வலிய ..............(9) ஆமையின் ..................(10) ஒன்றும் செய்ய முடியவில்லை.

சிறுத்தை ஆமை ஓட்டை.....................(11) முடியாது தவிப்பதைக் குகையிலிருந்து கண்ட ...........(12) தன் நண்பனை சிறுத்தையிடமிருந்து ...........(13) முடிவு செய்து, மெதுவாக சிறுத்தையிடம்...............(14). 'ஆமையின் ஓட்டை உடைக்க எனக்கு ஒரு .....................(15) வழி தெரியும். வேறொன்றுமில்லை ஆமையின் ஓட்டை வேகமாகக் ..............(16) வீசினால் அது நீரில்....................(17) இளகிவிடும். சுலபமாக ஓட்டை.....................(18) ஆமையை உண்ணலாம்....................(19) செய்து பாருங்களேன்' என்றது. ......................(20) சிறுத்தையும் 'இந்த .....................(21) யோசனை எனக்குத் தோன்றவேயில்லையே'என்று கூறி ஆமையை .....................(22) எறிந்தது. அடுத்து ஆமை என்ன செய்திருக்கும்?

## மதிப்பீட்டுச் செயல்பாடுகள்

1. இக்கதையினை உம் சொந்த நடையில் /(வட்டார/தாய் மொழியில்) எழுதுக.
2. இக்கதைக்கு பொருத்தமான தலைப்பிடுக.

(இந்நிகழ்விற்கிடையில் ஆசிரியர் மாணவரோடு உரையாடி

அவர்கள் இத் தலைப்பை ஏன் தந்துள்ளனர்? அவர்கள் தந்துள்ள தலைப்பு பொருத்தமானதா? , அல்லது இதை விடச் சிறந்தது ஏதேனும உண்டா? என ஆராயத் தூண்டுதல் வேண்டும்).

**வினாக்கள் அமைத்தல்**

இச்செயல்பாட்டினைக் குழுவாகவோ, தனியாகவோ மாணவரைச் செய்ய வைக்கலாம். குழுவாகச் செய்தால் ஒருகுழு வினாக்கேட்க, மற்றவை பதில் அளிக்க வேண்டும. வினாக்கள் எவ்வாறு தயாரிக்கலாம் என்பதற்கு சில உதாரணங்கள் தரப்பட்டுள்ளன.

அ) நரி ஏன் பயந்தது?

ஆ) ஆமையை குளத்திற்குள் எறிய வேண்டுமென நரி ஏன் கூறியது.

இ) சிறுத்தை ஆமையை ஏன் வலிந்து பிடித்தது

ஈ) இக்கதை சிறுத்தையை முட்டாள் எனக் கூறுவது ஏன்

உ) சிறுத்தைக்கும் நரிக்கும் இடையே நடந்த உரையாடலை உம் சொந்த நடையில் எழுதுக.

ஊ) இக்கதை உணர்த்தும் பழமொழிகளை, மரபுத்தொடர்களைக் கண்டறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

எ) இக்கதையினை உரையாடலாக மாற்றுக.

(இக்கதையின் நிகழ்வுகளை மாற்றி வேறு வேறு முடிவுகளை உருவாக்க மாணவர்களுக்கு குழச் செயல்பாடாகத் தரலாம்).

## 10.6.2 கவிதை

***சீர்மிகு நண்பன்***

இங்கும் அங்கும் எங்கெங்கும்
என்றிழல் உடன்வரும் எந்நாளும்
நான்செய்யும் எதையுமே தான்செய்யும்
ஒன்றான என்னை இரண்டாக்கும்
கடல்மணல் பரப்பில் நான் ஓட
உடன் வரு துணையாய் முன் ஓடும்
மண்கோட்டை கட்டும் என் பணியில்
கண்காட்டி கைகோலீக்கும் துணையாக

குறிப்புகள்

உச்சிமரமேறி நான் நின்றாலும்
உடன்பரப் பார்க்கும் தன்னாலே
இருளில் அதனை இழக்கையில்
பயத்தால் உடன்வரா நின்றதோ?

1. இக்கவிதைக்குரிய மிப்பீட்டுச் செயல்பாடுக்ள கீழ்க்காணும் வினாக்கள் உதவியுடன் மேற்கொள்ளலாம்.

அ) ராஜேஜீன் சீர்மிகு நண்பன் யார்?

ஆ) ராஜேஜீன் நண்பன் இரவில் எங்கு சென்றான்?

இ) உனக்கும் இது போல் நண்பன் உண்டா?

ஈ) நீங்கள் வேலை செய்யும் பொழுது உங்கள் நிழல் என்ன செய்து கொண்டிருக்கும்?

சரியான விடையை (✓) தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ராஜேஷ் நிழல் எப்பொழுது தென்பட்டது........
   அ) அவன் மீது மழைத்துளிகள் விழும்பொழுது
   ஆ) அவன் மீது வெளிச்சம் படும்பொழுது
   இ) இருட்டின் பொழுது
   ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை.
2. அவன் நிழைலை அவன் எப்பொழுது இழந்தான்
   அ) கடற்கரையில் இருந்தபோது
   ஆ) வயலில் இருந்தபோது
   இ) தோட்டத்தில் இருந்தபோது
   ஈ) இருளில் இருந்தபோது
3. வகுப்பில் செய்க:
   அ) மேலேற அல்லது ஏறிச் செல்ல முயற்சி செய்யுங்கள் மேலேற எவ்வாறு முயற்சிப்பீர்கள் ஏறும் ஏறுமா?
   ஆ) நகரும் ஒளிக்கிடையே நிழல் எவ்வாறு அமையும்.
4. இக்கவிதை என்னென்ன வார்த்தைகளால் நிழலை விவரிக்கிறது.

5. நிழலின் செயல்கள்

1. நிழல் எவ்வாறு உருவாகிறது என்று உங்களுக்கு தெரியுமா?

ஒளி ஒரு பொருளால் தடைசெய்யப்படு;ம் போது நிழல் உருவாகிறது அதைச் செய்து பாருங்கள்.

அ) ஒரு இருண்ட அவீறில் சுவரின் முன் நிற்கவும்

ஆ) ஒருவரிடம் உங்கள் மீது மின்கல விளக்கை ஒளி வீச சொல்லுங்கள்

இ) அப்பொழுது உங்கள் நிழல் சுவரில் தென்படும்.

ஈ) இப்பொழுது உங்கள் கை விரல்களைப் பயன்படுத்தி நிழல் உருவங்களை சுவரில் தோன்றச் செய்யங்கள்.



குறிப்புகள்

2. உங்கள் நிழல் எப்படி இருக்கிறது என்பதைக் கான உங்களுக்கு விருப்பமா? நல்லது நீங்கள் உங்கள் நிழலை வரையுங்கள்.

அ) ஒரு வெள்ளைத் தாளை எடுத்து சுவரில் ஒட்டவும்.

ஆ) சுவரின் முன் சென்று நில்லுங்கள்

இ) யாரேனும ஒருவரிடம் உங்கள் மேல் மின்கல விளக்கால் வெளிச்சம் வீச செய்யுமாறு கூறு.

ஈ) அந்தத் தாளில் உங்கள் நிழலை மற்றொருவரை வரையச் சொல்லுங்கள்.



## 10.6.3 நாடகம்

நாம் ஏதேனும் ஒரு நாடகத்தை எழுதுவோ (அ) அதில் பங்குகொள்ளவோ முடியும் கற்பவர்கள் தங்கள் சொந்த கருத்துக்களை வசனங்கள், பாவனைகள் வழியாக நாடகத்தில் வெளிப்படுத்துகின்றனர். நாம் விரும்பினால் அவர்களின் கருத்துக்களை விளக்கச் சொல்லி ஆராய்ந்து பார்க்கலாம்.

குறிப்புகள்

அதைக் கற்பவர்களால் விவரிக்க முடியும். அவர்கள் நாடகத்தில் உள்ள சொன்றகளுட்ன மேலும் பல சொற்கனை பயன்படுத்துவார். ஆந்த வசனங்கள் எளிமையாவும், கருத்துடனும விரும்பத்தக்கதாகவும் உள்ளதா? ஒரு நாடகத்தில் இவையனைத்தும முக்கியமானதாக உள்ளது.

பாடகர் ராமா

கதாபாத்திரங்கள்:

ராமா–பாடகர்

மது–ராமாவின் மனைவி

அண்டை வீட்டார்.

ராமா: (ராமா தனது ஹார்மோனியத்துட்ன பாடலைப் பயிற்சி செய்ய அமைர்கிறார்)

ச..ரி..க..ம..ப..த..நி..ச

அண்டைவீட்டார் 1 : (ராமாவின் மனைவிடம் 1 மது உன் கணவன் பாடுவதை தயவுசெய்து நிறுத்தச் சொல். அது எனக்கு தலைவரியை ஏற்படுத்துகிறது.

அண்டைவீட்டார் 2 : அவன் தன்னை நல்ல பாடகன் என நினைக்கிறான.; ஆனால் மோசமாக உள்ளது.

அண்டைவீட்டார் 3 : அவன் க~;டப்பட்டுப் பாடுவது தவளை கத்துவது போல் உள்ளது.

அண்டைவீட்டார் 4 : மிகவும் வெறுப்பாக உள்ளது.

(அண்டைவீட்டார் வெளியேறுகின்றனர்)

ராமா : ( பாடிக் கொண்டே இருக்கிறான்)

டோ.... ஒருமான் பெண்மான் தங்கச் சூரியனின துளி ஒளி நான் அது என்னை நானே அழைப்பது.

அண்டைவீட்டார் 1 : எங்கள் காதுகளை செவிடாகாது காப்பாற்றப் பணிவாக கேட்;கிறோம்.

அண்டைவீட்டார் 2 : அவனுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும்.

அண்டைவீட்டார் 3 : அவன் பிடிவாதக்காரன்

அண்டைவீட்டார் 4 : ஒரு காலணியை அவனை நோக்கி

ராமா : இந்த கிராமத்தில் என் திறமையை ஒருவரும் புரிந்து கொள்ள வில்லை.

குறிப்புகள்

மது : (சமையலறையிலிருந்து வெளியே வந்து)

வருத்தப்படாதீர்கள் நீங்கள் தொடர்ந்து பாடுங்கள் ஒருவர் நம்மீது மற்றொரு காலணியை தூக்கி வீசும் போது நம்மிடம் ஒர இணை காலணி இருக்கும்!

1. இந்த நாடகத்திற்கு ஏற்ற வேறு என்னை தலைப்பை நீ கொடுக்க விரும்புகிறாய்?
2. இந்த நாடகத்தில் உங்களைக் கவர்ந்த கதாபாத்திரம் எது? ஏன்?
3. அ) ராமாவின் மனைவி பெயர் என்ன?

   ஆ) ராமாவின் பாடலை மது விரும்பினாளா?
4. ஒருவேளை 4வது அண்டைவீட்டார். ராமாவின் மீது காலணியை வீசும் போது அவன் முகத்தில் பட்டிருந்தால் என்ன நேர்ந்திருக்கும்? நாடகத்தை முழுமைப்படுத்துக.
5. விளையாடுகையில் உனக்கும் உன் நண்பனுக்கும் இடையே நிகழ்ச்த உரையாடலை நாடக வடிவில் எழுதுக.
6. உனக்குத் தொல்லை தரும் ஒரு பொருள் அல்லது ஒரு நபரால் உண்டாகும் சிக்கலை எவ்வாறு அமைதியான முறையில் தீர்ப்பாய்? பத்தி வடிவில் எழுதுக.
7. குழுக்களில் நாடகத்தை நடிக்கவும்.

புத்திசாலி போலா

கதாபாத்திரங்கள்: போலா – விவசாயி

தியா – போலாவின் மனைவி –

போலாவின் குழந்தை, தபு – (திருடன்)

காசிரியர் : ஒருநாள் போலா அருகிலுள்ள கிராமத்திற்குச் செல்கிறார். அவர் அடர்ந்த காட்டின் குரல் அவரை நிறுத்துகிறது.

தபு : நில், நில்! நீ நகர்ந்தால் உன்னைச் சுட்டுவிடுவேன்.

திவ்யா : நாங்கள் ஏழைகள் எங்களிடம் ஒன்றுமில்லை.

தபு : முட்டாள்...! அனைவரும் இவ்வாறுதான் கூறுகிறார்கள். உங்களிடம் உள்ளதை; தந்து விடுங்கள், இல்லையென்றால் உங்களைக் கொன்று விடுவேன்.

போலா : வேண்டாம் ... வேண்டாம் .... எங்களை விட்டுவிடு நான் என் கைப்பையை கொடுத்து விடுகிறேன்.

தபு : ஹா..ஹா....ஹா... இந்தத் துப்பாக்கியில் ஒரு குண்டும் இல்லை. உன்னை எப்படி ஏமாற்றினேன் பார்த்தியா?

போலா : ஹா...ஹா...ஹா.....

தபு : எதற்காக சிரிக்கிறாய்?

போலா: நானும் உன்னை ஏமாற்றிவிட்டேன் அந்த கைப்பையிலும் எந்தப் பணமுமில்லை.

தபு : என்னன.....?!

போலா : நீ உன்னை மிகவும் அறிவாளி என்று நினைத்து கொர்ணடிருக்கிறாய்? ஹா...ஹா...ஹா.....

1. இந்த நாடகத்திற்கு நீங்கள் தரும் வேறு தலைப்பு என்ன?
2. போலாவின் நிலைஉங்களுக்க ஏற்பட்டால் சூழ்நிலையை எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?
3. அ) தபு தன்னிடம் வைத்திருந்த பொருள் என்ன? ஏன்

   ஆ) திவ்யா தன் ஏழ்மை நிலையை வெளிப்படுத்தியதன் காரணம் என்ன?
4. போலா தன்னை ஏமாற்றியதை அறிந்த தபு வேறு குண்டுகளை எடுத்திருந்தால் என்ன நடந்திருக்கும்? நாடகத்தை நிறைவு செய்க.
5. நாடகத்தை கதை வடிவில் எழுதுக.
6. நாடகத்தில் குழுவாக பங்கு கொள்க.

## 10.7 கூட்டு மதிப்பீடு

இந்த அலகில் நாம் கற்றவையென்னவெனில் நிகழ்காலத்தி நாம் பயன்படுத்த செயல்பாடுகள் மற்றும் மதிப்பீடுகளில் மாற்றம் தேவை என்பதாகும். மதிப்பீடு என்பது பொருளை மட்டும் மதிப்பிடுவது அல்ல அதன் பிற உட்கூறுகளையும் புரிந்து கொள்வது மதிப்பிடுவது ஆராய்ந்து அறிந்து கொள்வதாகும். மேலும் ஊக்குவித்தலையும் புரிந்து கொள்ளலில் உருவாகும் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் மதிப்பிட்டு மேம்படுத்துவதும் தேவையாகிறது இந்த செயல்முறை மதிப்பீட்டை தொடர்ந்து பல நிலைகள் உள்ளன. மதிப்பீட்டை அடைவதற்கான வழிகள் அவசியம் பதிவு செய்யப்பட்டு கற்போர் கற்றலடைவுகளின் வேறுபாடுகளை ஆராயாமல் சிறப்புத் தேவை கருத வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்றும் சிறப்பாக வலியுறுத்தப்படுகிறது.

குறிப்புகள்

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 6**

1. கற்போரின அனைத்து மொழித்திறனையும மதிப்பீடு செய்யும் முறை என்ன?

   அ) கட்டுரை எழுதுதல்

   ஆ) கதை எழுதுதல்

   இ) விடுபட்ட பகுதிகளை நிரப்புதல்

   ஈ) சொல்லக் கேட்டு எழுதுதல்.

2. விடுபட்ட பகுதிகளை நிரப்புதல் செயல்பாட்டின் வழி நீங்கள் புரிந்து கொண்டதை எழுதுக.

   ........................................................................................................

   ........................................................................................................

   ........................................................................................................

## 10.8 பரிந்துரைக்கப்பட்ட குறிப்புகள்


1. NCERT 2009 Manual for Assesment NCERT, New Delhi.
2. NCERT 2008 understanding of Reading NCERT New Delhi.
3. Vidhya Bhavan Society 2009 Kits series Books for classes 1 to 8 New Delhi Macmillan.


4. தொடக்க நிலையில் குழந்தையில் தடையின்றிப் பேசும் திறன் அல்லது மொழியை நுணுக்கமாகக் கையாளும் திறன் எதற்கு முக்கியத்துவம் தருவீர்கள் ஏன்?
5. மொழி கற்றலில் மேற்கொள்ளும் மதிப்பீட்டின் முக்கிய கூறுகள் யாவை? ஏதேனும் ஒன்றை விவரிக்க.

**செயல்பாடு**

மூன்றாம் வகுப்பு நூலிலிருந்து ஏதேனும் ஒரு பத்தி, செய்யுள், நாடகம் ஆகியவற்றை தேர்ந்தெடுத்து மதிப்பீடு செய்யும் வண்ணம் வினாக்கள் அமைக்க. இப்பகுதி மிகக் குறைந்த அளவே தன் ஆலோசனைகளை கீழ்க்கண்டவாறு அளித்துள்ளது. உங்கள் அனுபவங்களின் அடிப்படையில் மேலும் இதனை விரிக்கலாம்.

1. மதிப்பீடு ஒரு பொருளை விளக்குத் தன்மையை விட, மாணவரின் அறிவுத்திறனை மேம்படுத்த உதவும் வகையில் நடத்தப்படவேண்டும்.

குறிப்புகள்

2. தொடக்க நிலையில் மாணவர் தடையின்றி பேசும் திறன், நுணுக்கமாக மொழியை கையாளுந்திறனை மேம்பட்டு நிற்கும்

3. விடுபட்ட பகுதிகளை நிரப்புதல் தேர்வை நடத்துகையில் எதை கவனத்தில்கொள்ள வேண்டும்?

4. ஐந்தாம் வகுப்பில் பாட நூலிலிருந்து ஒரு பகதியைத் தேர்ந்தெடுத்து விடுபட்ட பகதியை நிரப்புதல் தேர்வினை மாணவரின் மொழித்திறனின் உள்ள முறைகளை மதிப்பிடும் வண்ணம் நடத்துக.

5. மாணவரை குழுக்களாகப் பிரித்து நாடகக் காட்சிகளை எழுதச் செய்யுங்கள். மாணவர் எழுதிய காட்சிகளை தன்னம்பிக்கையை மதிப்பீடு செய்யவும் அதன் வழி அவர்களின் வெளிப்பாடுகளை வருகைப்படுத்தி தரப்படுத்தவும்.

## 10.9 இயல் நிறைவுப் பயிற்சிகள்

1. தற்கால மதிப்பீட்டு முறைகளால் ஏற்படும் சிக்கல்களை பெற்றோரும், ஆசிரியரும், மாணவரும் எவ்வாறு எதிர்கொள்கின்றனர்?

2. மதிப்பீடு ஆசிரியர்களின் கற்ப்புத் திட்டத்தை முறைப்படுத்த எவ்வாறு உதவுகிறது என விளக்குக.

3. கற்றலில் ஒரு குழந்தையின் முன்னேற்றமடைதலோடு, மற்றொரு குழந்தையின் முன்னேற்றமடைதலை ஒப்பிடக் கூடாது ஏன்?